Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலே சதம் 15

மெய்யென்பேர்க ஆட்டுப் பால் மா




இருமல், காசம் தொய்வு நோய் மூல வியாதி மற்றும் பலவீனம் முதலானவற்றிற்கு மிகச் சிறந்தது.

விபரங்களுக்கு:-
க. கணேசன், 53, மெயின் வீதி, கொழும்பு.

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

புத்தகம் 10 துர்முகி ஹூ பங்குனி மாதம் 11 திகதி 24-3-57 ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் பிறை 21 இதழ் 42

# திருமலே சிங்களத் தொகுதியாகும் ஆபத்து!

## கடற்படைத்தளம் மூடப்பட்டதும் தமிழர் பலம் குறைந்துவிடும்

### கைத் தொழிற் சாலேகள் நிறுவுதல் தமிழ்ப் பணக்காரர் தம் கடமை

[சுதந்திரன் நிருபர்]

திருகோணமலேயிலுள்ள கடற்படைத் தளத்தைமூடி விடுவதென்று அரசாங்கம் செய்திருக்கும் முடிவு திருகோணமலே மக்களிடையே பெரும் பீதியையும் கவலேயையும் உண்டுபண்ணியிருக்கிறது. அங்கு வேலே பார்த்து வரும் சுமார் 8000 பேர்களுடைய எதிர்காலத்தைப்பற்றி அரசாங்கம் சிறிது கூடச் சிந்தித்ததாகத் தெரியவில்லே அரசியல் நோக்கத்திற்காகத் திருகோணமலேயிலுள்ள தமிழ் பேசும் மக்கள் தொகையைக் குறைத்து, சிங்கள மக்களின் தொகையைக் கூட்டுவதே அரசாங்கத்தின் அந்தரங்க நோக்கம் என்று உள்ளூர்வாசிகள் பேசிக்கொள்ளுகிருர்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூடிய போது திருகோணமலேயிலிருந்து ஒரு வாலிபர் கூட்டம் தனி மோட்டார் வாலியில் அங்கு சென்றிருந்தது. அவ்வாலிபர் கூட்டத்தின் சார்பில் திரு எஸ். எம். முருகையா என்பவர் ஒரு நீண்ட மகஜரைத் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் சமர்ப்பித்து, திருகோணமலேயில் தமிழ் பேசும் மக்களுக்கு வரவிருக்கும் இன்னல்களேயும் இடஞ்சல்களேயும்பற்றி மத்திய செயற்குழுவிடம் எடுத்துரைத்தார்.

#### கோரிக்கைகள்

பிரஸ்தாப மகஜரில் மற்றும் பல அம்சங்களுடன் பின்வரும் கோரிக்கைகளும் இடம்பெற்றிருந்தன:

1. திருகோணமலேப்பகுதியில் தமிழ் பேசும் மக்களின் குடியேற்றத்தை வெகு விரைவில் திட்டமிட்டு அமுல் நடத்த வேண்டும். சிங்களக் குடியேற்றத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்த ஆவன செய்ய வேண்டும்.

2. திருமலேயிலுள்ள நேவி தொழிற்சாலேகள் அண்மையில் மூடப்படவிருக்கின்றன. இதனுல் வேலேயில்லாத் திண்டாட்டம் அங்கு பயங்கர ரூபத்தில் தலேயெடுக்கப் போகிறது. தற்சமயம் அங்கு சிவிப்பவர்களுள் யாழ்ப்பாணவாசிகளும், மட்டக்களப்புவாசிகளும் பெருந்தொகையினராகவுளர். வேலேயிழந்ததும் அவர்கள் தங்கள் தங்கள் தாயகம் திரும்பிவிடுவார்கள். அதன் பின்பு அரசாங்கம் சிங்கள மக்களே அங்கு குடியேற்றி தமிழ் பிரதேசம் அனேத்தையும் சிங்களப் பிரதேசமாக்க முயற்சிக்கும். இந்த நிலே ஏற்படாமல் தடுக்கத் தகுந்த திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

#### தொழிற் சாலேகள்

3. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள பெரும் பணக்காரர்களான தமிழர்களே ஒன்று சேர்த்து திருமலேயில் சில கைத்தொழிற் சாலேகளே ஆரம்பித்து அங்கு ஏற்படப்போகிற வேலேயில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். அதன் மூலம் கடற்படைத் தளத்தில் வேலேயிழப்பவர்கள் திருமலேயைவிட்டு யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் திரும்பிப் போய் விடாதபடி தடுத்து நிறுத்த வேண்டும்.

4. சுருட்டுத் தொழிற்சாலே, தீப்பெட்டித்தொழிற்சாலே, நெசவுத் தொழிற்சாலே, தேங்காய் நெய் வடிசாலே, சவர்க்காரத்தொழிற்சாலே, மீன்பிடி அபிவிருத்திச்சாலே முதலியன திருமலேயில் ஸ்தாபித்து தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும்.

#### மலே நாட்டு மக்களேக் கொண்டு வருக

5. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலே நாடு போன்ற இடங்களில் காணி நிலம் இல்லாமல் கஷ்டப்படும் மக்களே பெருவாரியாக திருமலேக்குக்கொண்டு போய் சட்டத்தை மீறியேனும் குடியேற்றி தமிழ் பேசும் மக்களின் தொகை எக்காரணம்கொண்டும் குறைந்துவிடாதபடி பாதுகாக்கவேண்டும்.

மேற்படி மகஜரை ஆழ்ந்த கவனத்தில் கொண்டு காரியம்பார்ப்பதாக திரு செல்வநாயகம் மேற்படி வாலிபர்களுக்கு உறுதி கூறினுர் என்று தெரிகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)



ஜனுப் ஏ. அஸீஸ் ஜனநாயக காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய ஸ்தாபனங்களின் தலேவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

(மகாநாட்டுச் செய்தியை 3-ம் பக்கத்தில் காண்க)

## சிறீ எதிர்ப்பாளர் மீது நடவடிக்கை எடுக்க நடுக்கம்!

### 'வழக்குத் தொடர்வதை உடனே நிறுத்துக"

### மாகாணப் போலீஸாருக்கு ஐ ஜி. பி கட்டளே

(சுதந்திரன் நிருபர்)

"ஸ்ரீபரங்கள் எடுக்கப்பட்ட சிறீ சட்டமறுப்பாளர் மீது வழக்குத் தொடர்வதை உடனடியாக நிறுத்துக' இவ்வாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சம்பந்தப்பட்ட மாகாணப் பொலிஸ் அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கும் ஓர் அவசர கட்டளேயில் குறிப்பிட்டிருப்பதாக சுதந்திரன் அந்தரங்க நிருபர் அறிவிக்கிருர்.

தமிழரசுக் கட்சித் தலேவர் திரு கு. வன்னியசிங்கம், வட்டுக்கோட்டை பிரதிநிதி திரு ஏ. அமிர்தலிங்கம், திருகோணமலேப் பிரமுகர் கப்டன் கனகசிங்கம், மட்டக்களப்பு பிரமுகர் திரு மாணிக்கம் ஆகியோர்தமிழ் இலக்கக் கார்களில் பிரயாணம் செய்தபோது அவர்களே இடைமறித்து விபரங்கள் கேட்டுக் குறித்துக் கொண்டதோடல்லாமல், அவர்களின் கார்களேயும் பிரஸ்தாப தமிழ் இலக்கத் தகடுகளுடன் பொலீஸார் படம்பிடித்தார்களல்லவா!

இந் நடவடிக்கை அவர்கள் மீது நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அவர்களேத் தண்டிக்கும் உத்தேசத்துடன் ஆரம்பத்தில்மேற்கொள்ளப்பட்டது. எனினும் பொலீஸார் அரசாங்க மேலிடத்துக்கு ஒன்றன் பின்ஒன்முக அனுப்பிவைத்த அறிக்கைகளிலெல்லாம் இது ஆபத்தில்முடியுமென்று சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

சுதந்திரன் 10-3-57 இதழில் 2-ம் பக்கத்தில் இதை நாம் கீழ்க்கண்டவாறு தந்திருந்தோம்:

"தமிழரசுக் கட்சித் தலேவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்து அவர்களே நீதி மன்றத்துக்கு இழுத்தால் அதன் விளேவுகள் பாரதூரமானதாயிருக்கலாமென்றும் அப்படி ஏதாவது அசம்பாவிதங்கள் நடக்கும் பட்சத்தில் அவற்றைச் சமாளிப்பதற்கு யாழ்ப்பாணப் பொலிஸ்படை போதுமானதாயில்லே யென்றும், ஆதலால் தற்சமயம் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது நெருப்போடு விளேயாடுவதுபோலாகுமென்றும் யாழ்ப்பாணத்துப் பொலிஸார் அரசாங்க மேலிடத்துக்கு தமது அறிக்கைகளில் அறிவுறுத்தியிருக்கிருர்களாம்"

தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலெல்லாம் தமிழரசுக் கட்சிக்குப் பிரதி தினமும் செல்வாக்கு அதிகரித்து வருவதையும், அதனுல் தமிழரசுக் கட்சியார் மீதோ அல்லது அதைச் சார்ந்தோர் மீதோ அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்குமேயானுல் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டுச் சொல்ல முடியாத விபரீதங்கள் ஏற்படக்கூடிய பயங்கர நிலே உருவாகி வருவதையும் யாழ்ப்பாணத்துப் பொலிஸாரும் ஏனேய தமிழ்ப் பிரதேசத்துப் பொலீஸாரும் மென்மேலும் அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டியதன் விளேவாகவே ஐ. ஜி. பி. மேற்படி முடிவுக்குவந்திருப்பதாகத் தெரிகிறது.

சித்திரை முதலாந் திகதி:

## 40 இலாகாக்களில் தமிழுக்கு சாவுமணி!

### எதிர்க்கும் ஊழியர்களே மாற்றத் திட்டம்

(நமது நிருபர்)

உணவு உற்பத்தி இலாகா உட்பட மொத்தம் 40 இலாகாக்களில் வருகிற ஏப்ரல் மாதம் முதலாந் திகதி தமிழுக்குச் சாவுமணியடிக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிகிறது

மேற்படி இலாகாக்கள் அனேத்திலும் பிரஸ்தாப திகதியிலிருந்து சகல நிர்வாகமும் சிங்களத்திலேயே செய்யப்பட வேண்டுமென்ற உத்தரவு அரசாங்க மேலிடத்திலிருந்து அந்தந்த இலாகாத் தலேவர்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சுதந்திரனுக்கு செய்தி கிடைத்திருக்கிறது.

பொதுவாக எல்லா இலாகாக்களிலும் குறிப்பாக உணவு உற்பத்தி இலாகாவிலும் கடமையாற்றும் அதிகாரிகள், குமாஸ்தாக்களில் பெரும்பாலோர் தமிழ் பேசுவோராகும்.

இவர்களுக்கு அரசாங்க உத்தரவு பெரும் பீதியையும் மனக்கசப்பையும் ஏற்படுத்தியிருப்பதாகவும், இதனுல் எது எப்படி வரினும் தாம் முடிந்தவரையில் தமிழை தமது இலாகா சம்பந்தப்பட்ட நிர்வாக அலுவல்களுக்கு உபயோகித்தே தீருவோமென்று உறுதிபூண்டிருப்பதாகவும் தெரிகிறது.

இதன் விளேவாகப் பிரஸ்தாப 40 இலாகாக்களிலும் அதிகாரிகள், குமாஸ்தாக்கள் உத்தியோக நியமனத்தில் பல மாறுதல்களேச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# பொருளாதார ரீதியில் மணப் பொருத்தம் பார்க்கும் பிற்போக்கான வழக்கம்

## பண்டை தமிழகத்தில் இது தலை காட்டியதில்லை; இடையிட்டு வந்து இனத்தைக் கருவறுக்கிறது

### சீதன விஷயத்தில் பெரும்பாலும் தவறிழைப்பவர்கள் படித்தவர்களே

தமிழ் மறை உணர்ந்து, கேடில் விழுமச்செல்வம் எதுவென அறிந்து, பல நூற்றுண்டுகட்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ப் பெருங்குடி மக்களின் செவ்விய இல்வாழ்வு செழுமைமிக்கது.

அன்று......! திருநயத்தக்க பண்பும் அழகும் நிறைந்த நங்கையரை மணந்து கொள்ள முன்வருவோர், அறிவு நிரம்பிய சான்றேர் களது உதவியை நாடி அவர்களைத் துணையாகக் கொண்டு பெண்ணின் பெற்றேர்களிடம் சென்று தம் பாலுள்ள அருங்குணங்களை அறிவுறுத்தி அவர்கள் விருப்பம் பெற்று மாலை சூடி மங்கையருடன் மனம் ஒத்து வாழ்ந்தார்கள் என்று இலக்கியங்கள் இயம்புகின்றன.

#### சீதனச் சீர்கேடு இடையிட்டு வந்தது

இன்று......! இந்நிலை முற்றிலும் மாறுபட்டுள்ளது. இம்மாற்றத்தால் இன்றைய பெண்ணினம் சீர்கேடுற்று வருகின்றது. இந்நிலை வளர்ந்தால் அதனுல் விளையும் கேடு தமிழ் இனத்தையே நலிவடையச் செய்யும். இன்று நாம் காண்கின்றேம் — அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் நிறைந்த எம் இனச் சகோதரிகள் பலர் வயது நிரம்பியும், வதுவை புரிந்து வாழ்வு நடாத்த வசதியற்றவர்களாகயிருப்பதை!

ஏன் இந்நிலை எனக் கேட்கத் தோன்றும். அழகரசியர்களை அந்நிலையிலாக்கி வைத்திருப்பது கொடிய 'சீதனப் பேய்!' இது நம் முன்னேர் களது பண்பாடல்ல. என்ருலும், இந்தப் பேய் ஈழத்திலுறையும் தமிழினத்தவரை தனக்கு அடிமையாக்கிக் கொண்டுவிட்டது.

#### பெண்ணுக்கு கற்பெனும் உறுதி

பெற்றேர்கள் சிந்திக்க வேண்டும், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என வினவிய பொய்யா மொழியார், அடுத்த வரியிலே பொன்னும் பொருளும் பெற்றிருப்பின் என்று கூற வில்லை; கற்பெனும் உறுதிதான் வேண்டும் என்றே கூறிப் போந்துள்ளார்.

தெய்வப் புலவரின் கூற்றுெப்ப, இன்றும் நம்மினப் பெண்டிர் பலர் கற்பு நெறி வழுவாது வாழ்ந்து வருகின்றனர். மறக்கவில்லை அவர்கள்! ஆனுல் பெற்றேர்கள் மறந்து விட்டனர் தமிழ் மறையின் வாக்கை! நாரிகம் என்ற பெயரிலே அநாகரிகமான கொள்கைகளைப் பெரியவர்களான பெற்றேரும், ஆடம்பர வாழ்வை விரும்பும் ஆடவர்களும் மேற்கொண்டு நிறையச் சீதனம் பெறவேண்டும் என்ற எண்ணத்தினுல் பைந்தமிழ்க் குமரியரது வாழ்வைச் சிதைவுபடுத்திவிடுகின்றனர்.

#### பொருளாதாரரீதியில் பொருத்தம்

பெண்ணின் பெருமையறியாது, சுயநல நோக்குடன் பெண்ணினத்தைப் பெற்றேர்களே தாழ்வுபடுத்தி வருகின்றனர். பெண்ணுக்குத் துணைவனைத் தேடும்போது பொருளாதாரரீதியில் பொருத்தம் பார்க்கின்றனர்.

வாழ்க்கைக்குப் பொருள் தேவைதான். யாருடைய வாழ்விற்கு யாருடைய பொருளை எதிர்பார்ப்பது? இதுபற்றி உணராமல், உள்ளத்திலே உயர்ந்த எண்ணத்திற்கு இடமளிக்காமல், பிறருடைய தேட்டத்தைக் கொண்டு தாம் வாழ எண்ணுகின்றனர்.

#### வள்ளுவர் கூற்று

ஆணுக்குப் பெண் அடிமையல்ல—கணவனுக்கு மனைவி கண்போன்றவள்! என்ருலும் இவர்களது ஐக்கியத்தைக் குலைக்க 'கரு'வாக இருப்பது அவள் கொண்டு வரும் சீதனம்.

சீதனம் கொண்டு வந்த மனைவி தன்னைக் காத்துக் கொண்டாலும் "தற்கொண்டாரை" பேணுவதில் தவறிவிட நேரிடுகின்றது. அவளது கணவனும், மனைவியிடத்து தாழ்ந்து அஞ்சி ஆண்மையழிந்துவிடுகின்ருன்.

பெண்ணின் இறைமையைப் புலப்படுத்தி பெண்ணை வாழ்க்கைத் துணை நலம் என்று சிறப்பித்துள்ள திருவள்ளுவர் பெருமான், பெண் வழிச் சேரல்பற்றிப் பின்வருமாறுகூறுகின்ருர்:

> "அறவினையும் ஆன்ற
> பொருளும் பிறவினையும்
> பெண் ஏவல் செய்வார்கண்
> இல்"

கணவனும் மனைவியும் இவ்வாறு நிலைதவற குறிப்பாக சீதனமே காரணம்.

#### சீதனம் கேட்போருக்கு ஏன் திருமணம்?

சீதனம் கொடுத்து மணம் முடித்துக் கொடுக்க வசதியில்லாத பெற்றேர், தம் மகளைப் பருவத்தில் பலனடையச் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கத்தில் வாடுகின்றனர். பலர் தீய வழிகளிலாவது பணம் சேமித்துவிட முயற்சிப்பது முண்டு.

அழகு மோகலா

இந்நிலையிலுள்ள குடும்பங்களிற் பிறந்த சகோதரிகள், தம் அறிவால் எவ்வளவோ உறுதியுடையவர்களாகயிருந்து வந்தாலும், பருவம் சில தீமைகளுக்கு ஆளாக்கிவிடுகிறது அவர்களை.

இவற்றை எண்ணிப் பார்க்கும்போது, தன் உழைப்பினுல் தன் துணைவியைப் பராமரித்துக்கொள்ளத் துணிவில்லாத ஆடவர்களுக்கு திருமணம் அவசியந்தானு என்று கேட்கத் தோன்றுகிறது.

#### படித்தவர்களின் கொடுமை

பாமரர்களைவிட, படித்தவர்களிடமே சீதனம் முக்கிய இடம் பெறுகிறது. படித்த ஆடவர் தாம் தாம் பெற்றிருக்கும் உத்தியோகத்திற்குத் தகுந்தவாறு சீதனத் தொகையை நிர்ணயித்துக்கொள்கின்றனர்.

ஆங்கிலத்திலே, "Love" என்ற சொல்லைக் கண்டு, அதைச் சிரமப்பட்டு தமிழிலே காதல் என அறிந்து, அதன் உட்பொருள் உணராது நங்கை மடவன்னங்களை நயவஞ்சகமாக ஏமாற்றி அவர்கள்பாலுள்ள தெய்விகக் கற்பையும் குலைத்துவிட்டு, முடிவில் "பெற்றேர் விரும்பவில்லை, என் செய்வோம்! நாம் அடுத்த பிறப்பிலாவது ஒன்றுபடுவோம்" என்று கூறி நங்கையர்களை அழித்துவிடும் கொடுமை மிக்கவர்களும் இன்று நாட்டிலே மலிந்துவிட்டனர்.

#### சில பெற்றேர் நிலை

பெண்ணினம் சீர்கேடுற்ற இனம் நாடு இவைகள் உய்வு பெறலரிது. பெண்ணைப் பெற்று, வளர்த்து, சீதனம் கொடுத்து மணம் முடித்துக் கொடுக்கவியலாத காரணத்தால் தம் மகளையே வெறுப்புடன் நினைக்கும் பெற்றேர்களும், "என் மகன் அரசாங்கத்தில் உயர் பதவி வகிப்பவன்; ஆனதால் ஐம்பதினுயிரம் ரூபாய் ரொக்கமாகச் சீதனம் தந்தால் என் மகனுக்கு உன் மகளைத் திருமணம் செய்துகொள்வோம்" என்று பேரம் பேசுகின்ற ஆண்மகனைப் பெற்றேரும் தமது தவறை உணர பண்டைத் தமிழக நல்வாழ்வுகளை எடுத்துக்காட்டும் புறநானூறு எனும் சங்க இலக்கியத்திலே ஒரு காட்சி இதோ:

#### மகட்கொடை வேண்டல்

வீர மரபில் தோன்றிய பெருங்குடி மகனெருவன், மகள் ஒருத்தியைப் பெற்று வைத்திருக்கின்ருன். அவள் அறிவும் பண்பும் அழகும் நிறைந்து காண்பவர் உள்ளங்களைக் கவர்ந்துவிடக் கூடியவாறமைந்தவள். இத்தகு திறனுடைய மங்கையை மணம் முடிக்க எண்ணியவர் பலர்!

ஒருநாள் திருமிக்க அவ்வூர்த் தலைவனுன், அவனிடம் மகட் கொடை வேண்டி பலரும் சென்று கேட்டனர். அவ்வாறு மகட் கொடை வேண்டிப் போந்தவர்களுள் வேந்தர் சிலரும் உள்ளனராம்.

மற மாண்புமிக்க தலைவன்—பெண்ணின் தந்தை; பார்த்தான். அங்கு பெண் கேட்டுப் போயிருப்பவர்களில் யாரிடத்தும் அருங்குணங்கள் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை!

#### மங்கையின் தந்தை மறுப்பு

வேந்தர் பகை வருமே என்றுகூட நினையாமல், தன் நெஞ்சத்தே எழுந்த நற்கருத்தைக் கூறுகின்ருன் மகளை மண முடித்துத் தரும்படி கேட்டுச் சென்றிருப்பவர்களை நோக்கி.

மீன்களை விற்று அதற்குப் பதிலாக நெற்குவைகளைப் பெற்று வீடும் உயர்ந்த தோணிகளும் பிரித்தறியவியலாதவாறு காண்போரை மயங்கச் செய்யும்படி வீட்டினருகே, மிளகு மூடைகள் குவிக்கப்பெற்று ஆரவாரத்தையுடைய கரையினின்றும் பிரித்தறியவியலாதபடி. கப்பல்களில் கொண்டு வந்த பொன்னுன பொருட்களை தோணிகளிற் கொண்டு வந்து கரை சேர்த்து' மலைபடு பொருளும் கடல்படு பொருளும் கலந்து இரவலர்களுக்கு அளிக்கும், தண்ணீரைவிட

(6-ம் பக்கம் பார்க்க)

# குடும்ப வாழ்க்கை, ஆண்-பெண் உறவு பற்றிப் பெண்களுக்குப் போதனை

## பள்ளிப் பருவத்தில் ஆரம்பிக்க கற்பத்தடை மகாநாட்டில் யோசனை

**"பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே பெண்களுக்கு குடும்ப வாழ்க்கைபற்றியும், ஆண் — பெண் உறவுபற்றியும், கர்ப்பத் தடைபற்றியும் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும்" என்று கல்கத்தாவில் நடைபெற்ற கர்ப்பத்தடை மகாநாட்டில் யோசனை கூறப்பட்டது.**

3 வது அகில இந்திய கர்ப்பத்தடை மகாநாடு கல்கத்தாவில், திட்ட கமிஷன் மெம்பர் திரு ஜே. கி. கோஷ் தலைமையில் நடந்தது. திரு கோஷ் பேசுகையில் கூறியதாவது:

மக்களின் சுகாதாரத்துக்கும், நல்வாழ்வுக்கும் கர்ப்பத்தடை ரொம்ப அவசியமானது.

#### கர்ப்பத்தடை அகாதமி

கர்ப்பத்தடைபற்றிப் பிரச்சாரம் செய்யவும் நடவடிக்கை எடுக்கவும் டெல்லி சர்க்கார் ஒரு ஸ்தாபனத்தை நடத்துகிருர்கள். அதே போல எல்லா ராஜ்ய சர்க்கார்களும் கர்ப்பத்தடை போர்டுகளை நடத்துவார்கள். கர்ப்பத் தடைக்காக ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 300 ஊர்களிலும், இரண்டாயிரம் கிராமங்களிலும் கர்ப்பத்தடை நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்.

30 நகரங்களுக்கு ஒரு விளம்பர மோட்டார் வீதம் கொடுக்கப்படும். அந்த மோட்டார் மூலம் கர்ப்பத்தடை பிரசாரம் செய்யப்படும்.

#### விவாகமானபெண்கள் ஆதரவு

கர்ப்பத்தடை முறைக்கு பெண்கள் பெருவாரியாக ஆதரவு கொடுக்கிருர்கள். கிராமப் பெண்களும் ஆதரிக்கிருர்கள். அடிக்கடி குழந்தை பிறப்பதை தடுப்பது எப்படி என்று கர்ப்பத்தடை நிலையங்களில் கல்யாணம் ஆன பெண்கள் நிறையப்பேர் வந்து ஆலோசனை கேட்கிருர்கள்.

பெண்களுக்கு படிப்பு அதிகமாக, அதிகமாக அவர்கள் குழந்தை பெறுவதும் குறைகிறது. ஏனென்ருல் தாராளமாக செலவு செய்வதற்கு வசதியாக அவர்கள் குறைவான குழந்தை பெறுவதை விரும்புகிருர்கள்.

#### கர்ப்பத்தடை கருவிகள்

புது கர்ப்பத்தடை முறைகளைக் கண்டுபிடிக்கும் வரை கர்ப்பத்தடை முழு வெற்றி அடையாது! குறைந்த செலவில் கர்ப்பத்தடை செய்து கொள்ளும்வகையில் இருக்க வேண்டும்! அல்லது இலவசமாக பெண்களுக்கு கர்ப்பத்தடை கருவிகளை 'சப்ளை' செய்யும் வகையில் புதுக் கருவியை கண்டுபிடிக்கவேண்டும்.

ஒண்டுக் குடித்தனம், போதிய விளக்கு வசதி இல்லாமை ஆகிய குறைகள் இருந்தபோதிலும் அதனுல் பாதிக்காத வகையில் புது மாதிரியான கற்பத் தடை முறையை கண்டு பிடிக்க வேண்டும். இப்போது இருக்கிற முறைகள் அப்படி இல்லை.

பெண்களுக்கு மலட்டுத்தனத்தை உண்டாக்கக்கூடிய மாத்திரைகளை கண்டுபிடிக்க வேண்டும். அதுதான் சிறந்த கர்ப்பத்தடை முறை! அந்த மாதிரி மாத்திரையை கண்டு ஆராய்ச்சி செய்து வருகிருர்கள்.

இவ்வாறு கல்கத்தாவில் கர்ப்பத்தடை மகாநாட்டில் தலைமை வகித்த திட்டக் கமிஷன்மெம்பர் திரு ஜே. கி. கோஷ் கூறிமுடித்தார்.

## ஆனந்தா லேகியம்

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75 சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூ 5-50 சிறியது ரூ 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா.

**ஆனந்தா வைத்தியசாலை,**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் வளரத் தமிழைத் தாழ்த்துவதா?

—ஜனாப். ஏ. அஸீஸ்

## சமூக, சமயத்துவேஷங்களைகிளப்பும்

### அரசாங்கம் தொடர்ந்து பதவியிலிருக்க முடியாது

—திரு. சுப்பையா

## உங்கள் உரிமைகளுக்காகத் தமிழரசுக் கட்சி என்றும் பாடுபடத்தயார்

—திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

## ஜனநாயக காங்கிரஸின் 17-வது வருடாந்த மாநாட்டில் தலைவர்கள் உரிமை முழக்கம்

**"எம். ஈ. பி. அரசாங்கம் ஒரு வகுப்புவாத இனத்துவேஷக் கொள்கையைப் பின்பற்றிவருகிறது. நாட்டின் சகல முற்போக்கு சக்திகளினதும் எதிர்ப்புக்கிடையே இவ்வரசாங்கம் சிங்களம் மட்டும் மசோதாவை நிறைவேற்றியுள்ளது. இதனால் தமிழுக்கு இதுவரை இருந்துவந்த அந்தஸ்து கூட அழிக்கப்பட்டுவிட்டது. இது வரவேற்கக்கூடியதல்ல.**

**இந்த நாட்டிலே தமிழ் மொழிக்கு அதற்குரிய ஸ்தானம் அளிக்கப்படவேண்டுமென்றும் அந்த மொழியை எந்த விதத்திலும் தாழ்த்தி விடக்கூடாதென்றும் கோருகிறேம்."**

இவ்வாறு நாவலப்பிட்டி ஆபிரகாம் சிங்ஹோ நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஜனநாயக காங்கிரஸின் 17 வது வருடாந்த மகாநாட்டில் அதன் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் பேசும் போது குறிப்பிட்டார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற மகாநாடு வெள்ளியன்று தொண்டர் படையினரின் அணிவகுப்புடன் ஆரம்பமாயிற்று. தலைவர் ஜனாப் அஸீஸ் மண்டபத்துக்கு வந்ததும் தொண்டர்கள் அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தினர். தொண்டர் தலைவர் திரு எஸ். வி. ஆறுமுகம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மகாநாட்டின் இரண்டாம் நாளான சனியன்று நிகழ்ச்சிகளில் தமிழரசுத் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு வி. ஏ. கந்தையா எம். பி. யும். மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

### தமிழரசுத் தலைவர் பேச்சு

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு செல்வநாயகம் பேசுகையில்:

"இன்றைய அரசாங்கக் கட்சியான மக்கள் முன்னணியின் கொள்கைகள் உங்களைப் பலமாகத்தாக்கியுள்ளன.

உங்களின் உரிமைகளுக்காக தமிழரசுக் கட்சி என்றும் பாடுபடத் தயாராக இருக்கிறது. நீங்கள் வாக்குரிமையைப் பெறவேண்டுமென்பது எங்கள் கட்சி நோக்கங்களில் ஒன்ருகும். உங்கள்உரிமைக்காக நாங்கள் என்றென்றும் பாடுபடுவோம்" என்று கூறினர்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு சுப்பையா வரவேற்புரை வழங்கினர்.

### திரு சுப்பையா வரவேற்புரை

திரு சுப்பையா தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

"இன்று ஆட்சியாளரின் சிங்களம் மட்டும் சட்டத்தால் நாட்டு மக்கள் இரு கூறுகப் பிரிந்து ஒருவருக்கொருவர் கசப்பும் துவேஷமும்கொண்டு நிற்கிருர்கள். செழிப்பானதோர் சூழ்நிலையில் மக்கள் அனைவரும் பரஸ்பரம் நல்லெண்ணத்தோடும் ஒற்றுமையோடும் சமாதானமாக வாழவேண்டிய சந்தர்ப்பத்தில் இப்படியான சீர்கேடு ஏற்பட்டிருப்பது பெரும் துரதிர்ஷ்டமாகும்.

இதுபற்றி நாம் மிக மிக வருந்துகிறேம். சிறுபான்மை மக்களின் பீதியையும் அவநம்பிக்கையையும் போக்க அரசாங்கம் அவர்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகளைச் சட்டத்தில்பிரகடனப்படுத்தவேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்."

இலங்கைஇந்தியர்பிரச்னை பற்றியும் திரு சுப்பையா தமது பேச்சில் குறிப்பிட்டுவிட்டு, இறுதியில் சொன்னதாவது:

"நாட்டின் தேசிய பொருளாதார அபிவிருத்தி வேலைகளைச் செய்வதில் அக்கறை காட்டாது, சமூக சமயத் துவேஷங்களைக் கிளப்பிவிட்டு அந்த அடிப்படையிலே அதிகாரத்தில் இருக்க எண்ணும் எந்த அரசாங்கமும் நீண்டநாள் பதவி வகிக்க முடியாது."

### திரு வி. ஏ. கந்தையா

திரு வி. ஏ. கந்தையா பேசுகையில், "தமிழர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் இரு திடமான நோக்கங்களைக் கொண்டிருப்பர். ஒன்று விடாமுயற்சி. மற்றது மொழிப்பற்று. எதை நாம் செய்யவேண்டுமோ அதை உயிருக்கும் அஞ்சாத முறையில் செய்யத் தயாராக வேண்டும். இழந்த உரிமைகளைப் பெற தமிழர்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். உயிர் போனலும் உரிமைகளைப் பெற்றே தீருவோம்" என்று கூறினர்.

### நாவலப்பிட்டி நகர சபை தலைவர்

நாவலப்பிட்டி நகரசபைத் தலைவர் திரு டேவிட் பெரேரா ஆபிரகாம் சிங்ஹோ நகரைத் திறந்து வைத்துப் பேசினர். அவர் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:

"உயிர்த் தியாகம் செய்த தொழிலாளி ஆபிரகாம் சிங்ஹோவின் பெயரால் நிருமாணிக்கப்பட்ட நகரில் நடக்கும் இம்மகாநாடு நாவலப்பிட்டியின் சரித்திரத்திலேயே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதைத் திறந்து வைப்பதில் நான் பெருமையடைகிறேன். தொழிலாளர்களுக்குப் பற்ருக்குறைச் சம்பளந்தான் கிடைத்து வருகிறது. சேமலாப நிதியோ, பென்சனே அவர்களுக்குக் கிடையாது. நூறு பேரில் ஒருவருக்குத்தான் உரிமை கூடக் கிடைக்கிறது. தொழிலாளர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு ஒன்றுசேர்ந்து பாடுபட வேண்டும்."

நகரசபை உபதலைவர் ஜனாப் பஹுர்தீனும் கூட்டத்தில் பேசினர்.

### கொடியேற்றமும் கொடிவணக்கமும்

அன்றைய தினம் திரு சாலமன் காங்கிரஸ் கொடியை ஏற்றிவைத்தார். திருமதி கோகிலம் சுப்பையா கொடி வணக்கப் பாடல்கள் பாடினர்.

### ஜனாப் அஸீஸ் தலைமை உரை

தலைவர் ஜனாப் அஸீஸ் தமது தலைமை உரையில் தாம் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதற்கு நன்றி தெரிவித்துவிட்டு, நாட்டின் கடந்தகால, நிகழ்கால அரசியல் சூழ்நிலைகளை விளக்கியும், சர்வதேசப் பிரச்னைகளைக் குறித்தும் பேசினர். அவர் தமது தலைமை உரையில் மேலும் சொன்னதாவது:

### பிரஜாஉரிமை

"இந்திய வம்சாவழியினரின் பிரஜா உரிமைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கொண்டுவந்துள்ள பிரஜா உரிமைச் சட்டம் உதவாது. இதுவரை இச்சட்டம் அதைச் செய்யவில்லை. பிரஜா உரிமைச் சட்டத்தின் ஷரத்துக்கள் மனுதார்களுக்கு அவ்வுரிமையை நிராகரிக்கும் நோக்கத்துடன் அதில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவே தவிர உரிமை வழங்குவதற்கல்ல.

பிரஜா உரிமைப் பிரச்னை சம்பந்தமாக இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினரின் பிரதிநிதிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடத்திஞல் இப்பிரச்னையைத் தீர்க்க முடியும். இவ்விஷயத்தில் ஒரு திருப்திகரமான முடிவைச் செய்வதற்கு இப்பிரதிநிதிகள்தான் உதவி செய்ய முடியும்.

### சிங்களம் மட்டும் சட்டம்

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் சிங்களத்தை மட்டும் இலங்கையின் அரசகரும மொழியாக்கும் சட்டத்தை நிறைவேற்றி, அதுவரை தமிழ்அனுபவித்து வந்த சமஅந்தஸ்தை நீக்கிவிட்டது. அரசாங்கம் வாய்மொழியாக உறுதிமொழிகளும், உத்தரவாதங்களும் அளித்தபோதிலும், இச்சட்டநிறைவேற்றம் தமிழ்ப் பேசும் மக்களின் மனதில் தங்களுடைய அரசியல் பொருளாதார நலன்களின் பாதுகாப்பைக் குறித்துச் சந்தேகங்களை உண்டாக்கியது.

தமிழ்ப் பேசும் மக்களைப் பெரும்பான்மை அங்கத்தினராய்க் கொண்டுள்ள நமது ஸ்தாபனம் இச்சட்டம் நமது ஜீவாதாரமான உரிமைகளுக்கே உலைவைத்து விட்டது என்று கருதுகிறது.

இந்த நாட்டிலே தமிழ் மொழிக்கு அதற்குரிய ஸ்தானம் அளிக்கப்படவேண்டுமென்றும், அந்த மொழியை எவ்வகையிலும் தாழ்த்தி விடக்கூடாதென்றும் நாங்கள் கோருகின்றேம்.

### தமிழ் எப்படிப் பிழைக்கும்?

சிங்கள மொழி உலகத்தில் வேறெங்கும் பேசப்படாததால் முதலில் அதைப் பாதுகாப்பதற்காகவும் அரசாங்க ஆதரவின்கீழ் அதன் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்காகவுமே மொழிச்சட்டம் நிறைவேற்றப்பட்டதென்று கூறப்படுகிறது. பெரும்பான்மை வகுப்பாரின் பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதற்காக மொழிச் சட்டம்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க 'கெசட்' பத்திரிகையில்

### சிங்களத்தில் அறிவித்தல்கள்-விளம்பரங்கள்!

## தமிழ் சிறிதளவும் இடம் பெருது

**இதுவரை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டு வந்த அரசாங்க 'கெசட்' பத்திரிகை இனிமேல் சிங்களத்தில்-மட்டும் வெளிவருவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இதற்கான உத்தரவைப் பிரதமர் பண்டாரநாயகாவே பிறப்பித்துள்ளார்.**

அரசாங்க 'கெசட்' பத்திரிகையில் வெளியிடப்படும் கீழ்காணும் அறிவித்தல்களையும் விளம்பரங்களையும் சிங்களத்தில் பிரசுரிக்க வேண்டும் என்று பிரதமர் தீர்மானித்துள்ளார்.

1. காலி வேலைகள்
2. பரீட்சைகள்—முடிவு முதலியன
3. 'டெண்டர்' கோரும் விளம்பரங்கள்
4. குத்தகை ஆயம் முதலானவை.
5. விற்பனை
6. பிற அறிவித்தல்கள்

மேற்படி சிங்களப் பிரசுரங்களோடு அவற்றின் சாராம்சத்தைமட்டுமே ஆங்கிலத்தில் பிரசுரிக்க வேண்டுமென்றும் அவை போதுமானதாயில்லையென்று சம்பந்தப்பட்ட இலாகாத் தலைவர்கள் கருதினுல் குறிப்பிட்ட விளம்பரத்தையோ அல்லது அறிவித்தலையோ முழுமையாக ஆங்கிலத்தில் பிரசுரிக்கலாம் என்றும் அவர் தீர்மானித்திருக்கிருர்.

இந்த மாற்றத்தால் அரசாங்க அச்சகத்துக்கும் சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கும் இடைஞ்சல் ஏற்படுமாயின் மேற்காட்டியவற்றுள் ஆரம்பத்தில் 'டெண்டர்'கோரும் விளம்பரங்களையும் பிற அறிவித்தல்களையு மேனும் சிங்களத்தில் பிரசுரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டிருக்கிருர்.

இது விஷயத்தை அரசாங்க பாஷைக் கமிஷனர் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் இலாகாத் தலைவர்களுக்கும் அனுப்பியுள்ள ஓர் சுற்றறிக்கைமூலம் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப சுற்றறிக்கையில் தமிழைப்பற்றிய குறிப்பு எதுவுமில்லை.


## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

### நிதி திரட்டுவதுபற்றி அறிக்கை

தமிழரசுக் கட்சிக்கு நிதி திரட்டுவதாகச் சொல்லி பல இடங்களில் கட்சியுடன் சிறிதும் தொடர்பில்லாதவர்கள் நிதி சேகரிப்பதாகத் தெரியவருகிறது. நிதியுதவுபவர்கள் கீழ் கண்டவைகளை அவதானித்து நிதியுதவினுல்தான் பணம் கட்சிக்குக் கிடைக்கும்.

(1) பணம் சேகரிப்பதற்கு அச்சிட்ட பத்திரங்கள் மட்டுமே உபயோகிக்கப்படும். இவற்றில் கட்சித் தலைவரின் அல்லது தனாதிகாரிகள் ஒருவரின் கையொப்பம் இருக்கவேண்டும். அத்துடன் கட்சியின் முத்திரையும்பொறிக்கப்பட்டிருக்கவேண்டும். பணம்கொடுத்து 2 வாரத்துக்குள் கட்சியிலிருந்து அச்சிட்ட(ரசீது) பற்றுச்சீட்டு வருகிறதா என்று கவனித்துக்கொள்ளவும். யார் என்று தெரியாத எவருக்கும் பத்திரத்தில் கையொப்பமிட்டு பணம் கொடுக்கவேண்டாம்.

(2) 1 ரூபா, 2 ரூபா, 5 ரூபா, 10 ரூபா என அச்சிடப்பட்ட 25 பற்றுச்சீட்டுகளடங்கிய புத்தகங்களில், (பற்றுச்சீட்டின் பின்புறத்தில் தலைவரின் அல்லது தனாதிகாரியின் பெயர் முத்திரை பொறித்து அல்லது கையொப்பத்துடன்) விரும்பிய தொகை கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெறலாம். புத்தகத்திலிருந்து முன்னதாகவே கிழித்தெடுத்த பத்திரத்துக்குப் பணம் கொடுக்கவேண்டாம்.

(3) விரும்பியவர்கள் பணத்தை நேராக கீழ் கண்ட விலாசங்கள் எவற்றுக்கும் அனுப்பி வைக்கலாம்.

(அ) S. J. V. செல்வநாயகம், (கூட்டு தனாதிகாரி) 16, அல்பிறட்ஹவுஸ்கார்டன், கொழும்பு-3.

(ஆ) V. நவரத்தினம், (கூட்டு தனாதிகாரி) 261/30, ஹல்ஸ்டோப் கார்டன், கொழும்பு-12.

(இ) தமிழரசுக் கட்சி காரியாலயம், 194 A, தட்டா தெரு, கொழும்பு—12.

(ஈ) கு. வன்னியசிங்கம் (தலைவர்) 47, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

Advt.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக் கவலையை மாற்றுவதெப்படி?

## சிந்தனை செவ்விய வழியில் சென்றால் 92 வீதமான கவலை ஏற்படாது

## துணைவியை இழந்து கலங்குபவனை தேற்ற அனுதாபம் தெரிப்பது சரியா?

மனக் கவலை மனிதனின் மகா எதிரி. இது ஒரு வியாதியுங்கூட. எந்த டாக்டராலும் மாற்ற முடியாத பயங்கர வியாதி. மனிதனின் சக்தியை வீணில் வேண்டாத வழியில் விரயமாக்கி, சுகத்தைக் கெடுத்து, வாழ்க்கையையே தாங்க முடியாத பெருஞ் சுமையாக்கிவிடும் கோர வியாதி இது. இதைக் குணப்படுத்த நோயாளி ஒருவராலேயே முடியும்.

நோயைத் தீர்ப்பதானால் அதன் ஆரம்பம், வளர்ச்சி பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா? கவலையின் இருப்பிடம் உள்ளம், பிறப்பிடம் சிந்தனையின் தவறான பாதை. அதாவது மனிதன் வேண்டாத விஷயங்களைப் பற்றி விபரீதமாகச் சிந்திப்பதன் விளைவாக கவலை அரும்புகிறது. எனவே சிந்தனையைச் செவ்விய வழியில் செலுத்த ஆரம்பித்தால் கவலை அரும்ப நேராது. அப்போது உலகம் இன்பம் மலிந்ததாகவும் வாழ்க்கை விரும்பத்தக்கதாகவும் தோன்றும்.

### கவலை கோழைக்கு மட்டுமல்ல

மனக் கவலையைத் தவிர்ப்பதற்கு வழிவகைகளைக் கையாள விரும்புபவர்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயம் ஒன்றுண்டு. அனேகமாக பலவீனமானவர்களுக்கு மனக் கவலை உண்டாகிறது என்ற தப்பெண்ணம் பலருக்கு இருந்து வருகிறது.

மறத்தமிழ் வீரன் கட்டப்பொம்மன் வீரபாண்டியன் தொடக்கம் மகா அலெக்சாந்தர்வரையுள்ள அனைவருக்குமே கவலை இருக்கவே இருந்திருக்கிறது. எனவே கவலைக்கும், வீரத்துக்கும் கோழைத்தனத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

### கவலையின் ஆயுள்

கவலையின் இருப்பிடம் உள்ளமென்றும் பிறப்பிடம் சிந்தனையென்றும் முதலில் சொன்னேம். இவையிரண்டும் உள்ளவன்தான் மனிதன். அவனுக்குக் கவலை இருப்பதும் இயற்கை. ஆனல் அந்தக் கவலை பரிணமம் அடைந்து அவன் வாழ்க்கையைப் பாழாக்காதுஇருக்கச் செய்வதிலேயே அவனின் திறமை தங்கியிருக்கிறதே தவிர அதை முற்றாக ஒழிப்பதிலல்ல. ஏனெனில் மனிதன் உயிரோடு இருக்கும்வரை-உள்ளமென்றுஒன்றும் சிந்தனையும் இருக்கும் வரை கவலையும் இருக்கவே செய்யும்.

கவலை எந்த எந்த வகையில் வந்து சேருகின்றது என்பதைத் தெரிந்துகொண்டால் அதைக் குறைத்துக்கொள்வது இலகுவாக முடியும். இதை வீதாசாரப்படி பார்ப்போம். நடவாத நடக்க, முடியாத விஷயங்களையிட்டுச் சுமார் 40 வீதமும், (எதனுலும் எந்தவிதத்திலும் தடுக்க முடியாது) நடந்து முடிந்த விஷயங்களைப்பற்றிச் சுமார் 80 வீதமும், அனுவசியமாக நமது தேகாரோக்கியம் குறித்து சுமார் 12 வீதமும், சின்னஞ்சிறு விஷயங்களைப்பற்றிச் சுமார்10 வீதமும், உண்மையாகவே கவலைப்பட வேண்டிய விஷயங்கள்பற்றிச் சுமார் 8 வீதமும் நரம் கவலைப்பட்டுக்கொண்டே வருகிறேம்.

### 92 வீதமான கவலைகள் அனுவசியமானவை

இந்த வீதாசாரக் குறிப்பைக் கூர்ந்து பார்க்கும் ஒருவர் தான் எவ்வளவு தூரம் வீணில் வேண்டாத விஷயத்தைப்பற்றிக் கவலைப்படுகிறேன் என்பதைத் தெரிந்துகொள்வார். ஒருவேளை உடனேயே அவருடைய 92 வீதமான கவலைகள் பறந்து போகலாம். அப்படி நடந்துவிட்டால் அதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் நூற்றுக்கு 99 வீதமானேர் வேண்டாத விஷயங்களையிட்டு வீணில் கவலைப்படுபவர்கள் தானே. ஒரு உதாரணம்:

அன்று பின்நேரம் றெயில்வே ஸ்டேஷனில் இருந்த 'பெஞ்சி'மீது உட்கார்ந்திருந்தேன். அருகில் ஒரு நண்பரும் உட்கார்ந்திருந்தார். அன்று வண்டி வர வேண்டிய நேரம் கழிந்தும் வந்ததாயில்லை. வெள்ளப் பெருக்கின் காரணமாக இடையே உள்ள ஸ்டேஷன் ஒன்றில் வெள்ளம் வடியும் வரை-சுமார் ஒரு மணி நேரம்வரை வண்டி நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டது.

அருகில் இருந்த நண்பர் எதையோ பறிகொடுத்தவர் போலத் துடித்தார். நிமிஷத்துக்கு நிமிஷம் வண்டியை எதிர்பார்த்திருந்த அவருக்கு அங்கலாய்ப்பு அதிகரித்துக்கொண்டே போயிற்று. விஷயத்தை ஒருவாறு புரிந்துகொண்டு பேச்சுக் கொடுத்தேன். எண்ணுவதெல்லாம் எண்ணி மனதைப் புண்ணாக்கிக் கொள்ளாதீர்கள் என்று அவருக்குச் சொல்லிப் புண்ணியமில்லை என்பதைத்தெரிந்தே வேறுவிதமாக அவருக்குப் பேச்சுக் கொடுத்தேன். யாரை அவர் எதிர்பார்த்திருக்கிறார்; எப்படி அவர் இருப்பார்; எப்படி உடுத்தியிருப்பார் என்பனபோன்ற விஷயங்களைக் கேட்டேன். அவருக்கு என்மீது எப்படியோ அபிமானம் ஏற்பட்டது. உடனே தான் எதிர்பார்த்திருந்த மனைவியைப் பற்றி—அவரைத்தான் முதலில் சந்தித்து காதல் கொண்டது, கலியாணம் பண்ணிக்கொண்டது எல்லாவற்றையுமே சொல்லத் தலைப்பட்டார். ஒன்றைர மணித்தியாலம் இதில் கழிந்தது. வண்டியும் வந்தது. அங்கலாய்த்துக்கொண்டிருந்த ஆசாமி எதிர்பாராதவாறே வண்டி வந்து 'கிறீச்' என்ற சத்தத்தோடு நின்றது.

### பொருளாதாரக் கவலை

கவலையில் பொருளாதாரக் கவலை என்று இன்னெருவிதமான கவலை உண்டு. போதிய பணம் இல்லையே என்ற கவலை இது. செலவு செய்ய அளவுமீறிய ஆசையுடையவர்களுக்கு இக்கவலை ஏற்படுவது சகஜம். சோக்கிறட்டீஸுக்கு இந்தக் கவலை நிறைய இருந்தது அவர் எப்படி இதைப் போக்கிக்கொண்டார் தெரியுமா? நான் எதிர்பார்க்குமளவு பணம் இல்லாமல் எத்தனை விஷயங்களைச் செய்யலாம் என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்வாராம். அப்புறம் அத்தியாவசியமானவற்றிற்கு உள்ளதைச் செலவு செய்து தேவையைப் பூர்த்தி செய்துகொள்வாராம். இதன் மூலம் அவர் தனது கவலையைப் போக்கிக்கொண்டார்.

### சோம்பலும் மிதமிஞ்சிய வேலையும்

எந்த வேலையையும் செய்யாமல் சோம்பல் பிடித்து இருப்பவர்களுக்கும்மிதமிஞ்சிய வேலை செய்து உடம்பை அலட்டிக்கொள்பவர்களுக்கும் கவலை உண்டாகும். வேலை செய்யாதிருப்பவர்கள் ஓரளவுக்காவது வேலை செய்வதாலும் சதா வேலையை செய்பவர்கள் இடையிடையே வேலையை நிறுத்தி ஓய்வெடுப்பதாலும் அல்லது பொழுதுபோக்குக் கேளிக்கைகளில் ஈடுபடுவதாலும் கவலையைப் போக்கிக்கொள்ளலாம். சர்ச்சில், டால்ஸ்டாய், லாரன்ஸ், ஹென்றி வாட் பீச்சர் போன்ற மேதாவிகள் அளவுக்குமீறி உழைத்ததால் தமக்கு ஏற்பட்ட கவலையை ஓய்வெடுத்தும், பொழுதுபோக்குக் கேளிக்கைகளில் ஈடுபட்டும் போக்கிக்கொண்டார்கள்.

### தாழ்வு மனப்பான்மை

தம்மைப்பற்றித் தாழ்வாக எண்ணிக்கொள்பவர்களுக்கும், தமது நிலையை நினைந்து தாமே தமக்கு அனுதாபம் காட்டும் சுபாவம் உடையவர்களையும்கூட கவலை பற்றிக்கொள்ளும். இவர்கள் இதற்கு எதிர்மாறாக நடந்தால் இது ஏற்படாது.

கவலைக்கு அடிமையாகித் திண்டாடுபவர்களின் பட்டியலில் இன்னுமொரு சாரார் இருக்கிறார்கள். இவர்கள் மிகு விசித்திரப் பேர்வழிகள்.

பிறந்தவர் இறப்பது ஒன்றும் புதிதல்ல. இது இயற்கை; அனைவரும் அறிந்த உண்மை. என்றாலும், உயிருக்கு உயிராக நேசித்து உள்ளன்போடு பேணி வந்த தன் காதல் மனையாட்டி ஒருநாள் இவ்வுலக வாழ்வை நீத்ததும் கணவன் உலகமே இருண்டு விட்டதாகவும், தன் வாழ்வே சூன்யமாகிவிட்டதாகவும் எண்ணித் துடியாய்த் துடிக்கிறான். "என் அன்பு மனைவி என்னேடு இன்பமாக வாழப் பிறந்தாளா அல்லது என்னை அவனியிலே தனியாகத் தவிக்க விட்டுவிட்டு மாளப் பிறந்தாளா?" என்று தாளாத சோகத்தால் தன்னைத் தானே கேட்டுக்கொள்கிறான்.

### அனுதாபம் காட்டாதீர்

இவனுக்குப் பழக்கமானவர்கள், நண்பர்கள் உடனே அவனைத் தேற்ற வேண்டித் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தபால்மூலமோ, தந்திமூலமோ நேரில் சென்றே அல்லது வேறெந்த வகையிலோ தெரிவித்துக்கொள்வார்கள்.

இப்படித் துயரப்படுபவனைத் தேற்ற விரும்புபவர்களுக்குச் சொல்லக்கூடிய புத்திமதி ஒன்றே ஒன்றுதான். தயவு செய்து அவசியமற்ற அனுதாபத்தைத் தெரிவிக்கும் விஷயத்தை அடியோடு நிறுத்திக் கொள்ளுங்கள் என்பதுதான் அது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இது பைத்தியக்காரத்தனமான புத்திமதியாகத் தோன்றலாம். ஆனல் இதற்கான காரண காரியங்களைச் சற்று ஆராய்ந்து பார்த்தால் இதன் பெருமையும் இன்றியமையாமையும் நன்கு புலனுகும்.

### அனுதாபம் கவலையை அதிகரிக்கும்

மனைவியின் பிரிவு கணவனுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகவும் தாங்கமுடியாத துக்கமாகவும் தெரிகிறது. இந்த நிலையில் அவன் தன்னை மறந்துவிடவே அவனது உணர்ச்சிகள் கட்டு மீறிப்போகின்றன. ஆகவே அந்த வேளையில் அவனது முக்கிய கடமை உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டியதாகிறது. இந்த நிலையில் அவனுக்குப் பிறர் காட்டும் அனுதாபம் அவனது கட்டுமீறிய உணர்ச்சிகளின் வேகத்தைப் பன்மடங்காக்குமே தவிர அவற்றைக் கட்டுப்படுத்தி அவன் ஆறுதலும் தேறுதலும் அடைய உதவமாட்டாது.

### [illegible]

அப்படியாயின் துன்பப்படுபவனைத் தேற்ற அவனுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்குப் பதிலாக வேறெதைத் தெரிவிக்கலாம்?

மனைவியைக் காலதேவனுக்குப் பறிகொடுத்து விட்டுக் கதிகலங்கி நின்ற கணவனெருவனைப்பார்த்து அந்தப் பெண்ணுக்குச் சிகிச்சை செய்த டாக்டர் கூறிய ஆறுதல் இது: "இருந்தாலும்.....நீ அவளை மீண்டும் காண்பாய்"

(13-ம் பக்கம் பார்க்க)

## சிங்களம் வளரத்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் மொழிச் சட்டத்தை நிறைவேற்றியது தர்க்கரீதியானதல்லவென்பது தெளிவான ஒரு மொழியின் வளர்ச்சிக்கு அரசாங்க ஆதரவு தேவைப்படுமானல், இத்தகைய ஆதரவின்றி இந்நாட்டில் தமிழ் மொழி எவ்வாறு உயிர் பிழைத்திருக்குமென்று சிங்களம் மட்டும் சட்டத்தின் ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர்? சிங்கள மொழி செழித்து வளரவேண்டுமானல் அதற்காகத் தமிழைத் தாழ்த்தித் தள்ளவேண்டுமா?

### பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் முயற்சி

பொருளாதார அபிவிருத்திக்கு இந்த மொழிச் சட்டத்தால் எத்தகைய உதவியும் கிடைக்காது. தமிழ்ப் பேசும் மக்களாக இருந்தாலும் சரி, சிங்களம் பேசும் மக்களாக இருந்தாலும் சரி, தனது பிரஜைகளுக்கு வேலை தேடிக் கொடுக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்ததாகும். இவ்விஷயத்தில் ஒரு வகுப்பை எதிர்த்து மற்றெரு வகுப்புக்குச் சலுகைகாட்டுவது பட்சபாதமாகும். இது தனது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காகச் செய்யப்படும் முயற்சியாகும். இந்த அடிப்படையில் எந்த நாட்டிலும் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது.

### வேலையில்லாத் [illegible]

சிங்களவர்களுக்கு வேலையில்லையென்றல் அது அவர்களின் மொழி தாழ்த்தப்பட்டிருப்பதனலல்ல. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முக்கியமான ஒரு அம்சம்தான் வேலையில்லாத் திண்டாட்டம். இந்தப் பொருளாதார அமைப்பை மாற்றி அமைத்தாலன்றி வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கவே முடியாது.

### திட்டச் சபை

பன்னிரண்டு மாதங்களுக்கு முன்பு நாடு தெரிவு செய்த புதிய அரசாங்கம் முற்போக்கான கொள்கைகள்மூலம் இந்த மாற்றத்தை உண்டாக்குவதன் அவசரத் தேவையை மென்மேலும் உணர்ந்து வருவதைக் கவனிக்க நாம் பெருமகிழ்ச்சியடைகிறேம்.புதிய அரசாங்கம் இதற்காக ஒரு திட்டச் சபையை அமைத்துள்ளது. இதனல் விரைவில் சோஷலிஸ்ட்பாதையில்நாம் நடப்போமென்ற நம்பிக்கை மக்களின் மனதில் உதித்துள்ளது. சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதைத் தடுக்க ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ளப் பிற்போக்கான சக்திகள் முயன்றுவருகின்றனவென்பதை அரசாங்கம் மென்மேலும் உணர்ந்துவருகின்றதென்பதைக் குறித்தும் நாம் பெருமகிழ்ச்சியடைகிறேம். இந்நாட்டிலுள்ள பிற்போக்கான ஏகாதிபத்திய ஆதரவுச் சக்திகளுக்கெதிராக அரசாங்கம் எடுக்கும் சகல முயற்சிகளிலும் அரசாங்கத்திற்கு எங்கள் மனப்பூர்வமான ஆதரவை யளிப்போமென்று உறுதி கூறுகிறேம்."

"நாம் பெற்ற சுதந்திரத்தின் பலனையும் அரசாங்க மாற்றத்தால் ஏற்படக் கூடிய நற்பலன்களையும்

(12-ம் பக்கம் பார்க்க)


கமலா பீடி

பீடி இலை, பீடிப் புகையிலை, இன்னும் பீடிக்குத் தேவையான சாமான்களும் எங்களிடம் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: V. P. P. ஆடர்கள் அவசியம் கவனிக்கப்படும்.

ஒருமுறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.

போன்: 3597 6522

கமலா ஸ்ரோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு — 11.

தந்தி: தாமரை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் வெளிநாட்டு கொள்கை வென்றது!

—:0:—

## கேரளம் தவிர்ந்த ஏனைய இடங்களில் கம்யூனிஸ்டுகளின் படுதோல்வி

—0—

## தமிழ் நாட்டில் தி. மு. கவின் செல்வாக்கு

## எதிர்க் கட்சி அமைப்பில் சுயேச்சையாளர் பங்கு

இந்தியாவின் இரண்டாவது பொதுத்தேர்தலில் வாக்கெடுப்பு முடிந்து அநேகமாக முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிட்டன.

கேரளம் தவிர்ந்த ஏனைய இராச்சியங்களில் காங்கிரஸ் கணிசமான அளவு வெற்றி பெற்றிருக்கிறது. அங்கெல்லாம் காங்கிரஸ் ஆட்சியே அடுத்த ஐந்தாண்டுக்கு நடக்குமென்று நம்பலாம்.

மத்திய பாராளுமன்றத்திலும் காங்கிரஸுக்கே அதிகப்படியான ஸ்தானங்கள் கிடைத்து வருகின்றன.

### வெளிநாட்டு கொள்கைக்கு ஆதரவு

காங்கிரஸ் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கையில் மக்களுக்கு ஓரளவுக்கு அதிருப்தி ஏற்பட்டிருந்த போதிலும் அதன் வெளிநாட்டுக் கொள்கையைப் பாரத மக்கள் பரிபூரணமாக ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை இத்தேர்தல் நிரூபித்திருக்கிறது. இலட்சக்கணக்கான வாக்குகள் அதிகப்படியாகப்பெற்று நேருஜி வெற்றி பெற்றதும், பல ஆயிரம் வாக்குகள் அதிகப்படியாகப் பெற்றுத் திரு கிருஷ்ணமேனன் பம்பாய் தொகுதியில் வெற்றியீட்டியதும் இதை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

### தி. மு. க. கம்யூனிஸ்ட் பலப்பரீட்சை

சென்னை இராச்சியஅசெம்பிளிக்குரிய 205 ஸ்தானங்களுக்கும் பலமான போட்டியிருந்தது. பதவியிலிருந்து வந்த காங்கிரஸ் கட்சியை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தினர், காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியினர், கம்யூனிஸ்ட் கட்சியினர், பிரஜா சோஷலிஸ்டு கட்சியினர், சோஷலிஸ்டு கட்சியினர் மற்றும் பல சுயேச்சையாளர்கள் போட்டியிட்டார்கள். இதுதான் நடந்த விஷயம்.

ஆனால் போட்டி முடிவுகளைப் பார்க்கும் ஒருவருக்கு நடந்தது தி. மு. க. — கம்யூனிஸ்ட்டு பலப் பரீட்சையா அல்லது வேறெதுவுமா என்றுதான் கேட்கத் தோன்றும். இவ்விரு கட்சியினரும் பல தொகுதிகளில் மோதியிருக்கிறார்கள். மோதுதல் பலமாக இருந்த இடங்களிலெல்லாம் அநேகமாகத் தி. மு. க.வினர் வெற்றிபெற்றிருக்கிறார்கள். இது தவறிய இடங்களில் இடையே இருந்த காங்கிரஸார் வெற்றிபெற்றார்கள். கம்யூனிஸ்டுகள் படுதோல்வியடைந்தார்கள்.

### தப்புக் கணக்கின் விளைவு

தென்னாட்டில் கேரளத்தில் ஆட்சி அமைக்கும் அளவுக்கு ஆதிக்கம் பெற்றிருக்கும் கம்யூனிஸ்டு கட்சியினர் தமிழ் நாட்டை அதாவது சென்னையைப் பொறுத்தவரையில் தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டுவிட்டார்கள். சென்னையில் தி. மு. க.வினரைக் காட்டிலும் தமக்கு ஆதரவு அதிகம் இருப்பதாக எண்ணித் தேர்தலில் அவர்களை ஒரு பொருட்டாக மதிக்காமல் காங்கிரஸை எதிர்த்து தி. மு. க.வினர் போட்டியிட்ட பல இடங்களில் தாங்களும் போட்டியிட்டார்கள். இதன் விளைவு சட்டசபையில் தி. மு. க.வினர் 15 ஸ்தானங்களைப் பெற, நான்கே ஸ்தானங்களோடு திருப்தியடைய வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இரு சாராரும் ஒரு உடன்படிக்கைக்குவந்து கூட்டணி அமைத்துக் காங்கிரஸை எதிர்த்துப்போட்டியிட்டிருந்தால் காங்கிரஸுக்கு கலபத்தில் கிடைத்த ஸ்தானங்களில் பல இவ்விரு கட்சியினருக்கும் கிடைத்திருக்கலாம். அதனால் இரு கட்சியினருக்கும் தற்போது உள்ளதைக் காட்டிலும் அதிகமான ஸ்தானங்கள் சட்டசபையில் கிடைத்திருக்கும்.

### சட்டசபையில் ஸ்தானங்கள்

இப்பொழுது உள்ள நிலைமைப்படி காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்தப் போதுமான அளவு ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. காங்கிரஸுக்கு மொத்தம் 151 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. மற்றும் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டிக்கு 16 ஸ்தானங்களும் பிராஜாசோஷலிஸ்டு கட்சிக்கு 2 ஸ்தானங்களும் சோஷலிஸ்டு கட்சிக்கு 2 ஸ்தானங்களும் சுயேச்சையாளருக்கு 15 ஸ்தானங்களும் கிடைத்திருக்கின்றன. தி. மு. கவுக்கு 15 ஸ்தானங்களும் கம்யூனிஸ்ட்டு கட்சிக்கு 4 ஸ்தானங்களும் கிடைத்திருக்கின்றன.

### எதிர்க் கட்சி

கட்சி வாரியாகப் பார்த்தால் காங்கிரஸுக்கு அடுத்தபடியாக அதிகப்படியான ஸ்தானங்களைப் பெற்று எதிர்க்கட்சி அமைக்க தகுதிபெற்றிருப்பவை கா. சீ. க. வும், தி. மு. க. வுமாகும். இவையிரண்டிலும் எந்தக் கட்சி எதிர்க்கட்சி அமைக்கும் என்பது வெற்றி பெற்றுள்ள சுயேச்சை அங்கத்தவர்கள் கொடுக்கும் ஆதரவைப் பொறுத்துத்தான் இருக்கிறது. சுயேச்சை அங்கத்தவர்களுள் காங்கிரஸ் ஆதரவாளர்கள் இருக்கிறார்கள்; தி. மு. க. அனுதாபிகள் இருக்கிறார்கள்; காங்கிரஸ் சீர்திருத்தக்கமிட்டி அபிமானிகளும் இருக்கிறார்கள்.

பொதுமக்கள் தீர்ப்புக் கூறியது முடிந்ததும் எதிர்க்கட்சி அமைக்கும் விஷயத்தில் சுயேச்சை அங்கத்தவர்கள் தீர்ப்பளிக்கவேண்டிய கட்டம் இப்பொழுது உருவாகியிருக்கிறது. இதனால் அவர்கள் பொதுமக்களின் தீர்ப்பை அனுசரித்து அதன்படி நடப்பார்களானால் தாங்கள் பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்பதை எடுத்த எடுப்பிலேயே நிரூபித்தவர்களாவார்கள்.

### மக்கள் தீர்ப்பு

பொதுமக்களின் தீர்ப்பு என்ன? காங்கிரஸ், சென்னையில் சர்க்கார் அமைக்குமளவுக்கு அதிகப்படியான ஸ்தானங்களைப் பெற்றிருந்த போதிலும், பொதுமக்கள் காங்கிரஸை ஆதரித்து அளித்த வாக்குகளைக் காட்டிலும் அதை எதிர்த்து அளித்த வாக்குகளே அதிகம். எதிர்த்து அளித்த வாக்குகள்பலகட்சிகளுக்கும்சுயேச்சையாளர்களுக்குமிடையே சிதறிச் செறிந்துவிட்டதால் அவர்களில் யாரும் வெற்றி பெறமுடியாது போயிற்று. இந்த அடிப்படையிலேயே பல இடங்களில் மக்களின் விருப்பத்துக்கு மாறாக காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது.

காங்கிரஸ் மறுபடியும் பதவிக்கு வருவதை மக்கள் மனப்பூர்வமாக விரும்பவில்லை என்பது அவர்கள் வாக்களித்ததிலிருந்து தெரியவருகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாகக் காங்கிரஸ் எதிர்ப்பாளர்களிடையே நிலவிய ஒற்றுமைக் குறைவால் ஏற்பட்ட பலவீனத்தின் காரணமாக அவர்கள் விருப்பம் நிறைவேறவில்லை.

இந்த நிலையில் பலமானதோர் எதிர்க் கட்சி அமைப்பதன் மூலமாவது மக்களின் விருப்பத்தை ஓரளவு நிறைவேற்ற முடியும். தி. மு. கவும், கா. சீ கவும் அதைத் தனித் தனி செய்யக் காத்திருக்கின்றன. சுயேச்சையாளர்களின் ஆதரவை எதிர்பார்த்திருக்கின்றன. சுயேச்சையாளர்கள் இவ்விரண்டு கட்சிகளிலும் எக் கட்சியை ஆதரிக்கலாம் என்பதுதான் கேள்வி.

### காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி

கா. சீ. க. வினர் தேர்தலுக்கு முன்பு காங்கிரஸ் 'குட்டை'யிலேயே இருந்து ஊறியவர்கள். தேர்தல் ஆரம்பமாகிற தென்றதும் காங்கிரஸ் மேலிடத்தோடு டிக்கட் கேட்டு முட்டிக் கொண்டதால் ஏற்பட்ட மனக்கசப்பின் பேரில் சட்டையைமாற்றிக் கொண்டு தனிக் கட்சி அமைத்துப் போட்டி போட்டவர்கள். இவர்களின் வேஷம் பொருத்தமாகவும், பேசும் தொனி இனிமையாகவு மிருந்ததால் 16 ஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொண்டபோதிலும் ஐந்து வருஷத்துக் கென்ன, ஐந்து மாதத்துக்காவது, காங்கிரசை எதிர்த்து நின்று உருப்படியாக எதையும் இவர்கள் செய்வார்கள் என்று நம்புவதற்கில்லை. காலப் போக்கில் மனக் கொதிப்பு ஆறிப் போக காங்கிரஸ் மேலிடம் ஆசை காட்டி அழைத்தால் 'வாலை'ச் சுருட்டிக்கொண்டு பழைய குட்டையில் போய் இவர்கள் விழமாட்டார்களென்று எப்படிச் சொல்லமுடியும்?

### தி. மு. க மக்கள் ஆதரவு

காங்கிரஸைக் கடைசி வரை எதிர்த்து அவர்களின் தவறுகளை தைரியமாக எடுத்துரைத்துத் தமிழ் நாட்டில் நல்லாட்சி தழைக்க நாளிலும் பொழுதிலும் பாடுபடக் கூடியவர்கள்—பாடு பட்டுப் பழகியவர்கள்—பாடு படத் திடசங்கல்பம் செய்து கொண்டுள்ளவர்கள் தி. மு. கவினர் என்பதை நாடறியும்.

தி. மு. க சமீபத்திலேயே அரசியலில் நேரடித் தொடர்பு கொள்ள முனைந்த போதிலும் அதற்கு மக்களிடையே எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதை இத்தேர்தல் காட்டிவிட்டது. ஸ்தானங்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் சென்னை சட்டசபையில் அது 15ம் பாராளுமன்றத்தில் 2ம் மட்டுமே பெற்றிருந்த [illegible] அதிகத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, வேறெந்த எதிர்க்கட்சிக்கும் கிடைக்காத அளவு பெருந்தொகையான வாக்குகள் அதற்குக் கிடைத்திருப்பது தெரியவருகிறது.

தி. மு. க. வை முன்பெல்லாம் திட்டியவர்கள் கூட இப்பொழுது அதன் அருமை பெருமைகளை அறிந்து அதைப் பாராட்டத் தலைப்படும் அளவுக்கு அது தமிழ் நாட்டில் பெரியதோர் ஸ்தானமாக வளர்ந்திருக்கிறது.

### 'கல்கி' அபிப்பிராயம

சென்னையிலிருந்து வெளியாகும் தேசிய வார ஏடான 'கல்கி'யில் 10—3—57ல் ஒரு தலையங்கம் தீட்டப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

''எந்தக் கட்சியாயினும் எந்தக் கூட்டமாயினும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும்படியான காரியத்தில் புகுந்தால் குற்றங்களைக் களைந்துநல்லபெயர் எடுக்கமுயல்வது இயற்கை. அபவாதங்களை மறுத்து விளக்குவதும் இயற்கை. திராவிட கழகத்தின் தலைவரால் வளர்க்கப்பட்ட பகுத்தறிவு நிறைந்த வாலிபர்கள் அவரைவிட்டுப் பிரிந்து ''திராவிட முன்னேற்றக் கழகம்'' என்ற பெயரில் தனிக் கழகம் ஏற்படுத்தினார்கள். அந்த திராவிட முன்னேற்றக் கழகத்தார் தற்போது தேர்தலில் திற்கிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு பொறுப்புணர்ச்சி தோன்றிவிட்டது. தி. மு. க. தலைவர் திரு அண்ணாத்துரை அவர்கள் சென்னை யானைக்கவுனிக்கருகில் செய்த பிரசங்கத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

''நாம் இதுவரையிலும் பார்ப்பனியம் என்ற தன்மையைக் கண்டிக்கிறோமே தவிர, அது கூடாது என்று வலியுறுத்துகிறோமே தவிர, 'பார்ப்பனர்' என்ற தனிப்பட்டோரைத் தாக்கியதே கிடையாது. நான் தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்தபோதே பார்ப்பனரைத் தாக்கிப் பேசக்கூடாது என்று கழகத் தோழர்கள் அனைவருக்கும் தாக்கீது பிறப்பித்தேன். அதைப்போலவே தி. மு. க. தோழர்களும் பிராமணர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியது கிடையாது.

எனவே தி. மு. கழகம் ஒரு ஜனநாயக ஸ்தாபனம். மக்கள் பணியையே தங்கள் தூய பணியாகக்கொண்ட தொண்டர் முகாம் தி. மு. கழகம்.

திரு அண்ணாத்துரையின் இந்த வாக்குறுதிக்கு எதிராக திராவிட கழகத் தலைவர் ஈ. வே. ரா, தி. மு. கவைத் தாக்கிப் பேசியும் எழுதியும் வருகிறார்''

### ஆனந்தவிகடன் அபிப்பிராயம்

சென்னையிலிருந்து வெளியாகும் மற்றொரு தேசிய வார ஏடான ஆனந்தவிகடன் தி. மு. கவினர் திறமையைப் போற்றியும், அவர்களின் கண்ணியத்தைப் பாராட்டியும், திரு அண்ணாத்துரையின் அமோக வெற்றியை வரவேற்றும்

(9ம் பக்கம் பார்க்க)

---

இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழு

## நாடகப் போட்டி

இலங்கைக் கலைக் கழகத்தினர் இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் கலை விழாவொன்றை நடாத்தவிருக்கின்றனர். அக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுவினர் அவ்விழாவில் தமிழ் நாடகமொன்றை அரங்கேற்றத் தீர்மானித்துள்ளனர். அதற்கான நாடகத்தைத் தெரிவு செய்வதற்காக நாடகாசிரியர்களிடமிருந்து சிறந்த நாடகங்கள் வரவேற்கப்படும். இப்போட்டிக்கென அனுப்பப்படும் நாடகங்கள் 10—5—57க்கு முன்னர்,

தலைவர்,
**தமிழ் நாடகக் குழு,**
இலங்கைக் கலைக் கழகம்,
கொழும்பு—7,

என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### போட்டிக்கான விதிகள்:

1. எழுதப்படும் நாடகங்கள் சரித்திர அடிப்படை கொண்டனவாகவும், தமிழர் பண்பாட்டினைத் துலக்குவனவாகவும் அமைதல் வேண்டும்.
2. மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இருக்காது, சொந்தக் கற்பனையைக் கொண்டு எழுதப்பட்டதாக இருக்கவேண்டும்.
3. தயாரிப்பின்பொழுது 2 மணித்தியால நேரத்திற்கு அமைவதாக இருக்க வேண்டும்.
4. கையெழுத்துப் பிரதிகள் காகிதத்தில் ஒரே பக்கத்தில் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நாடகத்திற்கும் இரண்டு பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.
5. போட்டிக்கு வரும் நாடகங்களிலே தகுதிவாய்ந்த மூன்றிற்குப் பரிசில்கள் வழங்கப்பெறும்.
6. பரிசுகள் பெறும் நாடகங்களின் முழு உரிமையும் இலங்கைக் கலைக் கழகத்திற்கே உரியது.
7. இப்போட்டி சம்பந்தமான சகல விஷயங்களிலும் இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவின் தீர்ப்பே முடிவானது.

சு. வித்தியானந்தன்,
தலைவர்,
இலங்கைக் கலைக் கழகத்
தமிழ் நாடகக் குழு.

நாடகம்:

# "நல்ல தீர்ப்பு"

—எஸ். சிவபாதம்

(எமராஜன் கொலுவீற்றிருக்கின்றார். இருவர் வெஞ்சாமரை வீசுகின்றனர். சித்ரகுப்தர் குறிப்புப் புத்தகத்தோடு வேலையிலிருக்கின்றார். தர்பார் எமதூதுவர்களால் நிரம்பியிருக்கின்றது. சமஸ்தானப் புலவன் தமிழன் என்றொரு இனமுண்டு என்று பாடுகின்றான்) அந்த நேரத்தில்.........

குரல்: என்னை எங்கே அழைத்துச் செல்கின்றாய். என்னை எதற்காக அழைத்துச் செல்கின்றாய். என்னை ஒன்றும் செய்ய வேண்டாம் விட்டுவிடு.

எமதர்மராஜன்:- (ஆச்சரியத்தோடு) சித்ரகுப்தா! அங்கே என்ன சப்தம்? ஒரு பெண்ணின் குரல்போல் கேட்கின்றதே. அவள் ஏன் அலறுகிறாள்?

(அந்த நேரத்தில் ஒரு எமதூதுவன் தலைவிரிகோலத்துடனிருக்கும் பெண்ணை அழைத்து வருகின்றான்)

சித்ரகுப்தா:- ஏய்! ஒன் றோட் திறீ! யாரிவள்?

எமதூதுவன்:- பிரபோ! இன்று பூலோகத்தில் அம்பாரை என்னும் ஊர் அல்லோலகல்லோலப்படுகின்றது. எங்கும் துப்பாக்கிச் சத்தமும், டைனமைட் வெடியும் காதைப் பிளக்கின்றன. என்ன நடக்கின்றது என்று பார்த்து வருவோம் என்று சென்ற யான் இப்பெண் தலைவிரிகோலமாய் நடுச்சந்தியில் நிற்பதைக் கண்டேன். துணை அற்ற இவளை நாமாவது காப்பாற்றுவோம் என்ற எண்ணத்துடன் நம் இராச்சியத்திற்கழைத்து வந்தேன்.

சித்ருகுப்தா:- கொடுமை! கொடுமை!!

எமதர்மராஜன்:- அம்மையே, நீ யார்? உன் பெயரென்ன?

பெண்:- அரசே! நான் இலங்கைவாழ் இருபது லட்சம் தமிழர்களின் தாய். என் பெயர் தமிழன்னை.

எமதர்மராஜன்:- உனக்குப் பூலோகத்தில என்ன நடந்தது? நீ நடுச்சந்தியிலே தலைவிரிகோலமாக நிற்கக் காரணமென்ன?

தமிழன்னை:- பூலோகத்தில் தமிழன்னை என்றால் தெரியாதவர் இருக்க முடியாது. என்னை எல்லோரும் இனியவள், தெய்வீகத் தன்மை பொருந்தியவள், தன்மானமுள்ளவள் என்றே அழைப்பார்கள். ஆனால் எங்கிருந்தோ வந்த கல்நெஞ்சக்காரர்கள் அத்துமீறிப் பிரவேசித்து என்னை அழிக்க முயன்றார்கள்.

எமதர்மராஜன்:- என்ன? பூவுலகில் இப்படியான கெட்ட நடத்தையா? அப்படியானால் நீர் பெற்ற இருபது லட்சம் தமிழர்களும் சும்மாதானா இருந்தார்கள்? தாய்க்கு ஆபத்தென்றால் அவர்கள் விறுகொண்டெழவில்லையா?

தமிழன்னை:- நாமென்ன செய்யலாம் அரசே. அவர்கள் பலர். நாம் சிலர்.

எமதர்மராஜன்:- இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு வழி சொல்ல ஒரு சேரன் செங்குட்டுவனில்லையா? ஒரு நெடுஞ்செழியனில்லையா? ஒரு வீர பாண்டியக் கட்டபொம்மனில்லையா?

தமிழன்னை:- இருக்கின்றார்களரசே இருக்கின்றார்கள். ஆனால் எல்லாம் என்னால் வந்த வினைதான். நான் என் மக்களைப் 'பொறுத்தார் அரசாள்வார்' என்னும் பழைய வேதாந்தத்தைக் காட்டி நிறுத்தினேன். இதன் முக்கிய நோக்கமென்னவென்றால் என் மக்கள் சிலர் அக்கல்நெஞ்சக்காரர்களின் ஊரிலேயும் சீவிக்கின்றனர். அவர்களுக்கு ஏதாவது ஆபத்துவந்துவிடுமோ என்ற எண்ணத்தினாலேதான் வெள்ளம் தலைக்குவந்துவிட்டது.

எமதர்மராஜன்: சித்ரகுப்தா! இப்பெண்ணின் ஆயுள் எப்போ முடிவடைகின்றதென்று புத்தகத்தைப் பார்த்துச் சொல்?

சித்ரகுப்தர்:- (புத்தகத்தைப் புரட்டிப்பார்த்து ஆச்சரியத்துடன்) பிரபோ! இவளுக்கு அந்தமுமில்லை. ஆதியுமில்லை. இவள் அழியா வரமும் பெற்றிருக்கின்றாள்.

எமதர்மராஜன்:- என்ன! அப்படிப்பட்ட அழியா வரம் பெற்ற இப்பெண்ணையா அக்கயவர்கள் அழிக்கமுயன்றார்கள்? சித்ரகுப்தா! அக்கயவர்கள் யாராக இருந்தாலும்சரி இங்கே அழைத்துக் கொண்டு வாருங்கள். அதுவரை தமிழன்னை சுவர்க்கத்திலிருப்பாள். நாளை சந்திப்போம். சபை கலையட்டும்.

ஃ

(அடுத்த நாட்காலை எமராஜன் தர்பாருக்கு வருகின்றார்.)

கட்டியங் கூறுபவன்:- இராஜாதி ராஜ, இராஜமார்த்தாண்ட, இராஜ வீர இராஜசூர, நடபயங்கர மகாராஜா கொலுவுக்குவருகிறார் பராக்! பராக்! பராக்!

(எமதர்மராஜன் சிம்மாசனத்தில் அமருகிறார். அவர் கட்டளை இட்டபடி ஒருவரும் வராதது கண்டுகோபமாக.)

எமதர்மராஜன்:- சித்ர குப்தா! எங்கே அக்கயவர்கள்? இன்னுமா வரவில்லை? (தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி) இன்னும் அரை மணித்தியாலத்தில் அவர்கள் இங்கு வரா விட்டால் தகுந்த நடவடிக்கை எடு? அவ்வளவு திமிரா அவர்களுக்கு? என்னைக் கூடவா மதிக்கிறார்களில்லை

(அப்பொழுது சித்ர குப்தன் தனது தூரதிருஷ்டிக் கண்ணாடியை எடுத்து வெளியில் பார்த்தவாறே)

சித்ரகுப்தர்:- பிரபோ! அதோ நமது தூதுவன் இருவரை அழைத்துக்கொண்டு வருகின்றான். இன்னும் சில விநாடிகளில் அவர்கள் இங்கு வந்துவிடுவார்கள்.

எமதர்மராஜன்:- நல்லது. சுவர்க்கத்திலிருந்து தமிழ் அன்னையை அழைத்துவந்து இந்த ஆசனத்தில் அமரச் செய்யுங்கள். அக்கொடியவர்களைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்த ஏற்பாடு செய்யுங்கள்.

சித்ரகுப்தர்:- அப்படியே ஆகட்டும் பிரபோ!

(திண்டாடு நாயக்காவும், பவ நாயக்காவும் குற்றவாளிக் கூண்டிலே நிற்கின்றனர். தமிழ் அன்னை எமராஜனுக்குப் பக்கத்திலே ஆசனத்திலே இருக்கின்றாள்.)

எமதர்மராஜன்: நீங்கள் இவ்வளவு நேரமும் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

திண்டாடுநாயக்கா:- அரசே! நாங்கள் போகும் காரியம் சித்தியாகவேண்டும் என்று புத்த பகவானைப் பிரார்த்திக்கச் சென்றிருந்தோம். அதனால் நேரமும் போய் விட்டது. மன்னியுங்கள்.

எமதர்மராஜன்:- (அலட்சியமாகச் சிரித்துக்கொண்டே) ஓகோ! அப்படியா? சித்ரகுப்தா! குற்றப் பத்திரிகை தயாராகிவிட்டதா? இன்று இவ்வழக்கை யார் குறுக்கு விசாரணை செய்யப்போகின்றார்கள்?

சித்ரகுப்தர்:- பிரபோ! இது தெரிந்து நான் பூலோகத்திலிருக்கும் நமது பிரத்தியேகமான சட்ட நிபுணர் செல்வனாரைத் தந்தி அடித்து வரவழைத்திருக்கின்றேன்.

எமதர்மராஜன்:- நல்லது குற்றப் பத்திரிகையை வாசியும். செல்வனாரை அழைத்து வந்து விசாரணையை ஆரம்பியுங்கள்.

(சித்ரகுப்தர் குற்றப் பத்திரிகை வாசிக்கின்றார். அதில் தமிழ் அன்னையை அழிக்க முயன்றதாகவும், அவளுக்கும் அவள் மக்களுக்கும் நீதியின்படி சம அந்தஸ்து அளிக்க மறுத்ததாகவும் வாசிக்கப்படுகின்றது.)

செல்வனார்:- பிரபோ! இக்கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் இருவரும் பூலோகத்திலே நடமாடிய இரு நச்சுப் பாம்புகள். பசுத்தோல் போர்த்திய புலிகள். ஆட்டுருவிலே நாட்டின் அமைதியைப் பங்கப்படுத்திய ஓநாய்கள். இவன்தான் பவநாயக்கா. இதோ நிற்பவனின் பிரதம சீஷன். இவன் அமைச்சனும்கூட. ஈழத்து மக்களைத் தன் மக்கள்போல் பார்ப்பேனென்று கூறி பாகுபாடு காட்டிய பாதகன்.

தமிழ் அன்னையை அழிக்க முயன்றதற்கு இவன்தான் வேவுகாரன். (திண்டாடுநாயக்காவின் பக்கம் திரும்பி) இதோ! இவன் அவனின் தலைவன்: ஈழத்தின் தலைவனும்கூட. வேலியே பயிரை மேயும் கதை. இவன் மட்டுமாவது கொஞ்சம் நல்லெண்ணத்தோடு இருந்திருந்தால் நாட்டின் அமைதியைக் காப்பாற்றியிருக்கலாம். நாட்டின் பாதுகாவலனாக இருக்க வேண்டிய இவனே நீதியைச் சூறையாடினான். சட்டத்தைத் தனதாக்கிக்கொண்டான். இத்திண்டாடுநாயக்காவின் ஆட்சியினால் இன்று நாடே திண்டாடுகிறது.

பவநாயக்கா:- (ஆத்திரமாக) நாம் நினைத்தோம்; செய்தோம். அதைக் கேட்க நீங்கள் யார்?

எமதர்மராஜன்:- (பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டு) நீங்கள் யார்!

சித்ரகுப்தர்:- ஏய்! இது தர்மராஜனின் தர்பார் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். நாக்கு நீண்டால் ஒட்ட நறுக்கப்படும்.

திண்டாடுநாயக்கா:- எங்கேயும் இப்படித்தான். என் சகாக்களுக்குப் பொறுமையே கிடையாது. வீண் விவாதம் வேண்டாம். நாம் எதற்காக அழைக்கப்பட்டோம்?

எமதர்மராஜன்:- (சட்டென்று) குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டிருக்கின்றது.

திண்டாடுநாயக்கா:- நாங்கள் விரும்பினோம். பெரும்பான்மையான என் மக்கள் விரும்பினர்; சட்டம் இயற்றினோம். சட்ட வரம்பை மீறியதினால் கோர்ட்டிற்கு வரட்டும்.

செல்வனார்:- ஏய்! அறுபது லட்சம் உன் மக்கள் பெரும்பான்மையினர். அறுநூறு லட்சம் தமிழர் சிறுபான்மையினர்! அப்படித்தானே? நீ எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்துப் பண்டிதனானாய்?

எமதர்மராஜன்:- நாட்டின் பாதுகாவலனாகிய நீ ஒரு சாராருக்கு மட்டும் சலுகை காட்டியிருக்கக்கூடாது. தமிழர்களுக்கும் சம அந்தஸ்து கொடுத்திருக்க வேண்டியது தான் நீதி, தர்மம். தமிழ் தெய்வீகத்தன்மை பொருந்தியவள். அப்படிப் பெருமை வாய்ந்த பழந்தமிழ் மொழியை ஏன் அழிக்க முயன்றாய்?

திண்டாடுநாயக்கா:- அப்படியானால் சட்டம் செய்ய வல்ல மொழி. தரணியை ஆள வந்த மொழி என்றெல்லாம் போற்றப்பட்ட லத்தீன் மொழி எங்கே? அது இப்பொழுது பேச்சு வழக்கிலில்லை. அப்பொழுது எமதர்மராஜன் தூங்கிக் கொண்டிருந்தாரோ? இனிய மொழி, இறைவன் அருளிய மொழி, இறைவனுடன் பேச உதவும் மொழி என்றெல்லாம் புகழப்பட்ட சமஸ்கிருதம் எங்கே? அது ஏட்டுடன் மட்டும் வாழும் இறந்த மொழியாகிவிட்டது என்பதைச் சட்டனார் செல்வனார் அறிவாரா?

செல்வனார்:- இப்படித்தான் பூலோகத்திலும் குதர்க்க வாதம் செய்து கொண்டிருந்தீர்கள் என்பதை நான் அறிவேன். பெரும்பான்மை இனமென்று கொட்டமடிக்கும் உங்கள் மத்தியிலே தமிழுக்கு ஈடாக ஒரு மணிமேகலை உண்டா? ஒரு சிலப்பதிகாரமுண்டா? ஒரு திருக்குறளுண்டா? ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைத் தாய்ப் பாஷையாகக் கொண்ட எத்தனை நாடுகள் இன்று செழிப்புடன் இருக்கின்றன. எடுத்ததற்கெல்லாம் வெளிநாடு போகும் உன்னால் இவைகளைக் கவனிக்க முடியவில்லையா? உன்னைத் திருத்த முடியாதபொழுது ஏன் மற்றவர்களை விட்டு வருத்தப்படுகின்றாய்?

(அந்த நேரத்தில் புத்த பகவான் தோன்றுகிறார்)

புத்தர்:- தர்மராஜா! நான் இவ்வழக்கை மறைமுகமாயிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். இங்கே நிறுத்தப்பட்டிருக்கும் இருவரும் என் பேருக்கே பங்கம் விளைவித்துவிட்டனர். நன்றிகெட்டவர்களாய் நடந்துவிட்டார்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

## பொருளாதா...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களை மிகுதியாகவுடைய பொன்மாலையணிந்த குட்டுவனின் முழங்குகின்ற கடலாகிய முழவையுடைய முசிறி நகரத்தையொத்த நலஞ்சான்ற உயர்ந்த பொருட்களைக் கொண்டுவந்து பணிவுடன் கொடுப்பினும், அப்பொருள்களிலும் மேம்பட்ட என் மகள், ஒப்போரும் உயர்ந்தோருமல்லாதாரை மணந்துகொள்ளாள். ஆதலால் நீவிர்மகட் கொடை வேண்டுதலைக் கைவிடுமின் என்று.........

### சீர்கேடு களையப்பட வேண்டும்

தலைவனின் இம்மறுப்பு வேந்தர்களையும் கிழாக்கி விட்டமையால், இதனைக் கண்ட பரணர் எனும் சான்றோரான புலவர் பெருமகன் மகட் கொடை வேண்டி வந்தவர்கள், நெடிய நல்லூரின் கண் போர் தொடங்குதற்கு, இக்காரணம், அரண் கொள்ளுதற் பொருட்டு மேலேறுதற்கு வழியுண்டாகச் சாத்திவைக்கப்பட்டுள்ள ஏணிகள் போன்றது, என்று இரங்கிப் பாடியுள்ளார் "மீனெடுத்து நெற்குவை இ........." எனத் தொடங்கும் பாடல் புறம்-343ல் இக்கருத்து காணப் படுகிறது. இன்றைய நிலை இக்கருத்துக்களுக்கு முற்றி [illegible] னம் மறுமலர்ச்சியுற இன் [illegible] காணப்படும் சீர்கேடுகளும் களையப் படல் வேண்டும்.

## தமிழைப் புறக்கணிக்கும் இலங்கை வானொலி ச. நி. சங்கம்

:0:

## வட்டுக்கோட்டைத் தமிழரே இதற்குப் பொறுப்பாளி

(சுதந்திரன் நிருபர்)

இலங்கை வானொலியில் தமிழ் ஒதுக்கப்பட்டு வருவதாகச் சுதந்திரனுக்குக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது. இங்குள்ள சகாய நிதிச் சங்கத்துக்கு உறுப்பினர்கள் செலுத்தும் பணத்துக்கான ரசீதுகளில் தமிழ் இடம்பெறுவதில்லையாம்

இலங்கை வானொலிச் சகாய நிதிச் சங்க பொருளாளராக வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தமிழ்ப் பிரமுகர் ஒருவர் கடமையாற்றுகிறார். சங்கத்தின் சார்பாகத் தாம் சிங்கள உறுப்பினர்களிடமிருந்து பெறும் பணத்துக்குச் சிங்களத்தில் ரசீது எழுதி அவர்களுக்கு வழங்குவதாகவும், தமிழ் உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு ஆங்கிலத்தில் எழுதி வழங்குவதாகவும் தெரிகிறது.

பிரஸ்தாப சங்க நடைமுறை விதிப்படி சிங்களத்தில் ரசீது வழங்கவேண்டிய அவசியமில்லாதிருந்த போதும் சிங்கள உறுப்பினர்களுக்கு வலிந்து சிங்களத்தில் எழுதி வழங்கும் பொருளாளர் தமிழ் உறுப்பினர்களுக்கு ஏன் தமிழில் எழுதி வழங்கக்கூடாது என்று ஆத்திரமடைந்த தமிழ் உறுப்பினர்கள் கேட்பதாகத் தெரிகிறது.


முள்ளுக்கம்பி முள்ளுக்கம்பி

ஏராளமாக  வந்திருக்கிறது

உங்கள் பயிர்களை மிருகங்கள் மேய்கின்றனவென்று
இனிமேற் துக்கம் வேண்டாம்

பயிர்களை மிருகங்கள் மேயாவண்ணம் பாதுகாப்பதற்கு
வேண்டிய முள்ளுக் கம்பி எங்களிடம்
ஏராளமாக இருக்கின்றன

| | | | |
|---|---|---|---|
| 12 1/2 | கேஜ் | 450 | யார் |
| 14 | ,, | 750 | ,, |

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிட்டெட்,

371, பழைய சோனக தெரு,
தபாற் பெட்டி நிர். 46, கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்றவிடமெல்லாம் புதுப்புது மொழிகளை தோற்றுவித்த இஸ்லாமியப் பேரினம்

:o:

## இலக்கியத்தில் மட்டுமல்லாமல் சகல கலைத்துறைகளிலும் சிறந்து விளங்கியது

:o:

## கொலம்பஸ் வஸ்கொடிகாமா போன்றோருக்கே படம் வரைந்து வழிகாட்டியது ஒரு முஸ்லிம்

இலக்கிய வளத்திலே இஸ்லாம் கண்டுள்ள முன்னேற்றம் மிகச் சிறப்புடையது. இஸ்லாமியத் திருமறையே ஓர் ஈடில்லா இலக்கியமாகத் திகழ்கிறது. அராபியர் இயற்கையாகவே 'கவிஞர் இனம்' என்னும் சிறப்புரையைத் தாங்கியவர்கள். அவர்களது மொழியோ சொல்வளமும், இனிமையும், பண்பாடும் உள்ள உயர் தனிச் செம்மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. தங்களின் மொழிச் சிறப்பால் அராபியர்கள் அயலாரை 'அஜெமிகள்' (ஊமைகள்) என்றுகூட அழைத்தனர். அவர்கள் சென்றவிடமெல்லாம் ஒரு புது மொழியையே உண்டுபண்ணினர் எனலாம். பாரசிகத்திற்குச் சென்று அந்நாட்டின் மொழியைத் தங்கள் புனித அராபியிலேயே எழுதினார்கள். மலாயாவுக்குச் சென்று அந்நாட்டு மொழியையும் தங்கள் நாட்டு எழுத்தில் எழுதினார்கள். இந்தியாவில் உருது எழுந்தது. மேலைக் கடற்கரையோரங்களிலே அரபி மலையாளம் எழுந்தது. கிழக் கடற்கரையோரங்களிலே அரபித் தமிழ் செழித்தது.

### இலக்கியவானில் "விண்மீன்கள்"

முதநப்பி முதற்கொண்டு முகம்மது இக்பால் வரையிலே எத்தனையோ "விண்மீன்கள்" இஸ்லாமிய இலக்கிய வானிலே மின்னி மின்னிக் கண்களைப் பறிக்கின்றன. இயற்கையின் எழிலைப்



### இஸ்லாமிய உலகம்

பற்றி இதயங்குளிரப்பாடிய இப்னு முகம்மது, மாதர்களின் மாண்பை மகிழ்ச்சியுடன் பாடிய உமர் இப்னு அபீருலியா, காதல் கருவூலங்களைத் தந்த ஜாமில், ஒழுக்கத்தின் உயர்வைப் பாடிய சாதி, தத்துவஞானசத்துக்களைத் தந்த ஜமாலுதீன் ரூமி, அப்பாசிய அரண்மனையிலே வாழ்ந்த அபூனுவாஸ், அரண்மனை ஆடம்பரங்களைக் கடிந்துரைத்த அபுஅல்அதாகியா, சிரியாவின் சீர்பெற்ற கவிஞர்கள் அபூஆதம், அபூஅல்அலா, பாரசிகப் பூங்காவிலே பூத்த ஹாலி, ஹாபீஸ், பாலைவனச் சோலையிலே மலர்ந்த ஜாஸிஸ், அல்அக்தல், இஸ்லாத்திற்கு முந்தியகாலக் கவிதைத் தேனைத் திரட்டி முஅல்லகாத் என்னும் பெயரிலே அளித்த ஜுஅத்அல்ருவியா ஆகியோர் உலகக் கவிஞர்களாகக் கருதப்படும் அளவிற்கு உயர்வு பெற்றிருக்கின்றனர்.

எஸ். எம். மீராமுகையதீன்

### பல்வேறு துறைகளில் முன்னேற்றம்

முஸ்லிம்களின் முன்னேற்றம் இலக்கிய வளத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. வரலாறு, வானநூல், தரைநூல், தாவரநூல், கணிதம், ரசாயனம், பௌதிகம், மருத்துவம், விலங்கு நூல், தத்துவ ஞானம், கட்டிடக் கல்வி, நுண் கலை, தொழிற் கல்வி, ஆகிய எல்லாத் துறைகளிலும் அவர்கள் மேலோங்கிச் சிறப்படைந்தனர்.

### முதன் முதலில் உலகப் படம்

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதற்கு முன்னரே முஸ்லிம் மாலுமிகள் இக் கண்டத்தை அறிந்திருந்தனரென்று கூறப்படுகின்றது. முஸ்லிம் தலைவர்கள் ஊட்டிய உணர்ச்சியே கொலம்பஸ்ஸைக் கூட உந்தித்தள்ளியது என்றும் கருதப்படுகிறது. பாரசீகக் குடாவிலே விளையாடிய சுலைமான் ஸிராப் தூர கிழக்கு நாடுகளுக்குக் கப்பலோட்டிச் சென்று அதுபற்றி விரிவாக வரைந்திருக்கின்றனர். ருஷ்யாவுக்குள் நுழைந்த பத்லான் இப்னுஜம்மத் என்பார் ஒரு பிரயாணக் குறிப்பை வரைந்திருக்கின்றார். "முஜாமல் புல்தான்" என்னும் பெயரில் அற்புதமான தரை அகராதி ஒன்று ஆயத்தம் செய்துள்ளார். அல்மாமூம் ஊட்டிய ஊக்கத்தையும், அறுபத்தொன்பதின்மர் அளித்த ஆதரவையுங் கொண்டு காரிஜ்மின் என்பார் முதன் முதலாக உலகப் படத்தை வரைந்துதவினர்.

### கொலம்பஸின் அமெரிக்கப் பிரயாணம்

இப் படத்தின் உதவியின்றேல் கொலம்பஸின் அமெரிக்கப் பிரயாணம் தடைப்பட்டிருச்கும். ஆபிரிக்காவின் நன்னம்பிக்கையில் திக்குத் தெரியாது தவித்துக்கொண்டிருந்த வாஸ்கொடிகாமா, அடல் சான்ற மாலுமியார் அகமது இப்னு மஜீதை சிறைபடுத்தி அவர் எழுதி வைத்திருந்த அரிய கடற்பாதைக் குறிப்பின் துணைகொண்டே கோழிக்கோடு வரமுடிந்ததென்ற உண்மை இன்று எத்தனை பேருக்குத் தெரியும்......?


★ G. C. E. பரீட்சை (ஆங்கிலமும், தமிழும்)

★ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பிரவேசப் பரீட்சை

ஆகிய வகுப்புகளுக்கு தபால் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ மேல் வகுப்புகளுக்கு ஆங்கில, தமிழ்க் கட்டுரைப் புத்தகம் ஒவ்வொன்றின் விலை ரூ. 3-00.

★ ஆங்கிலம்
★ ஹிந்தி

பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.


விபரங்களுக்கு,
சாந்தி கல்லூரி,
தபால் பெட்டி 1398.
கொழும்பு.



எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

இலங்கையின் மிக மிகப் பெரிய நகை வியாபாரிகள்

போன்: 161.



தந்தி: "ஜுவல்லர்ஸ்"

சிறந்த அழகு ✱ சிரிய வேலைப்பாடு

உயரிய கலைத் திறன் ✱ உத்தரவாதம்

யாவும் அமைந்த தங்க நகைகளுக்கு யாழ்ப்பாணம்

தங்க மாளிகை


# உலகுக்கு அமெரிக்க மாது அளித்த 'சர்வதேசப் பாமரர் கலை மியூசியம்'

:o:

## கலைஞர்களின் கைத்திறனைக் கொண்டு ஒற்றுமையை வளர்க்க விழைகிறது

o

### கட்டுக் காவல் எதுவும் இங்கே கிடையாது

உலகிலுள்ள பல்வேறு மக்களும் ஒருவர் ஒருவரைப்பற்றிச் சரியாய் உணர்ந்து ஒற்றுமை ஓங்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு, அமெரிக்க நாட்டில் ஸ்பானிய மக்களின் பண்பு நிறைந்த தென்மேற்குப் பகுதியின் நடுவிலே சாந்தாபே என்னும் இடத்திலே ஒரு கண்காட்சிசாலை உருவாகியிருக்கிறது. ஊர் பேர் தெரியாமல் வாழ்ந்து உலகில் ஆங்காங்கே தத்தம் கைநுட்பத் திறனைக் காட்டிய கைவினைஞர்களின் கலைப் பொருள்கள் பல அங்கே எடுத்துக்காட்டாகக் காட்சி வழங்குகின்றன. 'சர்வதேச பாமரர் கலை மியூஸியம்' என்பது அதன் பெயர்.

### ஒற்றுமையை வளர்க்கும் கலை

தெற்கு ராக்கி மலைகள் தூரத்தே தலை தூக்கி நிற்க, நகரத்துக்குப் புறத்தே குட்டையான பச்சை மரங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக வளர்ந்த மேட்டில் செங்கலும் கண்ணாடியும் சேர்ந்து கட்டிய தாழ்வான நீண்ட அந்தக் கண்காட்சி சாலைக் கட்டிடத்தைக் காணலாம். சாந்தேபே நகரத்தின் முன்னூறாண்டுப் பழமையான பொதுவிடத்திலிருந்து இரண்டு மைலுக்கு அப்பால் பரந்தகன்ற ஒரு நிலத்தில் அக் கண்காட்சி சாலையைக் கட்டியிருக்கிறார்கள்.

இந்தக் கட்டடமும் அதனுள் அமைந்த சாதனங்களும் அதில் முதல் முதல் சேர்ந்த கலைப் பொருள்களில் பாதிக்கு மேலும் சிகாகோ நகர வாசியாகிய கலைப் பொருள் சேகரிப்பாளர் மிஸ் பிளாரன்ஸி டிபெல் பார்ட்லெட் என்பவரது நன்கொடைகளாகும். மக்களினத்தின் கலாசார ஒற்றுமையைப் பாமரர் கலை உறுதியாக்கும் என்பது அவரது திண்ணமான எண்ணம். அந்த நம்பிக்கையை இந்தக் கட்டடத்தின் தலை வாயில் மீது பொறித்திருக்கும் வாக்கியத்தில் காணலாம்: 'கைவினைஞனின் கலை உலக மக்களை ஒன்றுபடுத்தும் பிணைப்பாகும்.'

### உலகெங்குமிருந்து வந்த கலைப் பொருட்கள்

மிஸ் பார்ட்லெட் தம் வாழ்நாளெல்லாம் உலகத்தைச் சுற்றி ஆங்காங்கே சேகரித்த கலைப் பொருள்களே இந்தக் கண்காட்சி சாலைக்கு முதலில் வந்து சேர்ந்தவை. அவர் பல ஆண்டுகளாகவே ஐரோப்பா, ஆபிரிக்கா, கீழ்நாடுகள் இவற்றின் நாட்டுப்புறக் கலையில் ஆர்வம் கொண்டிருந்தார். தொழிற்சாலைகள் வளர வளர அக்கலை மெல்ல மெல்ல அழிந்துபடுவதைக் கண்டு அவர் மிகவும் கவலைப்பட்டார். மறையும் அந்தக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் தமக்குத் தெரியவந்தவற்றையெல்லாம் அவர் வாங்கினார். இவ்வாறு அவருடைய கலைப் பொருள்கள் எண்ணிக்கை பெருகிற்று. பின்னர் அவர் தாம்பெற்றதைப் பிறரும் பெற வேண்டும் என்று விரும்பினார்.

பழமையான ஆடைகள், அணிமணிகள், மண் பாண்டங்கள், மேஜை நாற்காலிகள், பொம்மைகள் முதலியனவெல்லாம் அவர் இக் கண்காட்சிசாலைக்கு வழங்கியுள்ள கலைப் பொருள்களாகும். ஸ்வீடன், நார்வே, ஹங்கேரி இந்நாடுகள் ஒவ்வொன்றிலுமிருந்து நூற்றுக்கு மேற்பட்ட கலைப் பொருள்கள் வந்தன. மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் நிறையக் கிடைத்தன.

ஆபிரிக்கா, சமீபகிழக்கு, தூரகிழக்கு, தென் அமெரிக்கா, மெக்ஸிகோ இவ்விடங்களிலிருந்து கிடைத்த பொருள்கள் பல.

### அமைப்பிடத்தின் அலாதியான சிறப்பு

வட அமெரிக்கக் கண்டத்திலெல்லாம் கலாசாரக் கவர்ச்சிமிக்க இடம் இதுவே என்றெண்ணி மிஸ் பார்ட்லெட் சந்தாபே என்ற இடத்தில் தமது கண்காட்சி சாலையை அமைக்க முடிவு செய்தார்.

கோணல் மாணலான தெருக்களும் குட்டையாய்த் தடித்துத் தோன்றும் வீடுகளும், ஹாலிஹாக் செடு விளங்கும் முற்றங்களும் பைன் மர வாசனை நிரம்பிய காற்றும் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான உல்லாசச் சுற்றுப்பிரயாணிகளை சாந்தாபே ஊருக்கு வரும்படி இழுக்கின்றன. வண்ணம் சான்ற அதன் அழகைத் தேடிக் கலைஞர்கள் வருகிறார்கள்; சரித்திரப் புகழ் நிறைந்த அதன் பெருமையால் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும் வர

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1957 மார்ச் மாதம் 24-ம் திகதி

194 எ. தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 பெ.த. 1183


# திருமலைக்கு ஆபத்து!

ஓரினத்தைப் பலவீனப்படுத்தி அழித்தொழிப்பதற்கு மூன்று வழிகள் உள்ளன:

1. ஓரின மக்களுடைய வாக்குரிமை, பிரஜா உரிமைகளைப் பறித்து அதன்மூலம் அவர்களுடைய பிரதிநிதிகள் ஆட்சி மன்றத்துள் நுழையாவண்ணம் தடுப்பது ஒருவழி.

2. வேற்றின மக்களை அபரிமிதமாகக் குடியேற்றுவதன் மூலம் ஓரின மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களைப் பறித்து அவர்களை அவர்களுடைய சொந்த இடத்திலேயே சிறுபான்மையாக்கி அவர்களுடைய அரசியல் பிரதிநிதித்துவத்தை அபகரிப்பது இன்னொரு வழி.

3. ஓரின மக்களுடைய மொழியுரிமையைப் பறித்து அவர்கள்மீது வேற்றொரு மொழியை வலுக்கட்டாயமாகத் திணிப்பது மூன்றாவது வழி.

இந்த மூன்று வழிகளில் எந்த ஒரு வழியைக் கடைப்பிடித்தாலும் ஓரினத்தின் பலத்தைப் படிப்படியாகக் குறைத்து அவ்வினத்தை முடிவில் அழித்துவிடலாம். இலங்கையில் வாழும் தமிழ் பேசும் இனத்தை அழித்தொழிப்பதற்கு வெறிபிடித்த இந்தநாட்டு சிங்கள அரசாங்கம், ஒன்றல்ல, மூன்று வழிகளையும் ஒருசேரக் கடைப்பிடித்து வந்திருக்கிறது; கடைப்பிடித்து வருகிறது.

யு. என். பி. ஆட்சி இருந்த காலையில் முதல் இரண்டு வழிகளும் வெளிப்படையாகவும், மூன்றாவது வழி மறைமுகமாகவும் கையாளப்பட்டன. ஆனால் எம். ஈ. பி. அரசாங்கம் வந்ததும் முதலிரண்டு வழிகளோடு மூன்றாவது வழியும் மூர்க்கத்தனமாகக் கையாளப்படுகிறது.

யு. என். பி. அதிகாரத்திலிருந்தபோதே தமிழ் பேசும் இனத்தின் சரி பாதியினரும், நமது சகோதரர்களுமான மலைநாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமை, பிரசா உரிமை ஆதியன அபகரிக்கப்பட்டன. இதனால் தமிழ் பேசும் இனத்திற்குப் பாராளுமன்றத்தில் இருந்த ஏழு ஸ்தானங்கள் பறிபோயின.

யு. என். பி. ஆட்சியிலிருந்தபோதே தமிழ் மாகாணங்களில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. இதைத் தடுத்து நிறுத்தாவிட்டால் தமிழ் மாகாணங்களின் பிரதிநிதிகளும் சிங்களவர்களாகி விடுவார்கள் என்பதைக் கண்டறிந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் அப்போதே எதிர்ப்புக் கோஷம் எழுப்பத் தலைப்பட்டனர். ஆனால் இந்த அபாயத்தை உணராதவர்கள் போல் நடித்துக்கொண்டு பொன்னம்பலங்களும், நடேசன்களும், குமாரசாமிக்களும், நல்லையாக்களும், எதிர்மன்னசிங்கங்களும் சுயநலத்திற்காக அரசாங்கத்துடன் ஒத்தூதித் தமிழ் இனத்திற்குத் துரோகம் புரிந்தனர்.

இடதுசாரிகள் எனப்படும் கொம்யூனிஸ்டுகளும், சமசமாஜிசளும் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் அநியாய சிங்களக் குடியேற்றங்களைப்பற்றி அன்றும் வாய் திறந்ததில்லை; இன்றும் வாய் திறக்கவில்லை.

அன்று தமிழரசுக் கட்சியார் விடுத்த அபாய அறிவிப்பு இன்று அல்லது இன்னும் சிலகாலத்தில் திதர்சனமாகப் போகிறதென்பதை இப்போது அறியக்கூடியதாக இருக்கிறது. சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுவரும் வேகத்தில் வரிசை வாரியாக முதலில் திருகோணமலைத் தொகுதி அதைத் தொடர்ந்து மூதூர், கல்முனை, பட்டிருப்பு, வவுனியா ஆகிய தொகுதிகள் சிங்களப் பெரும்பான்மை கொண்ட தொகுதிகளாக மாறப்போகின்றன. இன்று தமிழ்த் தொகுதிகளாக இருக்கும் மேற்படி தொகுதிகளிலிருந்து அடுத்த பொதுத் தேர்தலில் அல்லது அதற்கடுத்த பொதுத் தேர்தலில் சிங்களவர்கள் பிரதிநிதிகளாக வரப்போகிறார்கள்.

இந்தப் பேராபத்துக்குள் முதன் முதலில் திருமலைதான் சிக்கியிருக்கிறது. இந்த ஆபத்தை அப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்கள் நன்கு உணர்ந்து கலவரமடைந்துள்ளார்கள் என்பதை இன்றைய சுதந்திரனின் முற்பக்க முதல் செய்தி ஊர்ஜிதம் செய்கிறது.

திருகோணமலையிலுள்ள கடற்படைத் தளத்தை மூடிவிடுவதென்று அரசாங்கம்முடிவு செய்திருக்கிறது. அப்படி மூடப்பட்டால் தொழிலுக்காகத் திருமலையில் குடியேறியிருக்கும் யாழ்ப்பாணம் மட்டக்களப்புத் தமிழ் மக்கள் தத்தம் சொந்த ஊர்களுக்குத் திரும்பிவிடுவார்கள். இதனால் திருமலையில் தமிழ் பேசும் வாக்காளர் தொகை பெருமளவில் குறைவுபடும். அதேசமயத்தில் திருமலையிலுள்ள கடற்படைக் கட்டடங்களில் இலங்கை இராணுவத்தைக்கொண்டுபோய் முகாமடித்துவிட அரசாங்கம் எண்ணியுள்ளது இதுவும் நிறைவேறுமானால் ஆறுமாத காலத்தில் அத்தனை பட்டாளக்காரரும் திருமலையில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாகிவிடுவார்கள். போதாக்குறைக்கு திருகோணமலைப் பகுதியில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றமும் அசுரவேகத்தில் நடைபெற்று வருகிறது. ஆகவே அடுத்த பொதுத் தேர்தலில் திருகோணமலை சிங்களத் தொகுதியாகிவிடும் அபாயம் தலைக்குமேல் தொங்கிக்கொண்டிருக்கிறது.

சரித்திர, இதிகாச, தேவாரப் புகழ்பெற்ற திருமலையைத் தமிழ் பேசும் மக்கள் இழக்கப்போகிறார்களா, அன்றி அதைப் பாதுகாத்து தங்கள் உரிமையை நிலைநாட்டப்போகிறார்களா? இது இன்று விசுவரூபத்தில் கிளம்பியுள்ள ஒரு பிரச்னையாகும். பாதுகாக்க விரும்பினால் எப்படிப் பாதுகாப்பது என்பது அடுத்து வரும் கேள்வி.

திருமலை வாலிபர்கள் இதற்கு ஒரு அருமையான தடுப்பு வழியைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது: "திருமலையிலுள்ள கடற்படைத் தொழிற்சாலைகள் அண்மையில் மூடப்படவிருக்கின்றன. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அங்கு பயங்கர ரூபத்தில் தலையெடுக்கப்போகிறது. ... வும் அங்கு ஜீவிப்பவர்களுள் யாழ்ப்பாணவாசிகளும் மட்டக்களப்புவாசிகளும் பெருந்தொகையாகவுள்ளர். வேலையிழந்ததும் அவர்கள் தங்கள் தங்கள் தாயகம் திரும்பிவிடுவார்கள் அதன் பின்பு அரசாங்கம் சிங்கள மக்களை அங்கு குடியேற்றி தமிழ் பிரதேசம் அனைத்தையும் சிங்களப் பிரதேசமாக்க முயற்சிக்கும். இந்த நிலை ஏற்படாமல் தடுக்கத் தகுந்த திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

"கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள பெரும் பணக்காரர்களான தமிழர்களை ஒன்று சேர்த்து திருமலையில் சில கைத்தொழிற்சாலைகளை ஆரம்பித்து அங்கு ஏற்படப்போகிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். அதன் மூலம் கடற்படைத் தளத்தில் வேலையிழப்பவர்கள் திருமலையைவிட்டு யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் திரும்பிப் போய்விடாதபடி தடுத்து நிறுத்த வேண்டும்"

திருமலை வாலிபர்களின் மேற்படி கோரிக்கை மிகவும் நியாயமானது என்றும் அவசியம் நிறைவேற்றப்பட வேண்டியது என்றும் நாம் கருதுகிறோம். பணம் படைத்தவர்கள் திருமலையைத் தமிழ் இனத்தின் சந்ததிக்கு நிரந்தரமாகக் காப்பாற்றிக் கொடுக்க தாராளசித்தையுடன் முன்வர வேண்டும்.

முதலில் சிறு சிறு தொழிற்சாலைகளை அங்கு ஆரம்பிக்கலாம். சவர்க்காரத் தொழிற்சாலை, தீப்பெட்டித் தொழிற்சாலை, நெசவுத் தொழிற்சாலை, குடைத் தொழிற்சாலை முதலியன ஆரம்பிக்கப்படலாம். அங்கு உற்பத்தியாகும் பொருட்களைச் சுதேசிப் பொருட்கள் என்று பிரகடனப்படுத்தி அவற்றையே தமிழ் பேசும் மக்கள் வாங்கி ஆதரிக்கவும், பிறஇடத்துப் பொருட்களைப் பகிஷ்கரிக்கவும் வேண்டிய இயக்கத்தை தமிழ் அரசுக் கட்சிபோன்ற செல்வாக்குள்ள அரசியல் கட்சிகள் நாட்டில் நடத்த வேண்டும். இதன்மூலம் திருமலை பறிபோய்விடாமல் ஓரளவுக்குக் காப்பாற்றலாம் என்பது உறுதி.

இந்தப் பெரும் பணியை—கடமையைச் செய்ய பணம் படைத்த தமிழ்ப் பிரமுகர்களும், தமிழரசுக் கட்சியும் காலந்தாழ்த்தாது முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

# பொத்துவில் பிரதிநிதி ஜனுப் முஸ்தபா வில்லங்கங்களை விளக்கிக்கொண்டு அறப்போர் அணியை அணுகுகிறார்

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

நீண்டநாட்களுக்குப் பிறகு பொத்துவில் தொகுதிப் பிரதிநிதி ஜனுப் எம். எம். முஸ்தபா கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்ற பிரமாண்டமான ஒரு தமிழ் அரசுக் கட்சிக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கி அரியதோர் சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார். திறந்த மனதோடு அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களை நியாயபுத்தி படைத்த எவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அவர் பேச்சு விரும்பத்தக்கது, வரவேற்கத்தக்கது.

ஜனுப் முஸ்தபா கொஞ்சகாலம் தமிழரசுக் கட்சி மேடைகளில் காணப்படாமல் மறைமுகமாயிருந்தார். அவர் ஏன் அப்படியிருக்கிறார்? அவரும் அவருடைய மாமனார் ஜனுப் காரியப்பரைப்போல கொள்கை மாறப்போகிறாரா? அவர் மதில்மேல் பூனையாக இருந்து வருவதன் மர்மம் என்ன என்று பலர் சுதந்திரனுக்கு எழுதிக் கேட்டிருந்தார்கள். நம்மிடம் கேட்டதுபோலவே பலர் ஜனுப் முஸ்தபாவிடமும் கேட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஏனென்றால் அவர் தமது பேச்சிலேயே இந்தப் பிரச்னையைக் கிளப்பிப்பதில் கூறியுமிருக்கிறார்.

சுதந்திரனைப் பொறுத்தவரையில் நாம், ஜனுப் முஸ்தபாவின் மௌனத்தைப் பற்றிக் கவலையோ, மனவருத்தமோ, பலவீனமோ, சந்தேகமோ கொண்டதில்லை. அரசியலில் ஜனுப் முஸ்தபாவுக்கு ஏற்பட்டிருந்த அடிப்படை வில்லங்கங்களையும் நெருக்கடிகளையும் நாம் அறிந்திருந்தோம். அவ்வளவு வில்லங்கங்களையும், நெருக்கடிகளையும்தாங்கிக்கொண்டு, வாய்திறந்து பேசாவிட்டாலும், கட்சியின் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாவிட்டாலும், அவர் தமிழரசுக் கட்சியோடு ஒட்டிக்கொண்டிருப்பதே பெரிய காரியம், பாராட்டக்கூடிய சாதனை என்பதை நாம் உணர்ந்திருந்தோம்.

தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரித்து ஆள்வதல்ல, பிரித்து அழிக்க வேண்டும் என்ற திட்டத்துடன் இன்றைய எம். ஈ. பி. அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்கு சலுகைகள் என்ற பெயரில் உரிமைகளையோ, உரிமைகள் என்ற பெயரில் சலுகைகளையோ வழங்கி வருகிறது. இதனால் முஸ்லிம் தலைவர்கள் பலர் எம். ஈ. பி. எஜமானர் முன்பு வாலாட்டிக்கொண்டு நிற்கின்றனர். எம். ஈ. பியின் சூழ்ச்சியை விளங்கிக்கொள்ள முடியாத முஸ்லிம் பொதுமக்கள் பலர் மேற்படி தலைவர்கள் போகிற வழி சரியான வழி என்று தவறுக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் ஜனுப் முஸ்தபா மட்டும் அரசாங்கத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சியுடன் சார்ந்து நிற்பது ஒன்றே ஒரு பெரிய வீரச் செயலெனலாம். தமிழ் மக்களையும், தமிழ் மொழியையும் எம். ஈ. பி. அரசாங்கம் கண்ணுக்கு முன்னே காலின் கீழ் போட்டு மிதிப்பதை கண்ணாரக் கண்டுகொண்டும், தம்மை ஒரு தமிழ் மகன் என்று வெட்கமில்லாமல் சொல்லும் எதிர்மன்னசிங்கம்போன்ற தமிழ்த் துரோகிகள் எம். ஈ. பி. அரசாங்கத்தைக் கட்டித் தழுவுகையில் ஜனுப் முஸ்தபா போன்ற ஒரு முஸ்லிம், வாய் திறந்து பேசாவிட்டாலும், செயல் புரிந்து சிறக்காவிட்டாலும், அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் கட்சியைச் சார்ந்து நிற்பது எவ்வளவோ மேலல்லவா?

> **அடுத்த வாரம்**
>
> திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் ருஷிய ப் பிரயாணம் இந்த நேரத்தில் முறையானதா? சரியானதா? அவசியமானதா? என்பதைப் பற்றி "சுதந்திரன்" அரசியல் விமர்சகர் ஆராய்வார்.

ஜனுப் முஸ்தபாவிற்குப் பலவிதமான வில்லங்கங்களும் நெருக்கடிகளும் உண்டென்று குறிப்பிட்டோம். இலங்கைத் தமிழரசுக் கட்சி கடந்த எட்டுப்பத்து மாதங்களாக இலங்கையின் அரசியல் இயக்கத்தை முன் என்றும் இல்லாதவாறு புதுமையான வழிகளில் நடத்திச் செல்லுகிறது என்பதை யாவரும் அறிவர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியையாளும் இந்தப் புது வழியை அரசியலில் தீவிரமான வழி என்று கூடச் சொல்லலாம். பேச்சளவில் நில்லாமல் செயலளவிலும் அவர்கள் சத்தியாக்கிரகம் என்றும், ஹர்த்தால் என்றும், சட்டமறுப்பு என்றும் அரசியல் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மேலும் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த வழிகளில் அவர்கள் தங்களைத் தாங்களே சுய இம்சைக்குள்ளாக்கி பொறுமையோடும் தியாக உணர்ச்சியோடும் சேவை செய்ய வேண்டியிருக்கிறது. இந்த வழி முறைகள் எல்லாம் இலங்கை அரசியல்வாதிகளுக்கு புதிய பாடங்களாகும். காந்திய அரசியலில் முற்றுகத் தோய்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இந்த வழிகள் சகஜமானவையாயிருக்கலாம். இவற்றை அவர்கள் பெருமையோடும் ஒருவகை மன எழுச்சியோடும் கடைப்பிடிக்கலாம். ஆனால் இந்த வழிகளைக் கட்சியிலுள்ள எல்லோரும் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களில் பலர் கட்சி அங்கத்தவர்களாய் இருந்தபோதிலும், கட்சியின் கொள்கைகளிலும் நெறிமுறைகளிலும் ஊறியிராத எத்தனையோ பேர்களுக்கு இவ்வழிகள் நவீனம் பொருந்தியவையாய் மாத்திரமல்ல, வில்லங்கந் தருவனவாயும் தோற்றலாம். ஆகையினால் மக்களில் ஒரு சாரார் தமிழரசுக்கட்சியின் பரித்தியாக முறைகளின் வலிமையையும் நேர்மையையும் அறிந்து ஆதரித்த போதிலும் மற்றும் சிலர் அவற்றின் நுட்பத்தைவிளங்கிக்கொள்ள முடியாதவர்களாய் ஆச்சரியப்பட்டு நிற்கவுங்கூடும்.

முஸ்லிம் மக்களிடம் இப்படி இரண்டுபட்ட அபிப்பிராயம்கொண்டவர்கள் இருக்கிறார்கள். ஒருசாரார் தமிழரசுக் கட்சியின் எதிர்ப்புப் போராட்ட முறைகளைப் பரிபூரணமாக ஆதரிப்பவர்களாகவும் இருக்கலாம். இன்னொரு சாரார் இக்கோட்பாடுகளுக்கு மாறுபட்டவர்களாகவும் இருக்கக்கூடும். மட்டக்களப்புத் தென்பகுதியில் வாழும் முஸ்லிம்களிடையே தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும் கோரிக்கைகளையும் ஆதரிப்பவர்கள் இருப்பதுபோலவே, தமிழரசுக் கட்சியின் அரசியல் நடைமுறைகளில் அபிப்பிராயபேதம் உடையவர்களும் இருக்கிறார்கள். அரசியல் துறையில் ஜனுப் முஸ்தபா ஒரு கரையில் மூர்த்தண்ணியமாக இறங்குவதற்கு மேற்படி அபிப்பிராயபேதம் ஒரு முட்டுக்கட்டையாக இருந்திருக்கக்கூடும்.

ஆனால் இந்த விஷயத்தில் ஜனுப் முஸ்தபாவும், தமிழரசுக் கட்சியும் காட்டிய பொறுமையினால் இந்த முட்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்.. அணைக்கட்டில் இரு பெரும் வெடிப்புகள்!

## தமிழ் பேசும் மக்கள் தப்பிக்கொள்ள தமிழரசுக் கட்சியைத் தழுவவேண்டும்

### தமிழுக்கு சம அந்தஸ்துப் பெருமல் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழமாட்டார்கள்

### மட்டக்களப்புப் பொதுக் கூட்டத்தில் ஜனுப் முஸ்தபா தலைமையுரை

“கல்லோயா நீர்த்தேக்கத்தில் வெள்ளத்தினைத் தடுப்பதற்குக் கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான அணைக்கட்டில் இரண்டு பெரிய வெடிப்புகள் ஏற்பட்டது போன்று, தமிழ்ப் பேசும் மக்களுக்கு வரக்கூடிய இக்கட்டுகளைத் தடுப்பதற்கு தமிழரசுக் கட்சி கட்டிக்கொண்டுவரும் பெரிய அணைக்கட்டில் இரு பெரிய வெடிப்புகள் ஏற்பட்டுவிட்டன. என்னைப் பொறுத்தளவில் ஒரு வெடிப்பு மிகப் பெரியது என்றே கருதவேண்டும். முதலியார் காரியப்பரும், எதிர்மன்னசிங்கமும் எம். ஈ. பி.யுடன் சேர்ந்ததனுல் உண்டான வெடிப்புகள்தான் இவைகள். இந்த வெடிப்புகள் விபரீதம் விளைவிக்கு முன்னர் அவைகளை சரியான முறையில் அடைத்துவிடுவதே தமிழ்ப் பேசும் மக்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கும் முக்கிய கடமையாகும்.” இவ்வாறு சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாபெரும் பொதுக்கூட்டமொன்றுக்குத் தலைமைவகித்துப் பேசிய பொத்துவில் பிரதிநிதி ஜனுப் எம். எம். முஸ்தபா கூறினுர்.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:-

“சில வேளைகளில் சிலர் என்னைப்பற்றி பலபடக் கதைப்பதை நான் அறிவேன். நான் ஏன் மௌனம் சாதிக்கிறேன்? நான் ஏன் இதைச் செய்யவில்லை? நான் ஏன் அதைச் செய்யவில்லை என்று என்னிடம் பலர் கேட்கிறுர்கள் நம்வருட் பலர் செய்யும் பிழை என்னவென்ருல் எவனையாவது, அவன் செய்யாததைக் கொண்டு கணிப்பதாகும். செய்தவைகளை எல்லாம் மறந்துவிட்டு, செய்யாதவைகளைப் பற்றிக் கூறிக் குறை கூறுவதே நம்மவர்களில் பலரின் வழக்கமாகிவிட்டது. ஏதாவது ஒரு விஷயத்தில் கொஞ்சமேனும் தாமதம் ஏற்பட்டுவிட்டால் போதும். முஸ்தபாவைப் பற்றி பலதும் பத்தும் கதைக்க முற்பட்டுவிடுகின்றனர். இன்றைய அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் முஸ்லிம்களுக்கு என்னவோ, செய்ய வேண்டியவைகள் செய்து கொடுக்கின்றது. அதை நான் மறைத்துப் பேச முடியாது. ஆனுல் அவைகள் சலுகைகளா உரிமைகளா என்பது வேறு விஷயம்.

#### தமிழுக்கு சம அந்தஸ்து

இலங்கைவாழ் முஸ்லிம்களின் தாய்ப் பாஷை ஆட்சேபனைக்கிடமின்றி தமிழே என்று நாம் பலமுறை ஆணி அறைந்தாற்போல் கூறிவிட்டோம். இந்த விஷயத்தில் சிங்களப் பகுதியில் வசிக்கும் சேர் ருஸிக் பரீத், மரைக்கார் போன்றவர்கள் எது சொன்னுலும், தமிழுக்கும் சிங்களத்திற்கும் சமஅந்தஸ்துப் பெருமல் கிழக்கிலங்கையில் வாழும் முஸ்லிம்கள் நிம்மதியுடன் வாழமாட்டார்கள். கிழக்கிலங்கையில் இருந்து போன முஸ்லிம் பிரதிநிதிகள் எவராவது எனது இந்த அபிப்பிராயத்திற்கு மாற்றமுடையவர் என்று சொல்ல இடமில்லை. முதலியார் காரியப்பர்கூட இன்றும் சமஅந்தஸ்திற்குப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்வதையும் நாம் அறிவோம். அதே நேரத்தில் அவரும் எதிர்மன்னசிங்கமும் ஒரு கட்சியில் சேருவது அந்தக் கட்சியின் கொள்கைத் திட்டங்கள் அத்தனையையும் ஆதரிப்பதாக முடியும் என்பதை மறந்துவிட்டனர். எம். ஈ. பி.யில் சேர்ந்ததன்மூலம் எம். ஈ. பி.யின் சிங்களம் மட்டும் கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டதாகவே தான் கருத்து.

எனது தொகுதியில் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட விருக்கின்றது. பொத்துவில் தொகுதியில் உள்ள ஒவ்வொரு அங்குல நிலமும் அத்தொகுதி மக்களுக்கே சொந்தம். எந்தவித இக்கட்டுவந்தாலும், எனது உயிருள்ள வரை அந்நியர் வந்து எனது தொகுதியில் குடியேற இடம் கொடுக்க மாட்டேன். நான் பாராளுமன்றத்தில் இருக்கையில் அப்படி ஏற்படுமாயின் நான் பதவியில் இருக்க மாட்டேன்.



ஜனுப் எம். எம். முஸ்தபா

#### தமிழரசுக் கட்சி

எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய இக் கட்டுகளில் நின்றும் தமிழ்ப் பேசும் மக்கள் தப்பிக் கொள்ள வேண்டுமென்ருல் தமிழரசுக் கட்சியை எல்லாரும் தழுவிக் கொள்ள வேண்டும். இக்கட்சிதான் நூற்றுக்குநூறுவீதம் தமிழ்ப் பேசும் மக்களினது நலவுரிமையில் கண்ணுங் கருத்துங்கொண்டுள்ளதென்பதை நாம்மனதிற் கொள்ள வேண்டும்.”

கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், கு. வன்னியசிங்கம், மஷூர் மௌலானு, எஸ். எம். இராசமாணிக்கம் எம். மாணிக்கம், செ. இராசதுரை, செல்வி பத்மாவதி வேலுப்பிள்ளை முதலியோரும் பேசினர். கூட்டத்தின் பிற்பகுதிக்கு மட்டக்களப்பு நகராண்மைக் கழகத் தலைவர் எஸ். டி. கனகசபை தலைமை வகித்தார். செல்வி செல்வநாயகி அமரசிங்கம் தேசிய கீதங்கள் பாடினுர்.

## பொத்துவில் பிரதிநிதி ஜனுப் முஸ்தபா

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கட்டையும், எதிர்ப்பும் படிப்படியாகக் குறைந்து வந்துவிட்டன என்பதையே ஜனுப் முஸ்தபாவின் கடந்த வார அரசியல் மேடைப் பிரவேசம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இன்றைக்குப் பார்க்கும் அளவில் தமிழ்பேசும் மக்கள் அரசாங்கத்தை ஒரே பிடியாக எதிர்த்து நின்று போராடுவதுதான் வெற்றியை ஈட்டுவதற்கு வழியென்பதைப் பலரும் உணர்ந்துகொண்டு வருகிறுர்கள். தமிழரசுக் கட்சி அமைப்பு ரீதியாகக் காட்டிய எதிர்ப்பு பல துறைகளிலும் அரசாங்கத்தைப் படிப்படியாகப் பணிந்துகொண்டு வரச் செய்திருக்கிறது. ஒரு சிறு உதாரணத்தை மட்டும் இங்கு நாம் குறிப்பிடலாம். உள்நாட்டமைச்சர் திரு ஜயசூரியா சில மாதங்களுக்கு முன்பு தனிச் சிங்கள மொழியில் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு ஒரு விருந்தழைப்பு அனுப்பியது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்த விருந்தழைப்பில் தமிழ் மொழி இடம் பெருத காரணத்தால் தமிழ் அரசுக் கட்சியினர் மேற்படி விருந்தை மட்டுமல்ல விருந்தழைப்பையே நிராகரித்து அதைத் திருப்பி உள்நாட்டு அமைச்சருக்கே அனுப்பி வைத்தனர்.

இதன் பின்னர் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களுக்கு அனுப்பப்பட்ட அரசாங்க வைபவ அழைப்புகள்யாவற்றிலும் தமிழ் மொழி இடம் பெறத் தவறவில்லை. அதுவும் அழகான அச்செழுத்தில் இடம்பெற்றுவருகிறது. ஆனுல் எதிர்மன்னசிங்கம் போன்ற “சிங்களவர்”களுக்கு இவ்வழைப்புகள் இன்னும் சிங்களத்திலேயே போய்க்கொண்டிருக்கின்றனவாம்! எதிர்ப்பு கைமேலளித்த பலனுக்கு இது ஒரு சிறு உதாரணந்தான். இதைப்போலவே “சிறீ” எதிர்ப்புப் போராட்டமும், சுதந்திரதினத்தன்று நடந்த ஹர்த்தாலும் பிரதமர் பண்டாரநாயகாவின் கண்களை சிறிதளவு திறந்திருக்கின்றனவென்று சொல்லலாம். அவர் வாயிலிருந்து “வட்டமேசை”, “தமிழுக்கு நியாயமான அந்தஸ்து”, “பிரதேச சபைகள்” என்ற பேச்சுக்களெல்லாமல் பிறப்பதற்கே தமிழரசுக் கட்சி நடத்திவரும் எதிர்ப்பே மூலகாரணம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இந்த உண்மையை தமிழ் மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களும் இப்போது உணரவும், எதிர்ப்பினுல் வெற்றி கிட்டப்போகின்றதென்பதை ஊகித்தறியவும் முற்பட்டிருக்கின்றனர். இதன் காரணமாகவும் ஜனுப் முஸ்தபாவுக்கு முன்னுல் போடப்பட்டிருந்த முட்டுக்கட்டைகள் இப்போ தளர ஆரம்பித்திருக்கின்றன.

ஜனுப் முஸ்தபா இலங்கை அரசியலில் ஒரு கேந்திரஸ்தானத்தின் பிரதிநிதி. தமிழ் இனத்தின் சகல அறப்போராட்டங்களுக்கும் அவருடைய ஆதரவும் அவருடைய தொகுதி மக்களின் ஆதரவும் பெரும் பயனைத் தரவல்லன. எனவே அவர் தமது சொந்த விலங்கங்களையும் நெருக்கடிகளையும் தீர்த்துக்கொண்டு வருமளவும் அவரை நெருக்காமலும் நிர்ப்பந்திக்காமலும் பொறுத்திருக்க நாம் தயாராய் இருந்துள்ளோம்.

### சு. கு. போட்டி ஒரு விளக்கம்

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 36ல் இடமிருந்து வலம் 25- “இது நன்ருயில்லாவிட்டால் சினிமாவை நன்கு ரசிக்க முடியாது” என்று குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு கூப்பனில் தரப்பட்டிருக்கும் முதல் எழுத்து என்ன?

ஒ—அல்லது—ஓ என்று தெளிவாகத் தெரியவில்லை. இப்படியாக மன்னுரிலிருந்து திரு பொ. நாகராஜா என்பவரும் மற்றும் எட்டுப் பேரும் சந்தேகம் தெரிவித்துள்ளார்கள்.

அந்த முதல் எழுத்து ஒ தான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேம்.

—போட்டி ஆசிரியர்

## திருமலை சிங்களத் தொகுதியாகும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

#### நகராண்மைக் கழக உறுப்பினர் பேட்டி

இதே விஷயம் சம்பந்தமாக திருகோணமலையிலுள்ள ஒரு பிரமுகரும் நகராண்மைக் கழக உறுப்பினருமான திரு வி. ஆறுமுகம் நமது நிருபரிடம் தெரிவித்ததாவது:

“திருகோணமலையிலுள்ள தமிழ் பேசும் மக்களிடையே இப்போது பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. நடுத்தர மக்களுக்கும் தொழிலாளருக்கும் ஏற்படவிருக்கும் வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமுமே இப்பரபரப்பிற்குக் காரணமாகும். மக்கள் இன்றைய அரசாங்கத்திடம் விசுவாசமற்றவர்களாகிவிட்டார்கள். அவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறும் நிலையை அடைந்து வருகிறுர்கள். இன்றுள்ள நிலை சீர்செய்யப்படாவிட்டால் எந்த நிமிஷத்திலும் பலாத்கார சம்பவங்கள் நடைபெறலாம்.

#### குடியேற்றக் கொள்கைதான் காரணம்

“இந்தக் கலவர நிலை உருவாவதற்கு அரசாங்கம் பல வருடங்களாகக் கடைப்பிடித்துவரும் குடியேற்றக் கொள்கை பிரதான காரணமாகும். மொழிக் கொள்கை நிலைமையை மேலும் படுமோசமாக்கியிருக்கிறது. மந்திரிகளும், சிங்கள அரசாங்க உத்தியோகஸ்தர்களும் இங்கு [illegible] தலைவர்களின் [illegible]மான புகார்களுக்கு ஆராய்வின்றிச் செவிகொடுத்து ஓரவஞ்சனையாக நியாயம் வழங்கிவருகின்றனர். இங்கு நடைபெறும் பல சம்பவங்கள் பத்திரிகையில் இடம் பெறுவதில்லை.

“தமிழ் பேசும் பெரும்பான்மை மக்களைக்கொண்ட இப்பிரிவில் வெளியூர் சிங்களவர்களே பெரும்பாலும் உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்படுகின்றனர். திருமலைப் பிரதிநிதி, மூதூர்ப் பிரதிநிதி ஆகியோருடைய ஆட்சேபனையையும்பொருட்படுத்தாமல் இப்பிரிவிலுள்ள குடியேற்றத் திட்டங்களில் குடியேற்ற அதிகாரிகளாக சிங்களவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். நீண்ட கால முறையீட்டின் பின்னர் அல்லைக் குடியேற்றத் திட்டத்தில் ஒரே ஒரு தமிழ் குடியேற்ற அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். கந்தளாய்க் குடியேற்றத் திட்டத்தில் உள்ள சகல குடியேற்ற அதிகாரிகளும் சிங்களவர்களாகவேஇருந்து வருகின்றனர்.

#### எல்லோரும் சிங்களவர்

“திருமலைப் பிரதிநிதி எதிர்ப்புத் தெரிவித்துங்கூட கட்டுக் குளம் மேற்கில் உணவு உற்பத்தி இலாகாவிற்கு சகல உத்தியோகஸ்தர்களையும் சிங்களவர்களாகவே நியமிக்கும்படி சம்பந்தப்பட்ட மந்திரியார் அந்தரங்கக் கட்டளை அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கட்டுக்குளம் பற்று [illegible] உள்ள [illegible]த்தி அதிகாரிகளும் இன்றுவரை சிங்களவர்களாகவே இருந்து வருகிறுர்கள். அரசாங்கத்தின் கொள்கை இனவாரியாகப் பேதங்காட்டி நியமனங்கள் செய்வதுதானு என்று கேட்கப்படுகிறது.

“எல்லாவற்றிற்கும் மேலாக அரசாங்கம் திருமலையிலுள்ள கடற்படைத் தளத்தை மூடிவிடும்படி கேட்டுள்ளது. இதனுல் இங்கு வேலைபார்த்துவரும் 6000க்கு அதிகமானேர் பெருங் கஷ்டத்துக்குள்ளாகப்போகிறுர்கள். திருகோணமலையிலுள்ள தமிழ்ப் பேசும் மக்களின் பலத்தைக் குறைத்து சிங்கள மக்களை அதிகரித்து திருமலையையும் மூதூர்த் தொகுதியையும் சிங்களத் தொகுதிகளாக்கிவிடுவதே அரசாங்கத்தின் இந்த இரகசிய நடவடிக்கையின் உள்ளாந்தரம் என்று இங்குள்ளோர் ஐயுறவு கொண்டுள்ளனர்.

#### வினையாக முடியும்

“கடற்படைத் தளத்திலிருந்து வெளியேற்றப்படும் ஊழியர்களுக்கு இங்கேயே வேலைகொடுக்க உருப்படியான திட்டங்கள் உடனடியாக வகுக்கப்பட வேண்டும். அரசாங்க தொழில் இலாகா இந்த வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

“இங்கு வாழும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு நீதி வழங்க அரசாங்கம் தவறுமானுல் அது அரசாங்கத்திற்குத்தான் வினையாக முடியும்.”

## காங்கிரஸ்....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

17-3-57 இதழில் ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது.

#### தி. மு. கவுக்கு ஆதரவு

சுயேச்சை அங்கத்தவர்களுக்குத் தென்னாட்டு அரசியலில் உண்மையான அக்கறையும் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்க வேண்டுமேயென்ற பொறுப்புணர்ச்சியும் உண்மையாகவே இருக்குமாயின், சென்னை சட்ட சபையில் எதிர்க்கட்சி அமைக்க 14 செயல்வீரர்களையும் 1 வீராங்கனையையும் தந்துள்ள தி. மு. கவுக்குத் தமது முழு ஆதரவையும் அளிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலநறுவைப் புராதனச் சிலை பராக்கிரமபாகுவினுடையதா?

## தாடியும் மீசையும் அரைக்குக்கீழாடையும் கையிலேடும் உடையது மன்னன் சிலையாகுமா?

## சாயலையும் கல்வெட்டு சான்றையும் கொண்டு புலத்திய முனிவன் சிலை என்பதே பொருந்தும்

பொலன்னறுவையில் தமிழரின் அறம் கூறப் பல சான்றுகள் உள. முக்கியமாக பல சிலைகள் உள. அவைகளில் ஒன்று மிகப் பிரதானமானது. இச்சிலையை பராக்கிரமபாகுவின் உருவச் சிலை என்று சிலர் கூறுகின்றனர்.

### விசித்திரம்

இங்கேதான் தமிழரின் சரித்திரம் சாய்கிறது! வீரம் விலைகூறப்படுகிறது! பண்புகள் பறிபோகின்றன!! உரிமைகள் உதாசீனம் செய்யப்படுகின்றன!!! காரணம்? சில சிங்களச் சகோதரர்களின் மொழி வெறி! அதிகார ஆணவம்!! விசித்திர விளையாட்டுக்களை விவரித்துக் கூறும் விநோதச் சரித்திரத்தில் இச்சிலையை பராக்கிரமபாகுவின் உருவச் சிலையென்று பொறித்திருக்கிறார்கள். உருவச் சிலையை உற்று நோக்கினால் "இது மன்னனது உருவச் சிலை" என்று கூறிய சரித்திர ஆசிரியரை கைகொட்டி நகைக்கத்தான் தோன்றும். அவர்களின் சரித்திரப்படி பராக்கிரமபாகு பலசாலி; பரணியாண்டவன்; பகைவரை அடக்கி ஒடுக்கியவன்; காடுகடந்து, மலைகடந்து தன் ஆதிக்கத்தைப் பரப்பியவன். அப்படிப்பட்ட மன்னனின் சிலை இப்படியா இருக்கும்? ஆராய்ச்சியாளர் ஜே. பி. எச். வோகெல் கூறுவது போல், தரணியாண்டவனின் தலையில் முடியில்லை; உடலின்மேல் விலையுயர்ந்த ஆபரணங்கள் இல்லை. இவையிரண்டும் கீழைத்தேச அரசர் இலக்கணங்களா! படை தாங்கியவன் இங்கே ஏடு தாங்குவது விசித்திரமாயிருக்கிறது. வாளேந்திய கரங்கள் இங்கே ஏட்டுச்சுவடியை ஏந்தி நிற்கின்றன. மன்னர் பரம்பரைக்கேற்பப் பட்டாடை உடுத்திப் பவுசாக வாழ்ந்த மன்னன் இங்கே அரைக்குமேல் ஆடையின்றி வெறுமையாக காட்சி தருகிறான்!

### முனிவன் சிலை

நீண்டு தொங்கும் தாடியும் மீசையும் ஒரு முனிவனைக் குறிக்கலாமே தவிர மன்னனைக் குறிப்பிடக்கூடியவனல்ல. தலையிலுள்ள கேசமும் ஒரு முனிவனது கேசத்தைப்போலவேயிருக்

"சிவா"

கின்றது! காதின் கீழ்ப்பாகம் நீண்டு தொங்கிக்கொண்டிருக்கின்றது. ஆனால் அங்கே குண்டலங்கள் காணப்படவில்லை. இந்த அமைப்பு முறைகளைக்கொண்டு திட்டவட்டமாக இது மன்னன் சிலையல்ல, முனிவன் சிலையே என்று கூறலாம்.

### அகத்தியரா?

வேறொரு ஆராய்ச்சியாளரான திரு பெல் இது ஒரு முனிவர் சிலையாயிருக்கலாம் என்ற கருத்தை ஆதரித்தார். இந்தியாவிலிருந்து ஈழம் போந்த ஒரு சமயாசாரியாரது உருவச் சிலையென்பதே அவர் கருத்து. சில தமிழர் அச்சிலை அகத்தியர் சிலையெனக் கருதினர். ஆனால் அகத்தியர் சிலைகள் ஏடுகளை ஏந்தும் வழக்கமில்லை. ஆதலால், ஒரு சிற்பி புதிய முறையில் அகத்தியர் உருவை கற்பாறையில் வடித்தெடுக்க விரும்பினால், அகத்தியர் கரங்களிலுள்ள ஜெபமாலையையும் கமண்டலத்தையும் மாற்றி ஏட்டை வைக்கத் துணியான்! இதனால் இது அகத்தியர் சிலையல்ல என்று துணிந்து கூறலாம்.

### பொருத்தமற்றது

எது எப்படி இருந்தபோதிலும் பிரஸ்தாத சிலை 'பராக்கிரமபாகுவின் சிலை' என்று கூறுவதற்கு ஒருவித சான்றுமில்லை என்று நன்கு தெரிந்தபோதிலும் டாக்டர் சில்வா தனது சரித்திர ஏட்டில் அதைப் பராக்கிரமபாகுவின் சிலை என்று கூறத் துணிந்திருப்பது விசித்திரமாகும். தமிழரின் மானத்தை விலைபேசும் இந்நூலை தமிழ் மாணவர்கள் படிப்பது பொருத்தமற்றதாகும்.

### கல்வெட்டுச் சான்று

சிலை நிறுவப்பட்டிருக்கும் இடம் கற்பாறையின் ஒரு பக்கமாகும். அதே கற்பாறையில் சிலையின் தலைக்கு நேராகப் பின்பக்கத்தில் சில பழைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை தெளிவில்லாதவை. அவற்றுள் மூன்று அல்லது நான்கு எழுத்துக்கள் ஒருவாறு அறியக்கூடியனவாயமைந்திருக்கின்றன. அவை எட்டாம் அல்லது ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கவேண்டுமென்றே கருதப்படுகிறது. ஆனால் பராக்கிரமபாகுவோ இக்காலத்தில் வாழ்ந்ததில்லை. அப்படியாயின் அது எவ்வாறு பராக்கிரமபாகுவின் உருவச் சிலையாகும்?

### புலத்திய முனிவரும் மருவிய பெயரும்

இச்சிலை இலங்கையின் பூர்வீக சரித்திரத்தோடு சம்பந்தப்பட்ட புலத்திய முனிவரது சிலையாயிருக்கலாம் என்பது வேறொரு சாராரின் கொள்கையாகும். புலத்திய முனிவரது வமிசத்திலின்றே இராவணாதியர்கள் தோன்றினர்கள் என்று உத்தரராமாயணம் கூறுகின்றது. புலத்தியரது புத்திரராகிய விசிரவச முனிவருக்கு இயக்கர் மரபில் குபேரனும் அரக்கர் மரபில் இராவணாதியரும் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். புலத்திய முனிவரும் அவரது புத்திரரும் இலங்கையில் தவஞ் செய்திருக்கவேண்டுமென்பது அறியக்கிடக்கின்றது. புலத்தியர் தவஞ்செய்த இடமே புலத்தி நகரம் என வழங்கப்படுவதாயிற்று. சிங்கள மன்னர்களது வரலாறு கூறும் மகாவமிசத்திற் புலத்தி நகரம் என்று குறிக்கப்பட்ட இடமே பின்னர் பொலன்னருவை என்று நாளடைவில் பெயர் கொண்டதென்பது பலரின் கருத்தாகும்.

### புலத்திய முனிவர் சிலை

சிங்கள மன்னர்கள் அநுராதபுரத்தைவிட்டகன்று, பொலன்னறுவையைத் தமது தலைநகரமாகக் கொண்ட காலத்தில் இந்நகரின் பூர்வீக ஐதீகத்தை முன்னிட்டுப் புலத்திய முனிவரது சிலையை ஸ்தாபித்திருக்கலாம் என்று அவகிப்பதற்கு இடமுண்டு. புலத்திய முனிவர் அரக்கர்களது மூதாதையாகையால் அவர் உருவம் மிகப் பெரிதாக அமைக்கப்பட்டது பொருத்தமுடையதே. ஆகவே, சரித்திர ஆராய்ச்சியின்படி இது புலத்தியமுனிவரது சிலை என்று கூறுவதே முறையாகும்.


# சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 36.

# ரொக்கப் பரிசு ரூ. 1,500

முதலாவது பரிசு ரூ. 1000-00 | இரண்டாவது பரிசு ரூ. 400-00

அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 27-3-57 பி. ப. 5 மணி | சரியான விடை 31-3-57ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விபரம் 7-4 57ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 16-4-57ல செக் மூலம் அனுப்பப்படும்

### இடமிருந்து வலம்

1. எந்த ஒரு சுபகாரியமும் முடிவடையும் போது இது பாடுவது தமிழர் வழக்கம்.
3. யுத்த காலத்தில் பஞ்சமும் பட்டினியும் ஏற்படும் போது இவன் பாடு கொண்டாட்டந்தான்.
6. மீன் முட்டை.
8. ஒரு நரம்பு வாத்தியம்
10. பயங்கர ரூபிணியாகச் சித்திரிக்கப்படும் சிவசக்தி.
11. இருள் சூழ்ந்த இடத்தில்தான் சினிமா......சாத்தியப்படும்.
12. மூன்று அடிகொண்ட இந்த அளவையினால்தான் துணியின் நீளத்தை மட்டிடுவார்கள்.
17. நிறைவானது
20. முனிவர்
22. எட்டுத் திசைகளுக்குமுரிய காவல் தெய்வங்கள்
24. பூக்கூடை
25. இது நன்றாயில்லாவிட்டால் சினிமாவை நன்கு ரசிக்க முடியாது.

### மேலிருந்து கீழ்

1. முருகக் கடவுளின் வாகனம்
2. பெண்கள் கையிலணியும் ஆபரணம்
3. மலர்தல்
4. பழத்தைப் பிழிந்தெடுத்தால் இது கிடைக்கும்.
5. பெண் மானின் கண்களில் எப்போதும் இது காணப்படும்.
7. தானுண்ட நீரைத் தலையாலே தரும் விருட்சம்
8. இலையின் குருத்து
9. சிலம்பொலித்த காவிரிப்பூம்பட்டினம்
10. திருமாலை இந்த வண்ணன் என்றும் சொல்வதுண்டு.
13. மனப்பேதம்
14. கிழேழுலகி லொன்று
15. இந்திய தேச பக்தர்கள் விரும்பி அணிந்த ஆடை
16. முகில்
18. மன்மதன் மனைவி
19. நீர்க்கலயம்உடைந்து கிடக்கிறது.
21. விஞ்ஞான யந்திரக் கலையில் இந்தப் பழங்கால முனிவர் கைதேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது.
23. ஐந்திணை நிலங்களில் கொடியது.

பெயர் ..........................................

விலாசம் ..........................................

..........................................

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை..........

கட்டணத்தின் தொகை ரூ......ச......

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்..........

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 36,

த. பெ. இ. 1183, கொழும்பு.




பிரவேசக் கட்டணம் ஒரு கூப்பனுக்கு சதம் 50 மூன்று கூப்பன்களுக்கு ரூபா 1-00


### உணுப்பிட்டியில் மகாசிவராத்திரி

உணுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்கத்தின் ஆதரவில் சென்ற 27-2-57-ல் மேற்படி சங்க பாடசாலை மண்டபத்தில் மகா சிவராத்திரி தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஆரம்பத்தில் பூசைக்குப் பிறகு திரு. ஆறுமுகம் பிள்ளையின் தோத்திரப் பாடல்கள் இடம் பெற்றன. திரு. ஆர். எஸ். வேலாயுதம் "பக்த கௌரி" "நந்தனார்" "மாணிக்க வாசக சுவாமிகள்" சரிதம் ஆகியன கேட்போர் உள்ளம் பகிழும்படி பிரசங்கம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# காதலின் விலை

—ஸரஸ்வதி நாகராஜன்

'காதல் தெய்வம்'' நாவலின் கடைசி அத்தியாயத்தை படித்து முடித்த சீனிவாசன், புத்தகத்தை தூக்கி மேசைமேல் எறிந்துவிட்டு, 'தொப்' பென்று படுக்கையில் சாய்ந்தான். கட்டிலுக்கு எதிரே இருந்த நிலைக் கண்ணுடியில் தன் உருவத்தைப் பார்த்தான். 'எனக்கு எதில்குறைச்சல்? அழகில்லையா, அந்தஸ்தில்லையா, பணம் இல்லையா? ......உ-ஹூம்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

தன் பிரமச்சாரி நண்பர்களை ஒவ்வொருவராகநினைத்துப்பார்த்தான். 'ராமு, அவன் கெட்ட கேட்டுக்கு, சுந்தரியை காதலிக்கிறுன். சுந்தரமும் மீனுவும் பல்லை இளித்துக்கொள்ளுகிருர்கள். சபேசனும் சந்திரிகாவும் எப்பொழுது பார்த்தாலும் கூடி குலாவுகிருர்கள். நான் மட்டும் ஏன் காதலிக்கக்கூடாது...சே, எவ்வளவு பெரிய ஏமாளியாகியிருக்கின்றேன்.' இப்படி அவன் சிந்தனை ஓடியது அதன் முடிவு..........?

மறுநாள்......!

சரியாக தலையைக் கூட வாரிக்கொள்ளாத சீனிவாசனின் கிராப்பு, அன்றைக்கு அலை அலையாக பளபளவென்று மின்னியது. முகக்ஷவரத்துக்குப் பின் பூசிக்கொண்ட கிரீம் அவன் முகத்தை வழவழப்பாக்கியது. டீக்காக உடையுடுத்து, ராஜ நடைபோட்டு நோரிஸ் ரோடு வழியாக போய்க்கொண்டிருந்தான். அவன் கைக்குட்டையில் ஒளிந்துகொண்டிருந்த அத்தர் வாசனை காற்றோடு கலந்து ஒரு பர்லாங் சுற்றளவுக்கு மணத்தைப் பரப்பியது. இவ்வளவு அலங்காரமும், முதல் நாளிரவு செய்துகொண்ட தீர்மானத்தை அமுல் நடத்தும் ஆரம்ப நடவடிக்கையே!

''மிஸ்டர்! வெள்ளவத்தைக்குப் போகும் பஸ் நிற்கும் ஸ்டாண்ட் எங்கேயிருக்கிறது?''

சத்தம் பின்புறம் கேட்டது. திரும்பிப்பார்த்த சீனிவாசன் ஒருகணம் ஸ்தம்பித்து விட்டான். அழகே உருவெடுத்து எதிரே நிற்பதைப் போன்ற ஒரு யுவதி! மிஞ்சிப்போனால் வயது பதினெட்டுக்கு மேல் இராது. வானவில் நிறத்தில் சேலையும் சாம்பல் நிற ஜாக்கெட்டும் அவள் அழகை இன்னும் ஒருபடி கூட்டிக் காட்டின. அவள் கேட்ட கேள்வி சீனிவாசன் காதில் நன்ருகவிழுந்தது. இருந்தாலும் மீண்டும் கேட்டான்.

''என்ன கேட்டீர்கள்?'' அந்த குரலில்தான் எத்தனை கனிவு!

''இல்லை, வெள்ளவத்தைக்கு போகிற பஸ்ஸின் ஸ்டாண்ட் எங்கேயிருக்கிறது.''

''அடேயப்பா, அது கோட்டையிலல்லவா இருக்கிறது. இன்னும் அரை மைல் நடக்கவேண்டுமே''

''எந்த வழியாகப் போக வேண்டும்?''

சொன்னுல் புரியுமா? உங்களுக்கு ஆட்சேபமில்லையென்ருல் என்னேடு வாருங்கள், நானும் கல்கிஸ்ஸைக்குத்தான் போகிறேன்''

''ரொம்ப வந்தனம்''

அந்த யுவதி பின்தொடர்ந்தாள். சிறிது தூரம் சென்ற பின் சீனிவாசன் கேட்டான்.

''எங்கிருந்து வருகிறீர்கள்?''

''நான் இரத்தினபுரியிலிருந்து வருகிறேன். வெள்ளவத்தையில் என்மாமா இருக்கிருர்''

''இதற்கு முன் கொழும்புக்கு வந்து பழக்கமில்லையோ?''

''நான் சிறு பிள்ளையாய் இருக்கும்போது ஒரு முறை அம்மாவுடன் வந்திருக்கிறேன். ஒன்றும் சரியாக ஞாபகமில்லை''

''உங்களைப்போன்ற யுவதிகள் தனியாக இவ்வளவு தூரமும் வரலாமா? யாரையாவது துணைக்குக் கூட்டிக் கொண்டு வரக்கூடாதா?''

அவள் பதில்சொல்லவில்லை. மௌனமாக நடந்துகொண்டிருந்தாள். அவளின் மௌனத்தைக் கண்ட சீனிவாசன் திரும்பவும் கேட்டான்:

''ஏன் பேசமாட்டேன் என்கிறீர்கள்? நான் கேட்டதில் தவறு ஒன்றுமில்லையே!''

''எனக்கு துணை வர யார் இருக்கிருர்கள்?''

அவள் இதைச் சொல்லிவிட்டு மூக்கைச் சிந்தி தன் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டாள். இதைக் கண்ட சீனிவாசனுக்கு மனதை என்னவோ செய்தது. போதாக்குறைக்கு அவள் கண்களில் சுரந்த நீர்த்துளிகள் அவனை உலுக்கியே விட்டன.

''நான் கேட்பதற்காகக் கோபித்துக்கொள்ளாதீர்கள். உங்களுக்கு அண்ணன் தம்பி உறவினர் ஒருவரும் இடையாதா?''

அவனுடைய கேள்வியில் பச்சாத்தாபம்தொனித்தது. ''அம்மா மாத்திரம் இருக்கிருள். அவளும் ஒரு துரோகியாக மாறிவிட்டாள்'' திரும்பவும் அவள் தேம்பினுள். கண்கள் நீரைச் சொரிந்தன.

தன்னேடு வரும் ஒரு பெண் அழுதுகொண்டு வருவது அவனுக்கு மனதுக்குச் சங்கடமாயிருந்தது. அதோடு அவளுடைய சோகக் கதையைக் கேட்க வேண்டுமென்ற ஆசை பற்றிக்கொண்டது. வாழ்க்கையிலே சந்தித்த முதல் பெண் —பெண்ணு அவள்—?'பெண் தெய்வம்' அல்லவா? சந்தர்ப்பத்தை நழுவவிட இஷ்டமில்லை அவனுக்கு. பக்கத்திலிருந்த ஹோட்டலை நெருங்கியதும், ''நீங்கள் அழுவதைக் கண்டால் யாராவது ஏதாவது நினைப்பார்கள். முகத்தைக் கழுவிக்கொண்டு போகலாம்'' என்று சொல்லிக்கொண்டு ஹோட்டலுக்குள் நுழைந்தான். அவளும் மௌனமாகப் பின் தொடர்ந்தாள். ஒரு தனி அறையில் இடம் பிடித்துக்கொண்டு 'ஸ்வீட்'டுக்கு ஆடர் செய்தான்.

''ஆமாம், அம்மா துரோகியாக மாறிவிட்டாள் என்று சொன்னீர்களே, அப்படிஎன்ன நடந்துவிட்டது?''

''வேறென்ன? பணத்துக்கு ஆசைப்பட்டு ஒரு படு கிழவனுக்கு என்னை விவாகம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்தாள். அவளை துரோகி என்றுசொல்லாமல்வேறெப்படி அழைப்பது?'.

''தெய்வமே, உன்னைப் போல் ஒரு பச்சைக் கிளியை ஒரு கிழட்டுப் பூனையிடம் பிடித்துக் கொடுக்க எப்படி உன் அம்மாவுக்கு மனம் வந்தது...? உம் உன் பெயர் என்னவென்று சொல்லவில்லையே!''

நாணம் அவளைக் கவ்விக் கொண்டது. கீழே குனிந்து கொண்டே சொன்னுள்.

''பிரேமா''

''பிரேமா, உன் குணத்துக்கேற்ற பெயர்தான்.'' இதற்கிடையில் ஸர்வர் ஸ்வீட் தட்டுகளுடன் வந்து நின்ருன். இரண்டு கப் ஓவலுக்கு ஆடர் செய்தான் சீனிவாசன். கூச்சத்தினுல் ஒன்று மே சாப்பிடமுடியாது என்று மறுத்தாள் பிரேமா. அதன் ... சீனிவாசனின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்கி ... தலும் அவளுடைய மனதை கரைத்துவிட்டன. அவள் சாப்பிடும்போது அந்த அழகையே பருகிக்கொண்டிருந்தான் சீனிவாசன். அவன் மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் தோன்றி மறைந்தன. ''நீ ஒரு அதிர்ஷ்டசாலியடா. முதல் எடுப்பிலேயே ஜமாய்த்து விட்டாய்'' என்று கும்மாளம் போட்டு எக்களித்தது அவன் உள்ளம்.

அவன் கேட்டான்:

''பிரேமா, நீ சொல்வதைப் பார்த்தால், சொல்லாமல் கொள்ளாமல் விட்டைவிட்டு ஓடி வந்திருக்கிருய் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. உண்மையை மறைக்காமல் சொல்.''

''சொல்வதற்கென்ன இருக்கிறது. நீங்கள் நினைப்பது சரிதான். அம்மாவின் தீர்மானத்தைக் கேட்டவுடன் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று நினைத்தேன். ஆனுல் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. 'வாழப் பிறந்துவிட்டு ஏன் வாழாமல் சாக வேண்டும்' என்று குத்திக் காட்டியது. ஓடிவந்துவிட்டேன்......அதிலும் நான் தங்களிடம் முதலில் சொல்லியது பொய்.''

''எதை சொல்லுகிருய்?''

''வெள்ளவத்தையில் மாமா இருக்கிருர் என்றது. எனக்கு அப்படி யாரும் உறவினர் கிடையாது. வெள்ளவத்தையில் நிறையப் பணக்காரர்களும் பங்களாக்களும் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அங்கேயாவது போய் வேலை செய்தாவது பிழைக்கலாம் என்று யோசித்திருக்கிறேன்.''

''என்ன சொல்லுகிருய் பிரேமா! உனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? நீ இருக்கிறஇருப்புக்குவிட்டு வேலைசெய்துதானு பிழைக்க வேண்டும்.........சே, சே......! நான் இருக்கிற வரையிலும் அது ஒருநாளும் நடக்காது'' பொரிந்துதள்ளினுன் சீனிவாசன் வெகு உரிமையோடு. இதற்குள் ஓவல் வந்துவிட்டது.

''பிரேமா, நான் சொல்வதைத் தவருக எடுத்துக் கொள்ளாதே. என் விட்டில் நானும் அம்மாவும் தான் வசிக்கிருேம். வேறு யாருமில்லை உனக்கு ஆட்சேபனை இல்லையென்ருல் அங்கேயே வந்துவிடு. ராணி மாதிரி இருக்கலாம். உனக்கு ஒரு குறைவுமிருக்காது, என்ன சம்மதந்தானே, சரியென்று சொல் பிரேமா.''

''உங்களை எனக்கு முன் பின் தெரியாது. அதோடு உங்கள் தாயார் என்ன நினைப்பார்களோ!''

''அதைப்பற்றியெல்லாம் நீ கவலைப்படாதே. நான் என்ன செய்தாலும் எங்கள் விட்டில் அதற்கு அப்பில் கிடையாது. தாயார் கேட்டால் என் 'காலேஜ் சினேகிதி' என்று சொல்லிவிடுகிறேன். இரண்டு மூன்று நாள் சென்ருல், அவளுக்கும் உன்னைப் பிடித்துவிடும்...... அப்புறம்......'' அவன் அவளைக் கடைக்கண்ணுல் பார்த்தான். அவள் கன்னங்கள் நாணத்தால் சிவந்தன! கீழே குனிந்து கொண்டாள். இதழ்க்கடையில் புன்னகை அரும்பியிருக்கிறது என்பதைக் குழிவிழுந்த அவள் கன்னங்கள் காட்டின.

சீனிவாசனுக்கு சந்தோஷம் நிலைகொள்ளவில்லை. ஆயிரமாயிரம் எதிரிகளைப் போர்க்களத்தில் கொன்று குவித்து வாகைசூடிய தளபதியின் பெருமிதம்கூட சீனிவாசனின் பெருமிதத்திற்கு இரண்டாம் தரம் தான். 'பில்' கொண்டுவந்த ஸர்வரின் கையில் பில்தொகைக்கு மேலாகவே கொடுத்து அனுப்பிவிட்டு பிரேமாவோடு வெளியேறினான்.

முன்பு பின்னுல் வந்து கொண்டிருந்த பிரேமா இப்பொழுது தனக்கு பக்கத்திலேயே நடந்து வருவதைக் கண்ட சீனிவாசனுக்கு, தான் ஜன்ம சாபல்யமே அடைந்துவிட்டதைப்போல உணர்ந்தான். ஒருவகையாக வீடு சேர்ந்தான். தன் மகனுடன் ஒரு யுவதியும் வருவதைக் கண்ட சீனிவாசனின் தாயார் வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். அதற்குள் வாசலையடைந்த சீனிவாசன்,

''அம்மா இவளைத் தெரியுமா? இவள் தான் பிரேமா. கண்டி முனிசிப்பல் எஞ்ஜினியரின் மகள். என்னேடு காலேஜில் சேர்ந்து படித்தாள். வெகு நாளைக்குப் பிறகு வந்திருக்கிருள்'' என்ருன். தன் அம்மாவின் குணம் அவனுக்கு நன்ருக தெரியும். 'பெரிய இடத்து' மனிதர்களை உபசரிப்பதில் அவளுக்கு அலாதி பெருமை. அவன் பொய் வீணுகவில்லை.

''அப்படியா வாம்மா'' என்று வெகு அன்போடு உபசரித்தாள். அந்த உபசரிப்பிலே 'ஆகா, இவள் மாத்திரம் நம் வீட்டு மருமகளாகிவிட்டால்......!' என்ற ஏக்கமும் ஆசையும் தொனித்தன.

பிரேமாவும் வெகு நாசூக்காக நடந்துகொண்டாள். சீனிவாசன் சொன்ன பொய்யை அவளுடைய ஒவ்வொரு பேச்சும் செய்கையும் உண்மையாக்கிக் கொண்டிருந்தன.

இரண்டு நாள் கழிந்தது. மூன்ரும் நாள் விடிந்தது. ''டே, சீனு, சீக்கிரம் எழும்பு...சீக்கிரம்..எல்லாம் போச்சுடா... போச்சு!'' என்ற அம்மாவின் அலறலைக் கேட்ட சீனிவாசன், வாரிசுருட்டிக்கொண்டு எழுந்து வெளியே வந்தான்;

''என்ன அம்மா, என்ன நடந்தது?''

'நான் என்னடா சொல்ல இருக்கு? நீயே போய்ப்பார். நகைப் பெட்டி, அலமாரி, உடுப்புப் பெட்டி அத்தனையும் காலி! அதோடு அந்த இஞ்ஜினியர் மகளும் வீட்டிலிருந்து காலி!'

''என்ன...என்ன, பிரேமாவையும் காணுமா?'' அவன் மூச்சே நின்றுவிடும்போலிருந்தது. ஒன்றுமே புரியவில்லை. நகைகளை திருட வந்தவன் தங்கையையும் அடித்துக்கொண்டு போய்விட்டானே?

தகவல் அறிந்து அங்கு வந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் புஹாரி சொன்னுர்:

''மிஸ்டர் சீனு, கடந்த இரண்டு மாதங்களுக்கிடையில் இது பிரேமாவின் ஒன்பதாவது கொள்ளை. அவள் தலைமையில் திரியும் கொள்ளைக் கோஷ்டியை பிடிக்க நாங்களும் எவ்வளவோ முயற்சிக்கிருேம், தப்பிவிடுகிருள். உங்கள் நண்பர்களுக்கெல்லாம் சொல்லி வையுங்கள்''

''சீனு, உன் காதல் மூன்றே நாள்தானு? அதுவும் திருட்டுப் பெண்ணிடமா? ஏமாந்தாய் போ!'' என்று பரிகாசம் செய்தது அவன் மனச்சாட்சி. அப்படியே தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான், சீனிவாசன்.

## உலகத்துக்கு அமெரிக்க.....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

லாற்றுசிரியர்களும் மனிதவர்க்க சாஸ்திரிகளும் வருகிருர்கள். [சிவப்பு] இந்தியர், ஸ்பானியர் ஆங்கிலோ-அமெரிக்கர் இம் மூவகை மக்கள் பண்பாடுகளும் ஒருங்கே விளங்கும் இடம் இது. நிற்கிற இடத்தில் நவீன அமெரிக்காவைக் காணலாம்; சில மைல் தூரம் சென்ருல் இடைக்கால ஸ்பெயினைக் காணலாம். அப்புறம் சென்ருல், இந்தியப் பழக்குடிகளின் இடத்தைப் பார்க்கலாம். இம் மூன்று வகையாரும் ஒருவர்க்கொருவர் இசைவாகவே வாழ்ந்து வருகிருர்கள், அவர்கள் தத்தம் தனித் தன்மையை இழந்துவிடவில்லை. இடைக்கிடையே அவர்கள் தங்கள் பண்பாடுகளைக் கலந்து புதியதோர் பண்பாட்டை உருவாக்குவதும் உண்டு. இத்தகைய ஒரு காரியத்தை சர்வதேச அளவில் செய்து முடிக்கவும் கூடும் என எண்ணினுர் மிஸ் பார்ட்லெட்.

### காவல் கட்டுப்பாடு கிடையாது

பொருள்களைக் காட்சிக்கு வைத்திருக்கும் இடங்களில் காண்பவர்களுக்குக் கட்டுத்திட்டம் கிடையாது. காவலாளிகள் இல்லை; ஒருவர் மட்டுமே போக வழிவிடும் சுழல் கதவுகள் இல்லை; 'தொடாதே' என்று எழுதிவைத்த காட்சிப் பொருள்களுக்குக் கண்ணாடி மூடி ஒன்று தவிர வேறென்றும் காவல் இல்லை. சிலவற்றுக்கு ஒரு மூடியும்கிடையாது. இவற்றிலெல்லாம் மிகவும் கவர்ச்சியாக இருப்பது 'ஆடைகளின் தீவு' எனப்படும் இடமாகும். இதுவே காட்சிசாலைக்கு வருவோரின் கவனத்தை முக்கியமாகக்கவர்வது. இது இரண்டடி உயரமாக நீண்ட ஒரு மேடை. இதில்சரற்கற்களைப் பரப்பியிருக்கிருர்கள். அம் மேடைமீது சுமார் 20 உருவங்களில் 'மாடல்' ஆடைகளைக் காணலாம். அவை பல நாட்டிலிருந்து வந்தவை; பல இனத்தவர் செய்தவை.

### காலம்

இக் கண்காட்சிசாலை ஏற்பட்டிருக்கும் காலம் பாமரர் கலையில் அமெரிக்கரின் ஆர்வம் உச்சநிலையை அடைந்திருக்கும் காலம், சுய தேவைப் பூர்த்திக்காகப் பெருமுயற்சி செய்துவரும் நாடுகளிலும் பிரதேசங்களிலும் தொன்று தொட்டு வரும் கைவினைத் தொழில்களைப் புதுப்பித்து ஊக்கப்படுத்துவதால் அவற்றின் பொருளாதாரம் விழாமல் வாழும் நிலையடையக்கூடிய காலமும் இதுவேயாகும். இந்த சர்வதேச பாமரர் கலைக் கண்காட்சிசாலை தொலைவிலிருந்தும் அண்மையிலிருந்தும் தன்னை வந்து கண்டு செல்வோர் வாயிலாக அத்தகைய நன்முயற்சிகளுக்கு உதவி செய்ய முயல்கிறது.

### விடுதலை வீரருக்கு தூக்கு!

சைப்ரஸ் நாட்டு விடுதலைக்காக போராடிய ஒரு இளைஞரை, பிரிட்டிஷ் ஆதிக்கம், தூக்கிலிட்டு கொன்றது. இதுவரை இதுபோல 9 இளைஞர்களுக்கு பிரிட்டிஷ் ஆதிக்கம் தூக்கு தண்டனை விதித்து இருக்கிறது.

சைப்ரஸ் ஒரு தீவு நாடு. இந்த தீவு துருக்கி நாட்டுக்கு அருகே உள்ளது;

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதுமையின் பேரில் திரையில் பொல்லாங்கு!

## கைதட்டலுக்காகக் கண்டதையெல்லாம் உளறிக் கொட்டுவது புதுமையைப் புகுத்துவதாகாது

### நாட்டுக்கும் மக்களுக்கும் நலனைத் தரக் கூடியன நாள்தோறும் மலரட்டும்

மனித குலம் இன்று எல்லாவற்றிலும் புதுமை காண விரும்புகிறது. தொழில் துறைகளில் மட்டுமல்ல, கலைத் துறைகளிலும் புதுமையை மகிழ்ச்சியோடு வரவேற்கிறது.

நுண் கலைகள் என்று சொல்லப்படும் இசை, நாட்டியம், நாடகம், சினிமா இவற்றிலெல்லாம் இன்று ரசிகர்கள் புதுமையை எதிர்பார்க்கிறார்கள்.

கதையில் புதுமை, கருத்தில் புதுமை, எழுத்தில் புதுமை, எண்ணத்தில் புதுமை, நாடக உலகில் ஒரு புதுமை, திரை உலகில் ஒரு புதுமை...... என்றெல்லாம் விளம்பரங்கள் அடிபடுவதை நாம் பார்த்து வருகிறோமல்லவா!

#### புதுமையின் பேரில் பொல்லாங்கு

பொதுமக்களுடைய இந்தப் புதுமை ஆர்வத்தைப் பயன்படுத்திக்கொண்டு புதுமை யென்ற போர்வையில் பொல்லாங்கு செய்கின்றனர் சிலர். மக்கள் புதுமை மோகத்தினால், புதுமை என்ற பெயரால் நடமாடுபவைகள் நல்லனவா தீயனவாயென்பதைக்கூட சிந்தித்துப்பார்க்கத் தவறிவிடுகிறார்கள்.

ஆகவே, மக்கள் நலனில் பற்றுடைய நற்கலைஞர்கள் ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துச் செயல்புரியவேண்டியது நீங்காக் கடமையாகின்றது.

#### மெருகு பெற்று புதுமையாகும் பழமை

புதுமை வரவேற்கப்படும் போது அல்லது புதுமை உருவாக்கப்படும்போது பழமை அத்தனையும் குழிதோண்டிப் புதைக்கப்படவேண்டியவை என்ற முடிவுக்கு வந்துவிடுதல் கூடாது. சில சமயங்களில் பழமையே புதுமை மணத்தோடு வெளிவந்துலவுவதை நாம் பார்க்கிறோம். பழங்கால இரவிக்கையே இன்று 'சோளி' என்ற பெயருடன் புதுமையாக மலர்ந்திருப்பதை மறுக்க முடியுமா? உடைகளில், அணிகளில் இதைப்போல் எத்தனையோ பழமைகள் இன்று புதுமைகளாக மிளிருகின்றன.

பாரதியார் புதுமைப் பெண்ணின் வாயிலாகக் கருத்துக்களை வெளியிடும் போது,

"புதுமைப் பெண்ணிவள்
சொற்களும் செய்கையும்
பொய்மை கொண்ட கலிக்குப் புதிதென்றிச்
சதுமறைப்படி மாந்தர்இருந்த
நாள் தன்னிலே பொதுவான
வழக்கமாம்"

இந்தப் புதுமைப் பெண்ணின் சொற்களும் செயல்களும் இன்று புதிதேயொழிய உண்மையில் பண்டைக்காலத்தில் வழக்கத்தில் இருந்தவைதான் என்று குறிப்பிடுகிறார்.

#### நாட்டுக்கு வேண்டும் புதுமை

ஆகவே பழமையென்பதற்காக எதையும் தள்ளிவிடுவதோ, புதுமையென்பதற்காக எதையும் போற்றிப்புகழ்வதோ அறிவுடைமையன்று.

நாம் விரும்பும் 'புதுமை' மனித குலத்திற்கு நன்மை பயப்பதாயிருத்தல் வேண்டும்.

"உன் கணவன் உன்னை விட்டு மற்றொருத்தியுடன் போனாலுமுல், நீயும் மற்றொருவனை இழுத்துக் கொண்டு போ" என்று சீர்திருத்தம் பேசும் நண்பர்கள் திருமணத் தம்பதிகளுக்கு உபதேசிக்கிறார்களே! அதுவல்ல புதுமை விரும்புவது.

"காதல் ஒருவனைக் கைப் பிடித்தே அவன் காரியம் யாவினுங் கைகொடுத்து, மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்து வாழ்வோம்" என்று பாரதியாரின் புதுமைப் பெண் கூறுகிறாளே!....அதைப்போல் பழமையைக் காட்டிலும் மனிதப் பண்பை உயர்த்தத்தக்க புதுமையே நாட்டிற்கு வேண்டும்.

டி. கே. சண்முகம்

#### திரைப்படங்களில் புதுமை

நாடகங்களிலும் திரைப்படங்களிலும் இந்தப் புதுமை ஏமாற்று வித்தை இன்று திறமையாகக் கையாளப்படுகின்றது. அறிவாளிகள் என்று நம்மால் கருதப்படுபவர்கள்கூட இந்தச் செயல்களைப் ஆதரிக்க முற்படுகின்றனர்.

கதைக்குப் பொருத்தமோ பொருத்தமில்லையோ கவலையில்லை. வளர்ச்சி பெற்று வரும் மக்களின் உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு, கதை, பாத்திரம் இடம், நேரம் இவற்றைப் பற்றிச் சிந்திக்காமல் எதை வேண்டுமானாலும் சொல்லத் துணிந்து விடுகின்றனர். இப்படிச் சொல்லுவதன் மூலம் புதுமைக் கருத்துக்களைப் புகுத்திவிட்டதாகவும் பறைசாற்றுகின்றனர்.


#### பிணத்துக்கு அலங்காரம்

கலைகளின் மூலம் தங்கள் கருத்துக்களைப் பிரசாரம் செய்ய எவருக்கும் உரிமையுண்டு. அதற்காக கதையைக் கொலை செய்வது கூடாது. சொல்ல விரும்பும் கருத்துகளுக்கேற்ப கதையையும் பாத்திரங்களையும் சிருட்டித்துக் கொள்ள வேண்டும். எந்தப் பாத்திரத்தின் வாயிலாக எந்தக் கருத்தைச் சொல்வது? முன்னுக்குப் பின் முரணில்லாமல் பாத்திரம் அமைக்கப்பட்டுள்ளதா என்பன வற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து தெளிவு பெற வேண்டும். இல்லையேல் பாத்திரத்தின் தன்மையைக் கொன்றுவிட்டு மக்களின் மதிப்பைச் சம்பாதிக்க முயல்வது, உயிரைப்போக்கி விட்டுப் பிணத்திற்கு அலங்காரம் செய்வதுபோலத்தானிருக்கும்.

#### நலம் தரும் புதுமை மலரட்டும்

நாடக திரைப்படக் கலைகளைப் பொறுத்தவரை புதுமைக் கருத்து என்பது மக்களின் கைதட்டலின் வாயிலாகப் வெளிப்படுத்துவதல்ல; பார்ப்பவர்கள் உள்ளத்தில் பாய்ந்து பண்புக்கொத்த முறையில் செயலாக வெளிப்படவேண்டும். அதுவே புதுமை. நாட்டுக்கும், மக்களுக்கும் நலம் தருவதே புதுமை.

கலைகளில் அத்தகைய நலம் தரும் புதுமைகள் நாள்தோறும் மலரட்டும்.



'மக்களைப் பெற்ற மகராசி'யில் வி. கே. ராமசாமி முத்துலட்சுமியை அடிக்கப் போக, அவர் "வேண்டாம் அப்பனே!" என்று கெஞ்ச, இந்த அக்கிரமத்தைப்பார்க்கப் பொறுக்காமலே என்னவோ பானுமதி ஓரக் கண்ணால் எங்கோ நோக்குகிறார். சினிமாஸ் லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் இப்படம்திரையிடப்படவிருக்கிறது.

### 3 ஆயிரம் மைல் உயரப்பறக்கும் விமானம்

பர்மிங்ஹாம் மார்ச்:—

மூன்று ஆயிரம் மைல் உயரப் பறக்கக்கூடிய "ஜூபிடர்" என்ற விமானத்தை அமெரிக்கா விமானப் படை தயாரித்து வருகிறது. இந்த விமானம் ரொம்ப துரிதமாக தயாரிக்கப்படும் என்று விமானப்படை அதிகாரி அறிவித்தார்.

# சிங்களம் வளரத் தமிழைத் தாழ்த்துவதா?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் அனுபவிக்கவேண்டின் அவசியமாக உள்நாட்டு சமூக பொருளாதாரப் பிரச்னைகளையும் சிறுபான்மைச் சமூகத்தினர் பிரச்னையையும் தீர்த்துக்கொள்ளவேண்டும்."

ஜனாப் அஸீஸ் தொடர்ந்து பேசுகையில் தமது ஸ்தாபனம் சம்பந்தமாகக் குறிப்பிட்டதாவது:—

#### இலட்சியங்களைச் சாதிப்போம்

"இந்த ஸ்தாபனத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள நாங்கள் எப்பொழுதும் தொழிலாளர் வர்க்கத்தின் கட்டுப்பாட்டையும் மத அல்லது வேற்றுமை இன்றி இந்நாட்டில் மற்றும் பொருளாதாரத் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுடன், தோட்டத் தொழிலாளர்களுடன் ஒற்றுமை கொள்ள வேண்டுமென்றும் எப்பொழுதும் வற்புறுத்தி வந்திருக்கிறோம்; அதற்காகப் பிரயாசைப்பட்டும் வந்திருக்கிறோம். இந்த இலட்சியங்களைச் சாதிப்பதில் இடைபருது முட்டுக்கட்டை போட்டு வந்துள்ள ஒரு கோஷ்டியுடன் இத்தகைய ஒரு கோஷ்டி இருந்திருக்க முடியாது. இப்பொழுது நாம் பிரிந்து விட்டதால், புதிய ஊக்கத்துடனும் திடசங்கற்பத்துடனும் எங்கள் இலட்சியங்களை நாம் பின்பற்றுவோம். இன்று எங்கள் முன்புள்ள பிரதான வேலை இந்த லட்சியங்களை சாதிப்பதற்காக எங்களைப் பலப்படுத்துவதும் எங்கள் ஸ்தாபனத்தை உண்மையிலேயே ஒரு பலம்பொருந்திய சக்தியாக வளர்ப்பதுமாகும்."

#### திரு வேலுப்பிள்ளை அறிக்கை

தொழிலாளர் காங்கிரஸின் காரியதரிசி திரு ஸி. வி. வேலுப்பிள்ளை தான் சமர்ப்பித்த வருடாந்த அறிக்கையில்முதலாளிமார்களின் பிடிவாதமான போக்கைக் கண்டித்தும் தொழிற் சட்டத்தை அரசாங்கம் திருத்தியமைக்க வேண்டுமென்று கோரியும், காங்கிரஸ் ஸ்தாபனத்தில் ஏற்பட்ட பிளவு பற்றி விளக்கியும் கூறினார்.

#### திருமதி சுப்பையா தலைமையில் மாதர் மகாநாடு

கடைசி நாளான ஞாயிறன்று காலையில் மாதர் மாநாடு திருமதி கோகிலம் சுப்பையா தலைமையில் ஆரம்பமாயிற்று. அன்னாருக்குப் பெண் தொண்டர்கள் ஏராளமான பூமாலைகளைச் சூட்டியும் வெறுமனே சொரிந்தும் வரவேற்றார்கள்.

தலைவி தமது தலைமை உரையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம வேலைக்குச் சம சம்பளம் கொடுக்க அரசாங்கம் சட்டம் மியற்ற வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினார்.

#### தொழில் மந்திரி திரு இலங்கரத்தின பேச்சு

மாநாட்டில் தொழில் மந்திரி திரு இலங்கரத்தின கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். அவர் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது:

"நாங்கள் புரட்சியை விரும்புகிறோர்கள்தான். என்றாலும் நாம் அதைப் பெரிதாக மதிப்பதில்லை நமது பிரதமர் ஆசியாவிலுள்ள எந்த ஜனநாயக வாதிக்கும் குறைந்தவரல்ல.

நாம் (எம். ஈ. பி.) பதவிக்கு வந்தகாலத்தில் தொழில் துறையில் சாதித்தவை பலப்பல, தொழிலா [illegible]

[illegible] ஆங்கிலத்தி லே ஊதிக் கிடந்தவர்களுக்கு நாம் இப்போது ஆங்கிலத்தின் இடத்தைச் சிங்களத்துக்குக் கொடுத்திருப்பது பிடிக்கவில்லை. சம அந்தஸ்துவேண்டுமென்று கூச்சல் போடுகிறவர்கள் இவர்கள்தான். தமிழுக்கு உரிய அந்தஸ்தை அரசாங்கம் அளித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

திரு இலங்கரத்தின மேலும் பேசுகையில் எம். ஈ. பி. அரசாங்கம் இதுவரை சாதித்துள்ளது என்ன என்பதைக் கூறினார்.

#### திரு கெனமன்

திரு பீட்டர் கெனமன் எம். பி. பேசுகையில் தொழிலாளர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு போன்றவர்களென்றும் அவர்களைப் பாதிக்கும் சட்டங்களை உடனடியாக நீக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினார்.

திரு ராபேர்ட் குணவர்த்தனவும் மகாநாட்டில் கலந்து சொற்பொழிவாற்றினார்.

இந்தியாவிலிருந்து தமிழரசுக் கழகத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் மாநாட்டுக்கு வருவதாக இருந்தும் கடைசி நேரத்தில் வரமுடியாது போகவே அவருக்குப் பதிலாக மேற்படி கழகப் பிரபலஸ்தர்களிலொருவரான திரு சின்ன அண்ணாமலை வந்திருந்தார். அவர் பேசுகையில் சொன்னதாவது:

"உலகத்தை இயக்கும் மகத்தான மக்கள் சக்தியில் நம்பிக்கை வைக்காதவர்களுக்கும் மக்களின் மொழிச் சுதந்திரத்தைப் பறிக்கும் அரசாங்கத்துக்கும் நிச்சயம் தோல்வியே வந்தடையும். உங்கள் போராட்டத்துக்கு இந்தியத் தமிழர்களின் ஆதரவைத் தேடித்தர நான் [illegible]."

இந்தியாவிலிருந்து இதற்கென வந்த திரு பி. டி. [illegible] தானுப்பிள்ளையும் கூட்டத்தில் பேசினார்.

#### தீர்மானங்கள் சம அந்தஸ்து

தமிழுக்கு சம அந்தஸ்து கொடுப்பதை அரசாங்கம் இனியும் தாமதிக்கக்கூடாதென்றும் நாட்டின் நலனைக் கருதி எக்காரணத்தை முன்னிட்டும் தமிழைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளிவிடக்கூடாதென்றும் கூறும் தீர்மானம் ஒன்றும் மற்றும் ஐந்து தீர்மானங்களும் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

#### படிப்பு வசதிகள்

அவற்றுள் ஒன்று அரசாங்கப் பாடசாலைகளிலும், அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளிலும் இடம் தேடும் தோட்டப் பிள்ளைகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் நேர்மையற்றவையும், ஜனநாயகத்துக்கு விரோதமானவையென்றும், அதனால் அவற்றை நீக்கி, தோட்டப் பிள்ளைகள் சகல பாடசாலைகளிலும் படிக்க வசதிகளைச் செய்துகொடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது என்று கூறுகிறது.

#### காஷ்மீர் பிரச்னை

காஷ்மீர் பிரச்னையைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று மற்றோர் தீர்மானம் கூறுகிறது.

#### அரசாங்கத்துக்கு ஆதரவு

ஏனைய மூன்று தீர்மானங்களும் அரசாங்கத்தின் ஒரு சில நடவடிக்கைகளை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கானவை என்றும் அவற்றைக் காங்கிரஸ் வரவேற்பதாகவும் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல தீர்ப்பு

(6ம் பக்கத் தொடர்ச்சி)

திண்டாடுநாயக்கா:- (புத்த பிரானின் காலில் விழுந்து) பகவானே! உங்கள் பக்தர்களை இப்படியெல்லாம் நிந்திக்கலாமா? நீங்கள் பரிநிர்வாணம் அடைந்த இரண்டாயிரத்து ஐந்நூறாவது சம்புத்த ஜயந்தியை எவ்வளவு விமரிசையாகக் கொண்டாடினேம்? மதுவையும் புலாலையும் சட்டவிரோதமாக்கினேம். இரண்டு நாட்கள் அரசாங்க விடுமுறையாக்கி எவ்வளவு விமரிசையாகக் கொண்டாடினேம்.

புத்தர்:- நீங்கள் இவைகளை நல்லெண்ணத்தோடு செய்யவில்லை. உங்கள் தாயை வாழவைப்பதற்காக இன்னொருவனின் தாயைக் கொல்வதா? இதுதான் நீதியா? தமிழ் அன்னைதான் உங்களுக்கும் தாய். அவள் இன்றேல் நீங்களும் உயிர் வாழ முடியாது. நீங்கள் என்னைப் பின்பற்றுகின்றேம் என்று கூறி என் கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைக்கின்றீர்கள். நானும் உங்களை மன்னிக்கமாட்டேன்.

திண்டாடுநாயக்கா, பவநாயக்கா:- பகவானே! எங்கள் விழிகளைத் திறந்தீர்கள். இவ்வளவு காலமும் அறியாமையும், ஆணவமும் எங்களை ஆட்கொண்டிருந்தது. இன்றே ஞான ஒளியைப் பெற்றேம். எங்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்குங்கள்.

புத்தர்:- நீங்கள் என்னை வாழ வைப்பதாக நினைத்தால் தமிழையே போற்றுங்கள். ஒரு தாய் பிள்ளைபோல் இருங்கள். தமிழர்களின் உரிமைகளைப் பறிக்காதீர்கள். தமிழ் அன்னையின் காலடியில் விழுந்து மன்னிப்பு கேளுங்கள்.

(திண்டாடுநாயக்காவும், பவநாயக்காவும் தமிழ் அன்னையின் காலடியில் விழுகின்றனர். அவ்விடத்திலே, எல்லோரும் "செந்தமிழா எழுந்து வாராயோ" என்று பாடுகின்றனர். புத்தர் பெருமான் மறைகின்றார்.)

## இதுதான் . . .

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையே ஏற்பட்டது! ஆபத்துக்குதவ அங்கு குழுமியிருந்த ஜீவராசிகளை அழைத்தேன். மறுகணம் அங்கு குழுமி இருந்த ஜீவராசிகள் ஒரே பாய்ச்சலாகப்பாய்ந்து என் உடம்பின் பல பாகங்களிலும் பற்றிக்கொண்டன. அதுமட்டுமன்றி இரத்த தானமும் செய்யத்தொடங்கின. பத்து நிமிடங்கள் பறந்திருக்கும். அடியேனுக்குப் புத்துயிர் வந்தது. அவ்வாறு ஜீவகாருண்யம் காட்டியவர்கள் யார் தெரியுமா? சாட்சாத் மூட்டைப் பூச்சிகளேதான். ஐயையோ மூட்டைப் பூச்சிகளென்றதும் நீங்கள் ஏன் முணுமுணுக்க வேண்டும்? அந்தஜீவகாருண்யம் படைத்த மூட்டைப் பூச்சிகளைத் தூற்றுகிறீர்கள். போற்றிப் புகழுங்கள் அவைகளைப்போல் நீங்களும் ஜீவகாருண்யம் காட்டுங்கள். "வாழ்க மூட்டைப் பூச்சிகள்!" "வளர்க அதன் சமுதாயம்!"

—எம். எம். அக்பர்,
(வ. ம. இல: 972)
மூதூர்—3.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குறுகிய வாக்கியம் உலகின் மிகப் பெறுமதியான ஒன்றை ஞாபகமூட்டுவதாய் அமைந்திருப்பதைக் காணலாம். 'இறவாமை' அல்லது 'என்றுமுளதன்மை' என்பார்களே, அதை இவ்வாக்கியம் கண்முன் நிறுத்துகிறது. என்றுமுளதன்மை கடவுளுக்கு மட்டுமல்லாது எந்த ஒரு ஜீவராசிக்கும் கிடையாது. அப்படியானல் இறந்த ஒருவருக்கு எப்படி என்றுமுளதன்மை இருக்க முடியும். இது விசித்திரமாயில்லையா?

### இல்வாழ்வுப் பண்புகள்

காதல், நம்பிக்கை, நேர்மை இத்தியாதிப் பண்புகளே இல்வாழ்க்கையின் இலக்கணங்கள் இவையின்றேல் இல்வாழ்வு இல்லை என்றே சொல்லவேண்டும். இவற்றின் உடையவர்கள் இறக்கலாம். அவர்கள் இறக்கும்போது இவற்றையும் கொண்டு செல்வதில்லை. உதாரணமாக மனைவி தான் உயிரோடு இருக்கும் கடைசி நேரம்வரை கணவன் மீது காதல் வைத்திருந்தாள் என்முல் அக் காதல் அவள் இறந்த பின்பும் அவன்பால் செலுத்தப்பட்ட வண்ணம் இருக்கிறது என்றுதான் பொருள்படும். மரணத்தால் ஒருவரின் உயிரைப் பிடுங்கி உடலைத் தனியாக்கி ஆளைப் பிணமாக்கிவிடலாமே தவிர அன்னரின் பண்புகளைப் பறிக்க முடியாது. இதனல் இல் வாழ்க்கைக்கே இலக்கணமான இப்பண்புகள் என்று முளதன்மையுடையனவென்பது அறியக் கிடக்கிறது. இல்வாழ்க்கைக்கு இலக்கணமான பண்புகள் மனைவியின் மரணத்துக்கு முன் இருந்தது போலவே அதன் பின்பும் இருப்பதனல் —அதனல் கணவன் பெறும் அனுபவம் முன்பும் பின்பும் ஒரே மாதிரியானதானல்

# மனக் கவலையை . . .

மனைவியின் பிரிவையிட்டு அவன் கவலைப்பட என்ன இருக்கிறது?

### நம்பிக்கை

ஒருகால் கவலைப்படநேர்ந்தாலும் என் மனைவியின் காதல் எப்பொழுதும் எனக்கு இருக்கிறது; அவள் என் உள்ளத்தில் என்றும் இருக்கிறுள்" என்ற ஒரு நம்பிக்கையே அவனது கவலையைப் போக்கும் நன்மருந்தாய் அமையும்.


பிரிவுத் துயரிலிருந்து சுலபமாக விடுபடப் பிற வழிகளுமுண்டு. அதில் முக்கியமானதொன்று பிரிந்தவர் ஆரம்பித்துச் செய்துவந்த வேலைகளை நாம் தவருது தொடர்ந்து செய்துவருவதாகும். பிரிந்தவர் தாம் உயிரோடு இருக்கும்போது எதை எதை நாம் எப்படி எப்படிச் செய்யவேண்டும் என்று விரும்பினரோ அதையதையெல்லாம் நாம் அப்படியப்படியே செய்வது பிரிவுத்துயரைத் குறைத்துக் கொள்வதற்குக் கையாளக் கூடிய பிறிதொரு வழியாகும்.


ஓபிடி 2வது வாரம்!
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
"வாழ்விலே ஒரு நாள்"
சிவாஜி கணேசன், ஜி. வரலட்சுமி, ஸ்ரீராம், ராஜசுலோசன
முதலியோர் நடித்தது.
விரைவில் வருகிறது!
கொழும்பு எல்பின்ஸ்டனில்
எம். ஜி. ராமச்சந்திரன், பி. பானுமதி
முதலியோர் நடித்த
"தாய்க்குப்பின் தாரம்"





மகிழ்ச்சியூட்டும் 6-வது வாரம்!
சென்ட்ரல் (கொழும்பு)
ஜோதி (திருகோணமலை)
ராணி (யாழ்ப்பாணம்)
போகம்பரா (கண்டி)
ஸ்டார் (பதுளை)
ப்ரீதி (ஹட்டன்)


தினசரி மாலை 6, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பகல் காட்சி பிற்பகல் 2 மணி, ஞாயிறு காலைக் காட்சி 10 மணி.
வீரத்தின் சிகரத்தையே அடைந்துவிட்ட ஆதர்ஸ புருஷனுக்குத் தன் காதலை அர்ப்பணித்து அவன் காலடியில் கிடக்கும் பாக்கியம் பெறப் பைங்கொடி துடிக்கிறுள்......இதைப் பார்ப்போரின் உள்ளமே "படக்...படக்" என்று அடித்துப் பாத்திரங்களோடு இரண்டறக் கலந்து உறவாடும்.........
எம். ஜி. ராமச்சந்திரன், அஞ்சலிதேவி, வீரப்பா, வரலட்சுமி, கே. ஏ. தங்கவேலு டி பி முத்துலட்சுமி கிருஷ்ணன்-மதுரம், டி பாலசுப்பிரமணியம் நடிக்கும்
சக்கரவர்த்தித்திருமகள்

முருகன் (ஜிந்துப்பிட்டி)
விரைவில் வருகிறது!
என். டி. ராமராவ், ஸ்ரீரஞ்சனி, ரேலங்கி, ராஜசுலோசன முதலியோர் திறம்பட நடிக்கும்
...ன்னியின் சபதம்

முருகன் (ஜிந்துப்பிட்டி)
இன்று காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30
சிவாஜி கணேசன், தங்கவேலு, ... நடிக்கும்
"...பணம்"

நாளை முதல்:
சிவாஜி கணேசன், பத்மினி நடிக்கும்
நான் பெற்ற செல்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா பதில்

செல்வி லீலா பொன்னையா,
மட்டுக்கொல்லை.

ஆமாம், மருமகளே...... 'சொல்லிக் கொடுப்பீர்களா?' விஷயத்தில் நீர் குறிப்பிடும் வரி எப்படியோ விடுபட்டுப் போய்விட்டது! உம்மைப்போலவே வேறு பல மருமக்களும் இதுபற்றி மாமாவுக்கு எழுதியிருக்கின்றார்கள்...... நீர் குறிப்பிடுவது மிக்க உண்மைதான்! யாரும் 'மீன்பாடும் தேன் நாட்டை' இலகுவில் மறந்துவிடவே முடியாது; இல்லையா?

துரை-தங்கவேலு,
ஆறுகாமம்.

'உண்மை நட்பு' — உமது கட்டுரை நன்று! முகம்மது கான் தட்புணர்ச்சி...... ஆஹா, எத்தனை அற்புதமானது! தொடர்ந்து எழுதிக்கொண்டே இருப்பாயல்லவா? மீமற்ற விஷயங்களும் கிடைத்தன.

செல்வி க. அன்னபூரணம்,
யாழ்ப்பாணம்.

உமது விஷயங்கள் எல்லாம் கிடைத்தன. அடிக்கடி நீர் எழுதுவதைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? சிறப்பான விஷயங்களை மாமா நிராகரிப்பதேயில்லையே......எனது படமா? மன்னிக்க வேண்டும்!

செல்வி க. ப. இராணி,
இளவாலை.

பேஷ்! நீர் நன்றாகப் பாடுவீர், ஆடுவீர், நடிப்பீரா...? கற்பனைக் கதைகளையும் வரைவீரா......? உமது திறமையைப் பரீட்சிக்கட்டுமா? முதலில் ஒரு விஷயத்தை அனுப்பலாமல்லவா?

க. செல்வநாயகம்,
மாதகல் மேற்கு.

'காப்பி குடிப்பதனால் வந்த கேடு' — புதுமையான தலைப்புத்தான் செல்வா. ஆனால் கதை நீண்டுவிட்டதே! சுருக்கமாக எழுத முயற்சி செய்ய வேண்டும்.

செல்வி இ. குணபூஷணி,
கைதடி.

'சிங்கள ஸ்ரீச்......, புதுமையான ஜீவனமற்ற நிமிஷக் கதை!'

ஏ. தேவராஜா,
பதுளை.

உமது 'காதலர்களின் பிரயாணத்தில்' நானும் சேர்ந்துகொண்டேன். அந்தப் பிரயாணத்தை மருமக்கள் முன் சமர்ப்பிக்கத்தான்.....?

ஏரல் கே. எம். எஸ். ஹமீத்,
கொழும்பு.

உமது கவிதை......? இரண்டு அடிகளின் கருத்து அபாரம் ஹமீத்! உம்மால் இன்னும் சிறந்த கதைகளை எழுத முடியும்!

வே. பத்மநாதன்,
சாவகச்சேரி.

'தம்முன் நிலை......' இன்று பரிதாபம்தான்! உமது கவிதை பாராட்டுக்குரியது நாதன். 'பண்டையவீரமும்' பரவாயில்லையே......

# வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்

# இது தான் ஜீவகாருண்யம்?

நான் சுமார் எட்டு மணிக்கெல்லாம் படுக்கைக்குச் சென்றுவிடுவேன். என்ன? கும்பகர்ணப் பட்டம் தரவா யோசிக்கிறீர்கள். காரணம் இல்லாமல் காரியம் நடக்குமா? என் கதை பூராவும் கொஞ்சநேரத்திலே விளங்கிவிடும். அப்புறம் நீங்களே துக்கப்பட்டு என்னைத் "தியாகி" என்று கூறப்போகிறீர்கள்.

நான் படுக்கையறைக்குச் சென்றதும் முதல் காட்சியளிப்பது ஒரு சோம்பேறிக் கூட்டம்தான். அவர்கள் அனைவரும் யமதர்மனுடன் போராடிக் கொண்டுதான் இருப்பார்கள். காரணம் அவ்வளவு பசிக் கொடுமை. வழிமேல் விழிவைத்து என் வரவை எதிர்நோக்கிஇருந்த அந்த ஜீவராசிகள் ஆனந்த மேலீட்டினால்; நான் முந்தி நீ முந்தி என்று சண்டை போட்டுக் கொண்டு என் படுக்கைப் பக்கம் வந்து சேர்ந்துவிடும். நானும்அவர்களின் பரிதாப நிலையைக் கண்டு மனமிளகியவனாய் நேரத்தை வீணாக்காமல் கடமையைச் செய்ய இறங்கி விடுவேன். அதாவது படுக்கையில் படுத்துக் கொள்வேன்.

சுமார் 15 நிமிடங்கள் வரை என் உயிர் என் வசமிராது. காரணம் அவையனைத்தும் தங்கள் ஊசிக் கரங்கள் மூலம் இரத்தமல்லவா எடுக்கின்றன? தங்கள் தேவையைப் பூர்த்திசெய்து கொண்டு அவர்கள் சும்மா செல்லமாட்டார்கள். "இவர் போன்ற தியாகிகள் நீடுழி வாழ்க!" என்று வாயால் மட்டும் வாழ்த்திவிட்டுச் சென்று விடுவார்கள்......... கால வெள்ளம் காவேரித் தாய்போல் கரை புரண்டோடியது. நான் கடமையில் சுடுகளவும் தவறுமல் கச்சிதமாகச் செய்து வந்தேன். அன்றொரு நாள் என் உடம்பு அனலாய் எரிந்தது. காரணம் போதிய இரத்தமின்மையே. ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் படுக்கைக்கு ஆஜராகிவிட்டேன். பழையபடி அந்தப் பட்டாளக் கும்பல் வந்து வளைந்துகொண்டது. என் உடம்பின் தன்மையை உணர்ந்த அந்த உயிர்நாடிகளுக்கு என் பக்கமே வர பயமாக இருந்தது போலும்! அவர்கள் ஒருவரோடொருவர் குசுகுசுவென்று கதைத்துக்கொண்டு கலைந்து சிந்தினர்.

என் நிலைமை நிமிடத்துக்கு நிமிடம் மாறியது. கடைசியில் காலனுடன் கடும் போர் புரியவேண்டிய

(13-ம் பக்கம் பார்க்க)

(நிமிஷக்கதை 16)

# பேய்க் கதை!

மூர்த்தி இருக்கின்றானே.... 'பணம், பணம்' என்று எதற்கும் தனது அப்பாவின் உயிரை வாங்கிவிடுவான்!

"அப்பா......தேன் குழல் வாங்க ஐந்து சதம் தாவேன் ...அப்பா! கொய்யாப்பழம் இருக்கிறதே...பத்துச் சதத்திற்கு மூன்று விற்கிறாங்கப்பா....பத்து சதம் கொடேன்......" இப்படிச் சதா அப்பாவைத் தொந்தரவுசெய்து கொண்டேயிருப்பான்.

ஒருநாள் வெளியே கடும் வெயில் காய்ந்துகொண்டிருந்தது.

அப்போது மூர்த்தி பாய்ந்துகொண்டே வீட்டினுள் ஓடி வந்தான்...

"அப்பா....பதினைந்து சதம் கொடப்பா......ஐஸ் கிறீம் இருக்குதில்லே அதுவாங்கப் போகின்றேன்"

"ஐஸ்கிறீமா....அது எதற்கப்பா மூர்த்தி?" என்று கேட்டார் மூர்த்தியின் அப்பா

"வெளியே கடும் வெயில்லவா...ஐஸ்கிறீம் சாப்பிட்டால் குளிரும்......உடம்பெல்லாம் நடுங்கும்...ஒரே குஷியாக இருக்குமே!"

"அப்படியானால் இதற்கு ஐஸ்கிறீம் வாங்கப் பணத்தைக் கொட்டுவானேன்...... நான் ஒரு பயங்கரப் பேய்க் கதை சொல்லுகின்றேன். அதைக் கேட்டுக்கொண்டிரேன்......!"

[illegible]

— தேன்மொழி

# பொருட் செல்வம்

கல்விச் செல்வத்திற்கும் சந்தோஷமான வாழ்வை நடத்துவதற்கும் பொருட் செல்வமே மிக்க அவசியமானது. ஏன் மக்கள் இப்படிக் கஷ்டப்பட்டுக் கல்வி கற்க வேண்டும்? ஆம், பெறுதற்கரிய அரும் செல்வத்தைப் பெறவே கல்வி கற்கின்றனர். பொருள் இல்லையேல் கல்வி கற்று என்ன பயன்? எமதுசமூகக் கேடுகளில் வேலை இல்லாத் திண்டாட்டமே முதன்மையானது. கற்ற மாந்தர்கள் தாம் பெரிய பட்டதாரிகள் என்று எண்ணிக்கொண்டு வீட்டில் சும்மாஇருந்தால் போதுமா? பசிதீர்ந்துவிடுமா? ஒருசாண் வயிற்றுக்கு என்ன செய்வாரகள்? பாவம். வேலை தேடிப் பொருளீட்டித் தானும் மதிக்கப்பட்ட மனிதனக வாழ முயற்சிக்க வேண்டுமல்லவா?

மனிதன் தெரு வீதியிலே அலைகின்றான், அல்லற்படுகின்றான். ஒரு நாழி அரிசிக்காகக்கற்றவன்பிறர்வீட்டில் நின்று கை ஏந்தி அம்மா! தாயே! என்றுஇரக்கின்றான். ஆனால் கற்றவனுக்கு மனம் இரங்கவில்லையே. காலால் உதைத்துப் போ வெளியே என்று தள்ளுகின்றான். இதனால் கற்றவனும் கல் நெஞ்சு படைத்தவன் என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம் அல்லவா? பொருட் செல்வம் இருந்தால் மாந்தர் இப்படியான துன்பங்களை ஏன் அனுபவிக்கப் போகின்றனர்.

ஏழைகள் பசியால் வருந்துகின்றனர் என்று இரக்கப்பட்டால்மட்டும் போதுமா? ஏழைகளுக்கு ஈந்து அவர்கள் துயர் போக்கவேண்டாமா?

அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்றார் ஒரு பெரியார். இக்காலத்தில் கற்றவனும் பணமே பிரதானம் என்று பிணம்போன்று மயங்கிக் கிடக்கின்றான்.

இவைகளை நாம் நோக்குமிடத்து கல்விச் செல்வம் பொருட் செல்வத்தின் மேற்பார்வையில் இருக்கின்றது என்பது தெளிவாகிறதல்லவா?

— செல்வி எஸ். உம்முல் பாரி
கொழும்பு-12.

## மகிழ்ச்சி!

ஐயோ எங்கள் வீட்டில்
அன்பாய் வளர்ந்த பூனை
மியோ மியோ என்று
மிகவும் வருந்தக்கண்டேன்.

எட்ட நின்று பார்த்தேன்
ஏக்கம் மிகுந்த போல
பெட்ட கத்தி ஞேரம்
பிய்ந்த சில மேலே

குட்டி போட நோக்கும்
குறியை புணர்ந்து யானும்
பெட்டி யொன்றை வைத்துப்
போ நகன்று போனேன்.

விடியற் காலை மூன்று
வெள்ளைக் குட்டி தாயின்
மடியை முட்டிப் பாலை
மகிழ்ந்து குடிக்கக்
கண்டேன்.

செல்வி ச. மேரி
(வ. ம. இல. 956)
தன்னுழை

# வளர்மதி
## புதிய மருமக்கள்

1342 ஏ. எம். ஏ. ஜப்பார், சாய்ந்தமருது.

1343 செல்வி அ. கருணைதேவி, கம்பளை.

1344 டபிள்யூ. எஸ். பாலசுப்பிரமணியம்.

1345 வெ. சினிப்பண்டாரம், கேகாலை.

1346 பொ. இ. சிமியோன், குடத்தனை.

1347 க. ஞானரத்தினம், ஏலாளசேனை.

1348 தி. வ. அரியரத்தினம், சங்கானை மேற்கு.

1349 எம். ஜெயினுலாப்தீன், கடுகாஸ்தோட்டை.

1350 இ. பாலசிங்கம், களுவாஞ்சிக்குடி.

1351 செல்வி கு. பரமேஸ்வரி, கந்தரோடை.

1352 மு. உமறுதீன், பத்தா.

1353 எம். வேல்சாமி, மவுண்ட்லெவனியா.

1354 சி. பராசக்தி, பெரியமாவடி.

1355 பொ. சரஸ்வதி, பெரியகல்லாறு.

1356 எம். அரியமலர், கின்னையடி.

1357 சீ. கிருஷ்ணசாமி, யாழ்ப்பாணம்.

1358 எம். ஏ. எஸ். வஹா, பலாங்கொடை.

1359 அ. க. தேவேந்திரன், கொக்குவில்.

1360 க. சிவானந்தன், கொக்குவில்.

1361 பொ. நீற்ரு, எல்லாரசோகஞ.

1362 த. துரைசாமி, சித்தன்கேணி.

1363 க. இந்திரகுமார், தெகிவலை.

1364 அ. பாவாகுஞெயிதீன், மட்டக்களப்பு.

1365 எம். எஸ். எம். மஉரூப், துப்புளுவாவை.

1366 சி. கலைவாணி, வட்டுமேற்கு.

1367 த. அன்னரத்தினம், கோவிலாக்கண்டி.

1368 சி. சிவராசலிங்கம், நவாலி தெற்கு.

1369 அ. விர்மலை, அக்கரல்ல தோட்டம்.

1370 க. நீலாம்பிகை, நயினதீவு.

1371 தி. கேதாரகௌரி, நயினதீவு.

1372 கே. எம். கைறுதீன் உடத்தலவின்னை.

1373 க. வேலாயுதம், வப்பந்துறை.

1374 சி. கனகசபை, ஏழாலை தெற்கு.

1375 க. ஈஸ்வரானந்தம், கிளிநொச்சி.

1376 நா. ராஜகோபால், பதுளை.

1377 கு. நேசராசா, வவுனியா.

1378 பொ. சிவலிங்கம், கொக்குவில் மேற்கு.

1379 பா. யோகநாதன், காலாளை.

1380 ஏ. எச். நசீது, திருகோணமலை.

1381 சி. சந்திரசேகரன், நயினதீவு வடக்கு.

1382 எம் மீரா முகையதீன், வந்தாறுமூலை.

1383 எஸ். பி. சந்திரசேகரன், அக்குரஸ்ஸ.

1384 ந. வேலாம்பிகை, மருதானை.

1385 வ. சிவபாதராஜா, கல்கின்னை.

1386 சோ. அருண்மொழி, சரவணை மேற்கு.

1387 ச. அயூஜின், கரம்பன் மேற்கு.

1388 சோ. தேவிமனோரதி, திருகோணமலை.

1389 க. கோகிலம், மட்டக்களப்பு,

1390 ந. இஜ்னாஸ், கெக்கிறுவ.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

வளர்மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 3

பெயர்..........................................................

பாடசாலை..........................................................

விலாசம்..........................................................

..........................................................

.......................... ..........................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆட்சியாளரே, பகற் கனவு காணுதீர்!

## மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளரை நினைத்த மாத்திரத்தில் வெளியேற்ற முடியாது

## உங்கள் சட்டம்-ஸ்தூலபலம் ஒன்றும் இதற்கு உதவாது"

### இ. ஜ. கா. கூட்டுக் காரியதரிசி அறிவிப்பு

"இந் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எத்தனையோ வழிவகைகள் இருக்க, மலை நாட்டில் வாழும் தமிழ் தொழிலாளர்களை வெளியேற்றி அவர்களுக்குப் பதிலாக சிங்களத் தொழிலாளர்களை குடியேற்ற வேண்டுமென்று ஒரு சோஷலிச அரசாங்க மந்திரி என்று தம்மைக் கூறிக் கொள்ளும் திரு. டி. பி. இலங்கரத்ன பகிரங்கமாக கூறிவருகிறார். இவரது கூற்றை ஏற்க மறுக்கும் தோட்ட முதலாளிமார்களை பயமுறுத்தக் கூட திரு. இலங்கரத்ன துணிந்துவிட்டது மிக வெட்கக் கேடானதாகும்."

இவ்வாறு மாத்தளையைச் சேர்ந்த வாரியப்பொலைத் தோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் இ. ஜ. கா. கூட்டுக் காரியதரிசி திரு பெர்ணண்டஸ் பேசுகையில் கூறினர்.

திரு பெர்ணண்டஸ் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:

"மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களை நினைத்த மாத்திரத்தில் சட்டத்தின் மூலமாகவோ, அல்லது தன்னுடைய சமுதாயத்தின் புஜபல பராக்கிரமத்தினுலோ தோட்டங்களில் இருந்தோ அல்லது இலங்கையை விட்டோ வெளியேற்றிவிடலாம் என்று திரு இலங்கரத்னவோ அல்லது எம். இ. பி. அரசாங்கமோ நினைப்பார்களேயானுல் அது பகற்கனவாகவே முடியும்.

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தன்னுடைய பாராளுமன்ற ஸ்தானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தான் மந்திரி இம்மாதிரி பகுத்தறிவுக் கொவ்வாத விவாதத்தை பறைசாற்றி வருகிருர்.

இந்த நேரத்தில் அவருக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்கள் இந்நாட்டுக்கு வலிய வந்தவர்கள் அல்ல. இந்நாட்டு மக்களுக்குள்ள சகல உரிமைகளும் அளிப்போம் என வருந்தி அழைக்கப்பட்டவர்கள். இந்நாட்டு வாழ்வில் ஐக்கியப்பட்டவர்கள். நீங்கள் நினைத்த மாத்திரத்தில் எதையும் செய்துவிட முடியாதென்பதை நினைவுறுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இன்றும் மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்கள் தீர்த்த யாத்திரைக்காக இந்தியா சென்று திரும்புகையில் மண்டபம் முகாமில் வைத்து பச்சைக் கடுதாசியில் அச்சடிக்கப்பட்ட நோட்டீஸ் இலங்கை அரசாங்கத்தாரால் விநியோகிக்கப்படுகின்றது. அந்தநோட்டீஸில் கூட இங்கு சம உரிமை கொடுக்கப்படும் என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. இவைகள் யாவும் எதற்காக. மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களை ஏமாற்றவா அல்லது அரசியல் உலகத்தை ஏமாற்றவா என்று மந்திரியவர்களைக் கேட்கிறேன்"

---

### முஸ்லிம் சகாய நிதி இயக்கம்

"மனிதனுகப் பிறந்தவர்கள் இம் மானிலத்திற்குச் செய்ய வேண்டிய அவர் தம் கடமைகளினின்று தவறுவார்களேயாணுல், அதற்குரிய இலாப நட்டங்களை இம்மையில் அநுபவிக்காவிட்டாலும் மறுமையில் அவர்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்" என்று, கடந்த 3-3-57-ல் சென்ஸபஸ்தியான் மல்ஜாவுல் முஸ்லிமின் மதரஸாவில், சென்ஸபஸ்தியான் முஸ்லிம் சகாயநிதி இயக்கத்தின் ஆருவது ஆண்டு விழாவில் ஜனுப்கனீஹுன்றகுமான்பேசுகையில் குறிப்பிட்டார். முஸ்லிம்களுக்கென இது போன்ற இயக்கம் செய்துவரும் சேவைகளையும் பாராட்டினுர்.

கீக்காணும் உத்தியோகஸ்தர்கள் புதிய ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: எம். பி எம். ஹனிபா, தலைவர்: கே. ஐ. எம். அமீர் ஹம்ஸா, செயலாளர்: வி. எம். பி. சேக் முகிதீன், பொருளாளர்: சி. எம். புஹாரி, பணவசூலிப்பாளர்: ஏ. நெய்னு முகம்மது கணக்குப்பரிசோதகர்: எம். எஸ். ஹஜாமுகிதீன், இருப்பர்: பி. எம். அசன் முகிதீன்.

செயற்குழு உறுப்பினர்கள்: ஏ. சம்சுதீன், என் எம். முகம்மதுகாசீம், எஸ். என் புஹாரி, சி. எம். முகம்மது, பீ. எம். சேகு முகம்மது, எஸ். எம். மீரு முகிதீன், எம். ஏ. எம். காசிம், எம். எம். சரீப், எம். கே. எம். எம். ஆதம்.

---

### திஹாரியில் மீலுறுஜுந் நபிதினம்

திஹாரி முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் சார்பில் 2-3-57-ல் இவ்வூர் பெண் பாடசாலை மண்டபத்தில் மிஃறுஜுந்நபித் தினத்தைக் கொண்டாடும் முகமாக ஜனுப் எம். எல். ஏ. ஸமத் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கொழும்பு ஹனபிப் பள்ளி பேஷ் இமாம் மௌலானு மௌலவி ஹஸீலுற் றகுமான், மௌலானு ஹஸீலுற் றகுமான் ஹஸரத். மௌலவி ஏ. ஏ. எம். மஸ்ஹூத் ஆலீம் ஆகியோர் பேசிய பின்னர் ஜனுப் ஏ. எஸ். ஏ. ஹஸன் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

---

### செங்குந்த சைவ மாணவர் மன்றம்

திருநெல்வேலி செங்குந்த சைவ பாடசாலை மாணவர் மன்ற இரண்டாவது பொதுக் கூட்டம் சென்ற 6—3—57-ல் செல்வன் உமாபதி சிவம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 'சீதனம்' வேண்டுமென்று ஒரு பகுதியினரும், 'சீதனம்' வேண்டாமென்று மற்றொரு பகுதியாரும் விவாதித்தனர். இறுதியில் இருபகுதியாரும் சமமாகப் புள்ளிகள் எடுத்தனர்.

---

### தலைவாக்கொல்லையில் அண்ணுவுக்குப் பாராட்டு

காஞ்சிபுரம் தொகுதியில் வெற்றிபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் சி. என். அண்ணுத்துரையைப் பாராட்டும் முகமாக தலைவாக்கொல்லை தோட்டத்தில் தோழர் சீனு தலைமையில் 9-3-57-ல் ஓர் கூட்டம் நடைபெற்றது.

அந்நிய ஆட்சியிலே அல்லலுறும் தமிழர்களின் நல்வாழ்வுக்கு அறிஞர் அண்ணு குரலெழுப்புவார் என தோழர் ஆறுமுகம் கூறினுர்.

செல்வி அன்னபூரணம் எல்லோருக்கும் இனிப்பு வழங்கினுர்.

---

### புங்குடுதீவு வாலிபர் வளர்ச்சிக் கழகம்

கொழும்பு புங்குடுதீவு வாலிபர் வளர்ச்சிக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறை விழா தலைவர் சு. திருநாவுக்கரசு தலைமையில் கொழும்பு செக்கடித்தெருவிலுள்ள 210 தாம் கட்டிடத்தில் நடைபெற்றது.

திரு இ. கந்தையா ஆசிரியர் கழகத்தின் பிற்போக்கான நிலைமையை எடுத்துக் கூறியதுடன் கழக நோக்கங்களுக்கு அமைய ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் நிர்வாக சபை அங்கத்தினர் ஒன்பதாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதுடன் கடந்த நிர்வாக சபையில் கழகத்தின் பெயர் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு இணங்க இக் கழகத்தின் பெயர், புங்குடுதீவு வாலிபர் கல்வி கைத்தொழில் வளர்ச்சிக் கழகமென மாற்றியமைக்கப் பெற்றது.

கீழ்கண்டவர்கள் புது வருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: இ. கந்தையா ஆசிரியர், உபதலைவர்: நா. முத்துத்தம்பி, இணைக் காரியதரிசிகள்: க. தம்பிராசா, ச. சேதுநாதன், இணைத்தனதிகாரிகள்: சு. திருநாவுக்கரசு, ப. சண்முகநாதன். நிர்வாகசபை அங்கத்தினர்கள்: வே. பஞ்சலிங்கம், இ தியாகராசா, அ. சோமசுந்தரம். கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### முற்போக்கு வாலிபர் சங்கம்

முற்போக்கு வாலிபர் சங்க அங்கத்தவர்களின் கூட்டமொன்று சென்ற 3-3-57-ல் சங்க காரியாலயத்தில் திரு. தம்பு தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகஸ்தர்களாக கீழ்க்கண்டவர்கள் தெரிவு செய்யப் பட்டனர். திரு. வை. குமார், ஞா. செல்வராசு, (காரியதரிசிகள்) திரு. தம்பு, (பொருளாளர்) சு. கணபதிப் பிள்ளை, வேலுச்சாமி, (நிருவாக சபை அங்கத்தவர்கள்) "வருங்கால முன்னேற்றத்தில் இளைஞர்கள் பங்கு" என்ற பொருள் பற்றி பல அங்கத்தவர்கள் பேசிய பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

---

## பிரஜா உரிமை மனுக்கள் நிராகரிப்பு உச்ச நிலையில!

### 1000 ஏற்றுக்கொள்ளப்படும்போது 17622 மறுக்கப்படுகின்றன

### ஜூன் 56 லிருந்து ஜனவரி 57 வரை புள்ளி விபரம்

**தற்போது கிடைத்துள்ள பிந்திய புள்ளி விபரப்படி கடந்த வருடம் ஜூன் மாதத்திலிருந்து இவ் வருடம் ஜனவரி மாதவரையுள்ள கால எல்லைக்குள்ளேயே முன்னெருபோதுமில்லாத அளவு பெருந் தொகையில் பிரஜா உரிமை கோரி அனுப்பப்பட்ட மனுக்கள் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதாவது ஏற்றுக்கொள்ளப்படும் மனுக்கள் 10 0 என்றுல் நிராகரிக்கப்படும் மனுக்கள் 17226 என்ற விதத்தில் நிராகரிப்பு நடந்திருக்கிறது.**

1949 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 1957 ஜனவரி வரையுள்ள காலத்தில் 15,880 பிரஜா உரிமை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு மொத்தம் 155,848 மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. இதே காலத்தில் பிரஜா உரிமை கோரியவர்களுள் குழந்தைகள் உட்பட 58,003 பேர் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிருர்கள்; ஆனுல் 504, 306 பேர்களுக்குப் பிரஜா உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.

1956 ஜூனிலிருந்து 1957 ஜனவரிவரை யுள்ள காலத்தில் மொத்தம் 3,942 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு 68,004 மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒவ்வொரு 1000 மனுக்களுக்கும்மொத்தம் 17,226 மனுக்கள் வீதம் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய அதிகப்படியான நிராகரிப்பு முன் எக்காலத்திலும் நடந்ததில்லை.

பிரஸ்தாப காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனுக்களினது தொகையையும் நிராகரிக்கப்பட்டவற்றின் தொகையையும் கீழே மாதவாரியாகத் தருகிறேம்.

| வருடமும் மாதமும் | | ஏற்றுக் கொள்ளப் பட்ட மனுக்கள் | நிராகரிக்கப்பட்ட மனுக்கள் |
|---|---|---|---|
| ஜூன் | 1956 | 337 | 8158 |
| ஜூலை | ,, | 542 | 8923 |
| ஆகஸ்ட் | ,, | 408 | 8887 |
| செப்டம்பர் | ,, | 459 | 8020 |
| அக்டோபர் | ,, | 469 | 8311 |
| [illegible] | ,, | [illegible] | 8861 |
| [illegible] | ,, | 399 | 7945 |
| ஜனவரி | 1957 | 695 | 8899 |

---

### துறைநீலாவணை வாலிப முன்னணி

துறைநீலாவணை தமிழரசுக்கட்சி வாலிபர் முன்னணியின் ஆலோசனைக் கூட்டமொன்று 1—3—57-ல் முன்னணி காரியதரிசி இல்லத்தில் கூடியது. கூட்டத்திற்கு திரு தங்கையா தலைமை வகித்தார்.

தமிழ் இனத்துக்கு விமோசனம் கிட்டும்வரை தங்கள் போராட்டம் தொடர்ந்து நடைபெறுமென்று திரு நே. கந்தையா பேசுகையில் கூறினுர்.

திருவாளர்கள் பி. செல்வநாயகம், கா. இளையதம்பி, க. சாமித்தம்பி முதலியோரும் கூட்டத்தில் பேசினுர்கள்.

---

### 'பாரதி' இதழாசிரியருக்கு பிரிவுபசாரம்

'பாரதி' இதழாசிரியர் திரு ப. இராசையா தாயகமேகுவதை முன்னிட்டு தில்வீதி அரசினர் மத்திய கல்லூரியின் சிரேஷ்ட தராதரத் தமிழ் மாணவர்கள் அவருக்குப் பிரிவுபசாரமளித்தனர். கல்லூரியின் தமிழ் விரிவுரையாளர் திரு. கந்தசாமி கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

---

### பத்தமேனி கி மு சங்கம்

பத்தமேனி கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலையில் கடந்த 3-3-57ல் நடைபெற்றது. கூட்டத்திற்கு அச்சுவேலிக் கிராமச் சங்கத் தலைவர் திரு. ஏ. ஆர். மனுவேற்பிள்ளை தலைமை வகித்தார். கூட்டத்தில் திரு ந. சிவபாதம், திரு த. சிவலிங்கம் முதலியோர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் அவசியம்பற்றியும், கி. மு. சங்கங்கள் கிராமங்களுக்குச் செய்யும் சேவைபற்றியும் பேசினர்.

அதன் பின்னர் புது வருட உத்தியோகஸ்தர்கள்தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு அ. சரவணமுத்து. உப தலைவர்: திரு சி. மயில்வாகனம், காரியதரிசி: திரு ந. சிவபாதம், உபகாரியதரிசி: திரு த. சிவலிங்கம், தனதிகாரி: திரு நா. இரத்தினசாமி. ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை அங்கத்தினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

### ரெகுநாதபுரம் தி. மு. க. இலங்கை கிளை

ரெகுநாதபுரம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலங்கை நீர்கொழும்பு கிளையின் முதற் கூட்டம் கடந்த 3-3-57 நீர்கொழும்பு பூந்தோட்டத்தில் கூடி அதன் நிர்வாகிகளை தேர்ந்தெடுத்தது.

தோழர் கோவிமாரி முத்து செயலாளராகவும், பொ. பாண்டியன் துணைச் செயலாளராகவும், வயி. தங்கராசன் பொருளாளராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டங்களுக்கு பூரண ஆதரவு கொடுப்பதெனவும், போராட்டங்களில் பங்கெடுத்துக் கொள்வதெனவும், ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் அரிய திரை விருந்து!

# மகத்தான 4வது வாரம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெம்பிளி** (கண்டி) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **ஜுபிடர்** (குருநாகல்) **ஸ்ரீபாத** (ஹட்டன்) **ரத்னவெளி** (ஜா-எல)

ஆகிய திரைகளில்

ஜெமினி கணேசன்
ஏ. நாகேஸ்வரராவ்
எஸ். வி. ரங்கராவ்
கே. ஏ. தங்கவேலு
கே. சாரங்கபாணி
பிரண்ட் ராமசாமி
மற்றும்



அஞ்சலி தேவி
சாவித்திரி
பி. கண்ணாம்பா
எம். என். ராஜம்
கே. ஆர். செல்லம்
எஸ். டி. சுப்புலெட்சுமி
முதலியோர் நடித்தது

லலிதா பிலிம்ஸாரின்

# மாதர்குல மாணிக்கம்



நடனங்கள்
ராகிணி
கமலா
லக்ஷ்மணன்
ரீடா
ஆகியோர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 மார்ச் மாதம் 24ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.